




Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 92 பிலவ வருடம், பங்குனி மாதம் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (27.03.2022) ஹிஜ்ரி-1443, ஷஃபான் - 23, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.50



உளவியல் ஆலோசனைகள்

உங்களுக்கு வெளியில் சொல்ல முடியாத பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் எங்களோடு தொடர்பு கொண்டு தீர்வுகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

Dr Mohamed Ibrahim
Psychological Counselors

WhatsApp/Call
0777 313 950

Colombo 06,
Sri Lanka


# புலம்பெயர் தமிழர்கள் அச்சமின்றி வரலாம்!



- இலங்கையில் முதலீடு செய்ய ஜனாதிபதி கோட்டாபய பகிரங்க அழைப்பு
- அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென தமிழனுக்கு விசேட பேட்டி

**- நமது அரசியல் செய்தியாளர் -**

புலம்பெயர் தமிழர்கள் அவர்களின் தாய்நாடான இலங்கையில் முதலீடு செய்யலாம். கடந்த காலங்களில் அவர்கள் இங்கு வந்து முதலீடு செய்ய முயன்று அவர்களுக்கு பாதுகாப்போ அல்லது இதர பிரச்சினைகளோ எதுவும் இருந்து வராமல் போயிருந்தால் அவர்களை இலங்கை வருமாறு நான் அழைப்பு விடுக்கிறேன். அவர்களின் பாதுகாப்பை எமது அரசாங்கம் உறுதி செய்யும்.

இவ்வாறு நேற்றுத் தமிழன் பத்திரிகையிடம் கருத்துத் தெரிவிக்கும்போது குறிப்பிட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கான விசேட நிதியமொன்று உருவாக்கம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டமை பற்றி கேட்டபோதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

புலம்பெயர் தமிழர்களின் உதவியுடன் இந்த நிதியம் உருவாக்கப்படுதல் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

02 ஆம் பக்கம்



எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்காக மூதூர் மத்திய கல்லூரி வளாகத்தில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நேற்று (26) நாள் முழுவதும் காத்திருந்தனர்.

# இ.தொ.காவுக்கு புதிய தலைவர் நியமனம்

## 30இல் பொதுச்சபை கூடி தீர்மானம்

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



பிள்ளையாரின் கலியாணம் மாதிரி இழுபட்டுக்கொண்டே போன "கோட்டா -சம்பந்தன்" சந்திப்பு ஒருமாதிரி சரிவந்துவிட்டது.

இந்த பத்தியை மணியத்தார் எழுதுகின்ற போது; கோட்டா - சம்பந்தன் சந்திப்பு நிகழ்ந்துகொண்டிருக்கும்.

ஆண்டாண்டுகாலம் ஆளும் பேரினவாத சிறிலங்கா அரசு தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். உடன்படிக்கைகளில் கையெழுத்து வைச்சிருக்கினம். பிறகு அவை அதே பேரினவாத அரசுகளால் கிழித்து குப்பையில் போடப்பட்டன.

இதுதான் வரலாறு.
இதுதான் யதார்த்தம்.

அதுபோலத்தான் கோட்டா - சம்பந்தன் சந்திப்பும் அதன் பின்னரான உடன்பாடும் அமையக்கூடும்.

உண்மையிலேயே கோட்டாபய நினைச்சிருந்தால்;

ஒரு அரசியல் தீர்வை போனவருசம் முடிவதற்கு இடையில் வைத்திருக்கவேண்டும்.

கூட்டமைப்பையும், ஏனைய தமிழ்த்தலைவர்களையும் அழைத்துப் பேசியிருக்க வேண்டும்.

போன வருடம் பல "நல்லெண்ண சமிக்ஞைகளை" தமிழர்களுக்குக் காட்டியிருக்கவேண்டும்.

செய்யவில்லை.

காரணம் கோட்டாபய "பேரினவாத" திமிரோடு கதிரையில் காலாட்டிக் கொண்டிருந்தார்.

இப்போது நாட்டின் பொருளாதாரமும், அரசியல் பலமும் படு பாதாளத்தில் விழுந்துகிடக்கும் நிலையில்;

கோட்டாபயவுக்கு....
"சர்வகட்சி மாநாடும்"
"சம்பந்தருடனான சந்திப்பும்" அவசியம் தேவைப்படுகிறது.

வீதியில் இறங்கி நிக்கிற சனம் தொடக்கம் சமூகவலைத்தளங்களில் உலாவும் சனம் வரை இந்த அரசைப் பார்த்து "காறித் துப்புகிறார்கள்"!

மண்ணை வாரி எடுத்து எறிந்து சாபமிடுகிறார்கள்.

நீண்ட வரிசையில் எரிபொருளுக்கும், எரிவாயுவுக்கும் கால் கடுக்க நிற்கும் மக்கள் "வயிறெரிந்து" திட்டுகிறார்கள்.

07 ஆம் பக்கம்

# பெற்றோலின் விலையை மீண்டும் அதிகரித்தது ஐ.ஓ.சி.

**- நமது நிருபர் -**

அனைத்து வகையான பெற்றோல்களின் விலைகளையும் 49 ரூபாவால் அதிகரித்துள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் நேற்று முன்தினம் (25) நள்ளிரவு முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளது.

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கம்




கொழும்பில் வெள்ளிக்கிழமை நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஹெல உறுமய கட்சியின் முன்னாள் எம்.பி. கருணாரத்ன பரணவிதான, ரணிலிடம் சைகையில் ஏதோ சொல்ல முயல்கிறார். (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)

# பேராபத்திலிருந்து மீள்வதற்கு உடனடி தீர்வுத்திட்டம் அவசியம்

## சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

02 ஆம் பக்கம்

# 2000 தொன் அரிசி சீனாவிடமிருந்து!

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 2000 தொன் அரிசியை இலங்கைக்கு வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கம்

# கடதாசி தட்டுப்பாடு; நீர்க்கட்டணம் குறுஞ்செய்தியில்!

**- நமது நிருபர் -**

கடதாசி தட்டுப்பாடு காரணமாக நீர்க்கட்டணங்களை அச்சிட முடியாத நிலை உருவாகியுள்ளதால், கையடக்கத் தொலைபேசி ஊடாக குறுஞ்செய்தியில் வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

02 ஆம் பக்கம்

# இந்திய வெளிநாட்டமைச்சர் ஜெய்ஷங்கர் நாளை கொழும்புக்கு

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் நாளை இலங்கை வரவுள்ளார். இலங்கை அரசானது, ஐந்தாவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்துகின்றது. அதில் கலந்துகொள்ள இலங்கை வரும் ஜெய்ஷங்கர், ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல அரசியல் பிரமுகர்களை சந்திப்பார்.



02 ஆம் பக்கம்







கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்

தற்போது
விற்பனையில்




விலை ரூ.40/=
தொடர்புகளுக்கு :
0777 983308 - விநியோகப்பிரிவு

# இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுதலை செய்யக் கோரி இராமேஸ்வரத்தில் போராட்டம்

## கடலுக்கு சென்றோர் கடற்படையினரால் நிர்வாணப்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டு



- மன்னார் நகர் செய்தியாளர் -

இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையைக் கண்டித்து இலங்கை சிறையிலுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் நேற்று (26) இராமேஸ்வரம் பஸ் நிலையத்துக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மீனவர்களின் உறவினர்கள் சிறையிலுள்ள தங்களது உறவுகளை படகுடன் விடுதலை செய்யக் கோரி கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்த தமிழக மீனவர்களை நிர்வாணப்படுத்தி விசாரித்த இலங்கை அரசுக்கு இராமேஸ்வரம் மீனவ சங்கம் கடும் கண்டம் வெளியிட்டுள்ளது.

இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த புதன்கிழமை காலை சுமார் 400 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடி அனுமதிச்சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். மீனவர்கள் அன்றிரவு தனுஷ்கோடிக்கும், இரணைதீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதிகளை சேர்ந்த 16 மீனவர்களை கைதுசெய்து அவர்களது 2 மீன்பிடி விசைப்படகுகளையும் கைப்பற்றினர்.

இந்தக் கைது நடவடிக்கையைக் கண்டித்து சிறையிலுள்ள மீனவர்களின் உறவினர்கள் இராமேஸ்வரம் பஸ் நிலையம் எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தி இலங்கை அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மீனவர்களின் உறவினர்கள் சிறையிலுள்ள மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்யக் கோரி கண்ணீர் மல்க மத்திய, மாநில அரசுகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை இலங்கை அரசு நிர்வாணப்படுத்தி விசாரிப்பதாகவும், கைதுசெய்யப்படும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி தகாத வார்த்தைகளால் திட்டுவதாகவும் இலங்கை சிறையிலிருந்து விடுதலையான மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கடதாசி தட்டுப்பாடு...

மூன்று மில்லியன் வாடிக்கையாளர்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதாகவும், அவர்களில் இரண்டரை மில்லியன் வாடிக்கையாளர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதாகவும் அச்சபை குறிப்பிட்டுள்ளது. அவர்களுக்கு கட்டணப் பட்டியல்களை வழங்குவதற்கு ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மூன்று மாதங்களுக்கு கட்டணப் பட்டியல்களை விநியோகிக்கத் தேவையான கடதாசி கையிருப்பில் உள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார். அதன் பின்னரான நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இ.தொ.கா.வுக்கு புதிய...

- நமது விசேட செய்தியாளர் -

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவி ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர் வெற்றிடமாக இருந்துவருகின்ற நிலையில், புதிய தலைவரை தெரிவுசெய்வதற்காக அக்கட்சியின் பொதுச்சபை எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை கூடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கட்சியின் தலைவராக செயற்பட்ட ஆறுமுகன் தொண்டமான் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி காலமானார். அதன் பின்னர் தலைமைப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் பல்வேறு கருத்தாடல்கள் இருந்தபோதும், இதுவரை அப்பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

எதிர்வரும் 30 ஆம் திகதி கொட்டகலை சி.எல்.எப்பில் கூடவுள்ள பொதுச்சபையில் ஏனைய பதவிக்குரிய உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தின் பங்காளியாக இருப்பதா, இல்லையா என்பது தொடர்பிலும் அன்றைய தினம் பேசப்படவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

உதவி ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்காமை, தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பளத்தை உரிய வகையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்காமை, நுவரெலியாவில் பிரதேச செயலகங்களை அதிகரிக்காமை, கோதுமை மா மானியமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டபோதும், அதனை அனைத்து தோட்டங்களுக்கும் பெற்றுக்கொடுக்க முடியாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அரசாங்கத்தின் மீது இ.தொ.கா. அதிருப்தியில் இருப்பதாக அக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' வார இதழுக்குத் தெரிவித்தார்.

## 2000 தொன் அரிசி...

இலங்கையின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு சீன அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலங்காலமாக இரு நாடுகளும் பரஸ்பரம் ஆதரவளித்து வருவதால் சீன அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

## பேராபத்திலிருந்து...

- நமது விசேட செய்தியாளர் -

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியினால் பேராபத்தான சூழ்நிலை உருவாகுமென தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், அதனைத் தவிர்ப்பதற்கு மிக அவசரமான தீர்வுத்திட்டமொன்று அவசியமென வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பாக வொஷிங்டனில் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டதாவும், அதனடிப்படையில் நோக்கும்போது பாதுகாப்பான நிதி நிலைமையை உடனடியாக ஏற்படுத்துவது கடினமெனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும் முறையான திட்டமிடல்கள், ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டு ஓரிரு ஆண்டுகளில் சீரான தன்மையை ஏற்படுத்த முடியுமென அவ்வமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கு நம்பகமான, ஒத்திசைவான மூலோபாயம் அவசியம் என அந்நிதியம் தெரிவித்துள்ளது. மேலும், கடனை மீளச் செலுத்துவதற்கான சவாலில் ஆபத்தான சூழ்நிலையை இலங்கை எதிர்நோக்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் நெருக்கமான உறவை எதிர்பார்த்துள்ளதாகவும், அவர்களின் தலையீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## பெற்றோலின் விலையை...

அதனடிப்படையில் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 303 ரூபாவாகவும், ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 332 ரூபாவாகவும், யுரோ 03 ரக பெற்றோலின் விலை 312 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## புலம்பெயர் தமிழர்கள்...

இதனைப் பற்றி தொடர்ந்து பேசி தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டும்.

புலம்பெயர் தமிழர்கள் எமது நாட்டில் பிறந்தவர்களே. அவர்களுக்கு இந்த நாட்டில் எதனையும் மேற்கொள்ள உரிமையுண்டு. அவர்கள் இங்கு வருவதற்கோ அல்லது இங்கு வந்து முதலீடுகளை செய்வதற்கோ அச்சப்பட தேவையில்லை. அவர்களின் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும். அதனை உறுதி செய்யும். இது தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்மிடம் முன்வைக்கலாம். அவற்றை கவனிக்க அரசு தயாராக இருக்கிறது. அதன் மூலம் புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளை தருவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அரசாங்கம் உருவாக்கும் - என்றார் ஜனாதிபதி கோட்டாபய.

## இந்திய வெளிநாட்டமைச்சர்...

பலதுறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டை இலங்கை அரசாங்கம் அடுத்த வாரம் 2022 மார்ச் 28-30 வரை கொழும்பில் நடத்தவுள்ளது.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு அமைச்சர்கள் முறையே 2022 மார்ச் 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் சிரேஷ்ட அதிகாரிகள் சந்திப்பு மற்றும் அமைச்சர்கள் சந்திப்பிற்காக இலங்கைக்கு வருகை தரவுள்ள அதேவேளை, மியன்மாரின் வெளிநாட்டு அமைச்சர் இந்த மாநாட்டில் இணைய வழியாகப் பங்கேற்பார்.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களின் மெய்நிகர் பங்கேற்புடன் 2022 மார்ச் 30ஆம் திகதி 5ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டிற்கு இலங்கையின் ஜனாதிபதி தலைமை தாங்குவார். இந்த உச்சி மாநாட்டில் மியன்மாரின் வெளிநாட்டு அமைச்சர் அந்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்.

உச்சிமாநாடு மற்றும் தொடர்ச்சியான கூட்டங்களின்போது, பிராந்தியக் குழுவாக பிம்ஸ்டெக் அடைந்து கொண்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து பிரதிநிதிகள் கலந்துரையாடுவர்.

இந்த உச்சிமாநாட்டின்போது, பிம்ஸ்டெக் சாசனம் ஏற்கப்பட்டு, பல சட்ட ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படும் என மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.




# மலையகத்தில் கடும் வறட்சி; நீரை சிக்கனப்படுத்தக் கோரிக்கை



- செ.தி. பெருமாள், க.கிஷாந்தன் -

மலையகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையினையடுத்து காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர் தாழிறங்கியுள்ளது. இதனால் நீரில் மூழ்கிக் கிடந்த பல கட்டடங்களின் அடையாளங்கள், ஆலயங்கள், தீவுகள் ஆகியன தோற்றம் பெற்றுள்ளன.

குறித்த நீர்த்தேக்கத்தில் நேற்றைய தினம் வரை 12.4 சதவீத நீர் மாத்திரமே எஞ்சியிருப்பதாக மின்சாரத்துறை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக வறட்சியான காலநிலை நிலவுவதால் இந்நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் மேலும் குறைவடையலாம் எனவும், எனவே, நீரை மிகவும் கவனமாகப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதன் காரணமாக தற்போது மின் துண்டிப்பு இடம்பெற்று வருகின்றது. கடந்த காலங்களில் ஐந்து, ஆறு மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், எரிபொருள் மற்றும் நீர்த்தேக்கங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக 10 மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இதேநேரம் மலையகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையினையடுத்து நீரோடைகள், நீரூற்றுகள் ஆகியனவும் வற்றிப்போய் உள்ளன.

இதனால் தற்போது பல பிரதேசங்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிவரும் வறட்சியான காலநிலையினையடுத்து மவுசாகலை நீர்த்தேக்கத்தில் 29.7 சதவீதம் நீர் மாத்திரமே எஞ்சியிருப்பதாகவும், கொத்மலை நீர்த்தேக்கத்தில் 21.5 சதவீதமும், விக்டோரியா நீர்த்தேக்கத்தில் 33.2 சதவீதமும், ரந்தனிகலை நீர்த்தேக்கத்தில் 56.1 சதவீதமும், சமனலவெனவில் 14.6 சதவீத நீர் மாத்திரமே எஞ்சியிருப்பதாகவும் தற்போது அதிகமான நீர்த்தேக்கங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்



- யாழ். செய்தியாளர் -

பொருட்களின் விலையேற்றத்திற்கும், பொருளாதார நெருக்கடிக்கும் எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் எதிரில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க தமிழர் தேசத்தை அங்கீகரி, எமது இனத்தை அழிக்கப் பெற்ற ஆயுதங்களுக்கு தமிழர்கள் பொறுப்பாளிகளா?, அன்று ஆயுதத்தால் அழித்தாய் - இன்று பட்டினியால் அழிக்கிறாய், தமிழர் தேசத்தை அங்கீகரித்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர்கள் முதலிடுவர் போன்ற கோஷங்கள் எழுப்பபட்டன.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணை காப்பாற்றச்சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கிப் பலி

## - தெஹியோவிட்டவில் சம்பவம் -

- அருண் யுகேஷ் -

ஆற்றில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் பெண்ணொருவரைக் காப்பாற்ற முயன்று நீரில் மூழ்கிப் பலியான சம்பவம் தெஹியோவிட்டவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சீதாவக ஆற்றின் தெஹியோவிட்ட யோகம பாலத்திற்கு அருகில் இந்த இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாத்திரை சென்ற குழுவினரில் நீரில் மூழ்கிக் கொண்டிருந்த பெண்ணை இரண்டு இளைஞர்கள் காப்பாற்ற முயற்சித்துள்ளனர். இதன்போது, காப்பாற்றச் சென்ற இரண்டு இளைஞர்களும் நீரில் மூழ்கியுள்ளனர். பின்னர் பிரதேசவாசிகளால் மூவரும் மீட்கப்பட்டு அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இரு இளைஞர்களும் உயிரிழந்ததாக தெஹியோவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். ராஜகிரிய மற்றும் கொழும்பு - 12 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.






## * சர்வகட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டா, ரணிலிடம் மன்னிப்புக் கோரியதன் பின்னணி..

## * தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பில் நடந்த முக்கிய விடயங்கள்..

## * மக்கள் எங்களைத் தாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது - ஆளுங்கட்சிக் கூட்டத்தில் புலம்பிய எம்.பி.

## * சஜித்தின் செயற்குழுக் கூட்டத்தை புறக்கணித்த ஹரீன், மனுஷ, தலதா

## * ரணிலின் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்ட ஹெல உறுமய பிரமுகர்கள்

கொழும்பு அரசியலில் கடந்த வாரம் நடந்த இரண்டு விடயங்களில் ஒன்று சர்வகட்சிக் கூட்டம். அடுத்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பு.





### சர்வகட்சி மாநாடு

சர்வகட்சிக் கூட்டத்தில் அடித்து ஆடியவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ஐக்கிய மக்கள் சக்தி உட்பட்ட கட்சிகள் இந்தக் கூட்டத்தை புறக்கணித்திருந்த போதிலும் ரணில், சம்பந்தன் உட்பட்ட சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டதால் கூட்டம் களைகட்டியது.

சர்வதேச நாணய நிதிய அறிக்கையினை ரணில் கோரியதும் ஆரம்பத்தில் அதற்கு மறுப்பினை வெளியிட்ட நிதியமைச்சர் பெசில், வெறும் வரைவு மட்டுமே கிடைத்திருந்ததாக கூறினார்.

"நாணய நிதியத்திடமிருந்து எதுவுமே கிடைக்கவில்லை என்றீர்கள். இப்போது வரைவு மட்டும் கிடைத்ததாகக் கூறுகிறீர்கள். அதனைத் தாருங்கள்.." என்று பெசிலை நோக்கிக் கூறினார் ரணில். "அப்படியானால் உங்களுக்கு ஒரு பிரதியை தரவா?" என்று பெசில் கேட்க, "இல்லையில்லை, எனக்கு வேண்டாம்.. அதனை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பியுங்கள்" என்று ரணில் பெசிலிடம் கூறினார்.

தனி யானையொன்றின் பலம் குறித்து ஒரு கதையொன்றை கவிதையாக இங்கு வாசித்துக் காட்டினார். ரணில் தனி ஆளாக வந்து இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு, கம்பீரமாக செயற்பட்டதையே பெசில் அதனூடாக மறைமுகமாக பாராட்டினார் என்று பின்னர் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது.

இந்த சர்வகட்சி கூட்டத்தில் கலந்துகொள்ளும் எண்ணம் ரணிலுக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை. ஆனால், நாடாளுமன்றத்தில் ரணிலை சந்தித்துப் பேசிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தக் கூட்டத்தில் கட்டாயம் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதனையடுத்தே இதில் ரணில் கலந்துகொண்டாலும், கூட்டத்தின் ஆரம்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கப்ரால் தெரிவித்த கருத்துகள் ரணிலுக்கு அதிருப்தியை ஏற்படுத்தின.

கடந்த ஆட்சியை ஆளுநர் விமர்சித்த காரணத்தினால் விசனமடைந்த ரணில், "கடந்த காலங்களைக் குறை சொல்லிக்கொண்டே, அல்லது அவற்றுக்கு பதிலளித்துக்கொண்டிருந்தால் இறுதியில், விஜயன் இலங்கைக்கு வந்ததே எல்லாவற்றுக்கும் காரணமென கூறவேண்டியிருக்கும்" என்று விளாசினார். இதனையடுத்து ஆளுநர் கப்ராலின் கருத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய, ரணிலிடம் மன்னிப்புக் கோரினார்.

ஜனாதிபதி கோட்டாபய சற்று கடும்போக்கு கொண்டவர். அவர் எவரிடமும் இலேசாக மன்னிப்பை கோரமாட்டார். அதிலும் தான் செய்யாத ஒன்றுக்காக





அவர் மன்னிப்புக் கோரவே மாட்டார். அப்படியான நிலையில், அவர் ரணிலிடம் மன்னிப்பைக் கோரியதற்குக் காரணம், சர்வகட்சிக் கூட்டத்தில் ரணில் கலந்துகொண்டமைதான். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட்ட தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள வலியுறுத்தியவரும் ரணில்தான் என்பதால் அதனை ஜனாதிபதி மதித்துச் செயற்பட்டாரென ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சர்வகட்சிக் கூட்டத்தில் தமிழர் தரப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் இரா.சம்பந்தனும், புளொட் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தனும் உரையாற்றினர்.

நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது ஜனாதிபதிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஏதோ பேசினார்.

சற்று நேரத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரும், மஹிந்த ராஜக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலம் முழுவதும் ஜனாதிபதியின் செயலாளராகப் பணியாற்றியவருமான லலித் வீரதுங்க எழுந்து வந்து சம்பந்தன் அருகிலிருந்த சுமந்திரனின் காதுக்குள் கிசுகிசுத்தார்.

"நீங்களும் உரையாற்ற வேண்டுமென்று ஜனாதிபதி விரும்புகின்றார்" – என்றார் லலித் வீரதுங்க. அதற்குத் தலையசைத்தார் சுமந்திரன்.

சற்று நேரத்தில் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, "அடுத்து சுமந்திரன் பேசுவார்" என்று அறிவித்தார்.

பொருளாதார நெருக்கடித் தீர்வு தொடர்பில் சில, பல முக்கிய விடயங்களை விவரித்தார் சுமந்திரன்.

இந்த விடயத்தைப் பற்றி ஆராய்வதற்காக தாமே முன்னின்று இரண்டு மாதங்களுக்கு முன்னர் எதிரணித் தலைவர்களைக் கூட்டி கலந்துரையாடல்களை நடத்தியமையை நினைவு கூர்ந்த சுமந்திரன், அந்தக் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிகளை கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு இரண்டு கட்டங்களில் அணுகப்பட வேண்டும் என்றார் சுமந்திரன். ஒன்று – உடனடி நடவடிக்கைகள். நாட்டின் வெளிநாட்டுக் கடன் கடப்பாடுகளை – மீள் செலுத்துகைப் பொறுப்புக்களை – சாத்தியமான வழியில் தள்ளிப்போட்டு, அதற்கான நேர அட்டவணையை மீள ஒழுங்குபடுத்த வேண்டும். அந்தப் பணியை இதற்கென தகுதி பெற்ற சர்வதேச சட்டத்தரணிகள் மூலம் கையாளலாம். 2022இற்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் பிழைத்துப் போய்விட்டது. அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு பெருந்தொகை நிதியை செலவிடும் முறைமையை நிறுத்தி, மக்களுக்கு உடனடி நிவாரணமளிக்கும் வரவு – செலவுத் திட்டம் ஒன்றை விசேடமாகத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும் – என்பவை உட்பட பல விடயங்களை உடனடி நடவடிக்கைகளுக்கான திட்டங்களாக சுமந்திரன் விவரித்தார்.

அடுத்தது – நீண்டகாலத் திட்டம். சம்பந்தன் ஐயாவும், சித்தார்த்தனும் இங்கு குறிப்பிட்டதைப் போன்று அதிகாரப் பகிர்வின்றி அபிவிருத்தி, பொருளாதார சுபீட்சம் எல்லாம் சாத்தியமற்றவை. அவை பற்றி இங்கு நான் விவரிக்கப்போவதில்லை. ஏனென்றால், அந்த விடயங்கள் குறித்துத்தான் விரைவில் நாம் ஜனாதிபதியுடன் நேரில் பேசப் போகின்றோம் – என்று சுமந்திரன் அறிவித்தார். உடனே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பலமாகத் தலையை ஆட்டி அதனை ஆமோதித்தார்.

### கூட்டமைப்பு - கோட்டா பேச்சு

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும் இடையில் நேரடி சமரசப் பேச்சுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை மூன்று மணிநேரம் நடைபெற்றன. தமிழ்க் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய நான்கு உடனடிப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணவும், அதன் பின்னர் அடுத்து அரசியல் தீர்வு குறித்து அடுத்த கட்டத்தில் ஆராயவும் இந்தப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆகிய கட்சிகளுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குமிடையில் வெள்ளிக்கிழமை காலை இந்த கலந்துரையாடல் நடைபெற்றது. ரெலோ இந்தக் கூட்டத்தை புறக்கணித்திருந்தது.



ஜனாதிபதி செயலகத்தில் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இந்தச் சந்திப்பு நடந்தது. ஜனாதிபதி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் சமல் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், அலி சப்றி ஆகியோர் அரச தரப்பில் பேச்சில் கலந்து கொண்டனர். தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இராசபுத்திரன் சாணக்கியன், தவராசா கலையரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், தமிழர்களின் இனப்பிரச்சினை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அரசுகள் மாறி மாறி ஏமாற்றி வரும் வரலாற்றைத் தெரிவித்தார்.

### அரசியல் தீர்வு

இரு தரப்பு கருத்து பகிர்வின் பின்னர், அரசியல் தீர்வு குறித்து முதலில் பேசப்பட்டது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளது. அது இப்போது மொழிபெயர்ப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது வந்ததும் அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தலாம் என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து வெளியிட்டார். அந்த மொழிபெயர்ப்புடன் அந்த யோசனை வெளிவருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சம்பந்தன் கேட்டார். இரண்டு மாதங்கள் என்று பதில் அளிக்கப்பட்டது.

அப்படியானால், அரசியல் தீர்வு விடயத்தை இரண்டு மாதம் கழித்துப் பேசலாம். அதற்கு முன்னர் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் பற்றி பேசுவோம். அவற்றிற்கு தீர்வு கண்ட பின்னர் அதிலிருந்து அரசியல் தீர்வு பற்றிப் பேசலாம் என்று இரண்டு தரப்பினரும் இணக்கம் கண்டனர்.

அரசியல் பிரச்சினைகள் பற்றிய பேச்சுகள் ஆரம்பமாக முன்னர் உடனடியாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை முன்வைத்தால் அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதியும் குறிப்பிட்டார். அந்த அடிப்படையில் நான்கு விடயங்கள் குறித்துப் பேசப்பட்டன.

### கைதிகள் பிரச்சினை

தமிழ் அரசியல் கைதிகளின் விவரத்தை கூட்டமைப்புத் தூதுக்குழு சுட்டிக்காட்டியது. கூட்டமைப்பினிடம் நேற்று அரசியல் கைதிகள் விவரம் உறவினர்களால் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த விவரத்தின் அடிப்படையில் 48 அரசியல் கைதிகள் 10 வருடங்களிற்கும்



மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும், இன்னும் பலர் வழக்கு தொடரப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பால் சுட்டிக்காட்டப்பட்டது.

நீண்ட காலமாக பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்றியையும், சுமந்திரனையும் – ஒவ்வொரு கைதியின் விடயத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து, புதிய பரிந்துரையைக் கூட்டாகத் தமக்குச் சமர்ப்பிக்கும் படி கூறினார் ஜனாதிபதி. அந்தப் பரிந்துரைப்படி தாம் நடவடிக்கை எடுப்பார் என்றார் அவர். வழக்கு இருப்பவர்களை ஒன்றும் செய்ய முடியாது, ஏனையோரை விரைந்து உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

அண்மையில் கைதுசெய்யப்பட்டவர்கள் கூட – குற்றஞ்சாட்டப்படாதோரை நாங்கள் விடுவித்துக் கொண்டிருக்கின்றோம் என்றார் அமைச்சர் சப்றி. நாங்கள் தொடர்ந்து அதைச் செய்வோம், அடுத்த கூட்டத்திற்கு முன்னர் அந்த கைதிகளின் விடுதலையில் காத்திரமான முன்னேற்றம் இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.



### நில அபகரிப்பு

அடுத்து நில அபகரிப்பு சம்பந்தப்பட்ட விடயம் கூறப்பட்டது. வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பு தொடர்பில் கூட்டமைப்பினர் விலாவாரியாக எடுத்துரைத்தனர். இராணுவம் ஒரு பக்கமாகவும், தொல்லியல் திணைக்களம் ஒரு பக்கமாகவும், வனவள திணைக்களம் ஒரு பக்கமாகவும் காணி அபகரிப்பு செய்கிறார்கள், வயல் நிலங்கள், வணக்கத் தலங்கள், குடியிருப்புகள் எனப்பல இடங்களை மக்கள் நுழையத் தடைவிதிப்பதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில், ஜனாதிபதியும், பிரதமரும், இப்படியான விடயத்தைத் தாம் அறிந்திருக்கவில்லை என்ற பாணியில் கருத்துத் தெரிவித்தனர்.

'இராணுவத்தினர் காணி சுவீகரிக்கிறார்களா? அவர்களுக்கு எதற்குக் காணி?' என ஜனாதிபதி ஆச்சரியமாக கேள்வியெழுப்பினார்.

வயல் நிலங்களை சுவீகரிப்பது, மக்கள் நுழைய தடைவிதிப்பதெல்லாம் ஏற்க முடியாத நடைமுறைகள் என ஜனாதிபதியும், பிரதமரும் தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கில் இடம்பெறும் சகலவிதமான காணி சுவீகரிப்பையும் நிறுத்த உத்தரவிடுமாறும், இது விடயமாக கூட்டமைப்புடன் கலந்துரையாடல் நடத்தி அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனவும் கூட்டமைப்பு கோரியது.

உடனடியாக, அதற்கான நடவடிக்கையை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்...

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

# பொறுப்பற்றவர்களின் கைகளில் நாடு!

நாட்டில் பணவீக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துச்செல்கிறது. இதனால் பொருட்கள், சேவைகளின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

பொருட்களுக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்தாலும், அதன் விலையேற்றத்தைத் தடுக்க முடியாதளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

பணவீக்கம் என்பது ரூபாவின் மதிப்பிறக்கமாகும். பொருளியல் தொடர்பான சொல்லாடல்களில் இந்த வார்த்தையை நாம் அதிகம் கவனித்திருந்தாலும் அது என்னவென்பதை ஆராயாமல் கடந்துவந்திருப்போம்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை இந்தப் பணவீக்கமே தீர்மானிக்கிறது. இது அதிகரிக்குமாக இருந்தால், பொருளாதாரம் வீழ்ச்சியை நோக்கிப் பயணிக்கிறது என்று அர்த்தம்.

உதாரணமாக ஆயிரம் ரூபா பணத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் எத்தனை பொருட்களை கொள்வனவு செய்தோம் என்பதையும், இந்தக் காலத்தில் எத்தனை பொருட்களை வாங்குகிறோம் என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதால் பொருளாதார ஸ்திரத்தன்மையை அது வெகுவாக பாதித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம், அரசாங்கம் பெருமளவில் பணத்தை அச்சிட்டமைதான். இலங்கை மத்திய வங்கி கடந்த இரண்டு ஆண்டுகளில் 1.7 ட்ரில்லியனுக்கும் அதிகமான பணத்தை அச்சிட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் இந்தளவு பணத்தை அச்சிட்டதில்லை. பணத்தை அச்சிடுவதை உடனடியாக நிறுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தது. பணம் அச்சிடுவதால் பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அவ்வமைப்பு சுட்டிக்காட்டியிருந்தது. எனினும், அதனைப் பொருட்படுத்தாது மத்திய வங்கி பணத்தை அச்சிட்டது.

இதன் காரணமாக வரலாற்றில் என்றுமில்லாதவாறு பணவீக்கம் மார்ச் மாதத்தில் உச்சநிலையை அடைந்துள்ளது. நடப்பு மாதத்தில் பணவீக்கம் 17.50 வீதமாக பதிவாகியுள்ளது. பொறுப்பற்றவர்களின் கைகளில் நாடு சிக்கித் தவிக்கிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 5.70 வீதமாக இருந்த பணவீக்கம் 2021 ஜனவரி மாதம் 3 வீதமாக குறைவடைந்தது. 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5.7 வீதமாக அது காணப்பட்டது. அதன் பின்னர் சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14.20 வீதமாகவும், பெப்ரவரி மாதம் 15.10 வீதமாகவும், மார்ச் முதல் வாரத்தில் 16.80 வீதமாகவும் உயர்வடைந்தது.

இவ்வாறு பணவீக்கம் அதிகரிப்பதால் பொதுமக்கள் பொருளாதார ரீதியில் நலிவடைந்துள்ளார்கள். சாதாரண பார்வையில் அதன் தாக்கம் தெரியாதுள்ளபோதிலும் பணக்கொடுக்கல் வாங்கல்களின்போது வெகுவாக நாம் உணரக்கூடியதாக இருக்கும். நாம் அறியாமலேயே வறுமையை நோக்கித் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

நாட்டில் அதிகளவான பணம் அச்சிடப்பட்டு புழக்கத்துக்கு விடப்படுகின்றபோது அதிக பணத்தை வைத்திருக்கும் மக்கள் தங்களுடைய தேவைக்கு அதிகமாக பொருட்களை முந்திக்கொண்டு வாங்குகிறார்கள். தேவையுடைய மக்களுக்கு பணம் இருந்தும் பொருட்களை வாங்குவதற்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது.

உள்நாட்டில் போதியளவான பொருட்கள் உற்பத்தி செய்யாமல் அல்லது மக்களுக்குத் தேவையானவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யாமையினால் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இப்போது பணம் வைத்திருக்கின்ற மக்கள் என்ன விலை கொடுத்தாவது வாங்கிவிட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இதனாலும் பொருட்களின் விலை வெகுவாக அதிகரிக்கிறது.

கொவிட் தொற்றுப்பரவலுக்குப் பின்னர் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பணவீக்கம் அதிகரித்திருந்தது. ஆனால், இலங்கையில் எல்லையை மீறிய வளர்ச்சி காணப்படுகிறது.

இலங்கை மத்தியவங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இது குறித்து அறியாமலில்லை. ஆனாலும், இலங்கை எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு தற்காலிக ஏற்பாடாக பணத்தை மத்திய வங்கி அச்சிடுகிறது.

ஒரு நாட்டை ஆளும் வர்க்கம் மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாவாறு செயற்பட வேண்டும். நமது நாட்டில் ஒரு குடும்ப அதிகாரம் சுயநலமான போக்குடன் இயங்குவதாகவே தெரிகிறது. இனி யார் ஆட்சிக்கு வந்தாலும் பணவீக்கத்தை உடனடியாகக் குறைத்துவிட முடியாதளவுக்கு மோசமான ஆட்சி இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதனால் நாட்டு மக்களே பெரிதும் பாதிப்படைகிறார்கள். பண வசதி இருப்பவர்களுக்கு இதுவொரு பொருட்டல்ல. ஆனால் சாமானியர்கள் பஞ்சத்திலிருந்து பிழைக்க முடியாது.

---

**04ஆம் பக்கத்தொடர்ச்சி...**

இராணுவத்தையோ, கடற்படையையோ, விமானப்படையையோ இனிக் காணி சுவீகரிப்பில் ஈடுபடக் கூடாது எனத் தாம் உத்தரவிட்டிருப்பதாகக் கூறிய ஜனாதிபதி, அதை மீறி இனி எதுவும் நடக்காது என்றும் உறுதியளித்தார்.

எனினும், அத்தகைய அபகரிப்புகள் தொடர்கின்றன என விலாவாரியாக எடுத்துரைத்தனர் கூட்டமைப்பினர். “அந்த விவரங்களைத் தாருங்கள். இனிமேல் அப்படி நடக்காமல் நான் உறுதியாகப் பார்த்துக் கொள்வேன்” என்றார் ஜனாதிபதி கோட்டாபய.

எல்லை மீள் நிர்ணயம் செய்து, இனப் பரப்பலை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டதற்கும் ஜனாதிபதி இணங்கினார். கூட்டமைப்பினருடன் பேசாமல் வடக்கு, கிழக்கில் அத்தகைய மாற்றங்கள் ஏதும் இனி செய்யப்பட மாட்டாது என்று ஜனாதிபதி தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

மகாவலி அபிவிருத்தி சபை, தொல்லியல் திணைக்களம் போன்றன காணிகளை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகளும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும், இனிமேல் அந்தத் தரப்புகள் கூட்டமைப்புடன் கலந்து பேசாமல் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க மாட்டா என்றும், அதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி சம்பந்தப்பட்டோருக்கு வழங்குவார் என்றும் உறுதி கூறப்பட்டது. வயல்களில் வேலை செய்வோர் தொல்லியல் திணைக்களத்தினால் தடுக்கப்படுகின்ற விடயம் உடனடியாக நிறுத்தப்படும். தங்களின் வாழ்வாதாரத்துக்காக நீண்ட காலம் பயிர்செய்வோரை யாரும் தடுக்க முடியாது, அதற்கான உத்தரவு உரியவர்களுக்கு வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டது.

## காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

தொடர்ந்து காணாமல் போனோர் விவகாரம் ஆராயப்பட்டது. “ஒரு இலட்சம் ரூபா வழங்கி மக்களை ஏமாற்றப் பார்க்கிறீர்களா?” என்று சம்பந்தன் சீறினார். வழங்குவது நஷ்டஈடு அல்ல, அது உடனடி இடைக்கால நிவாரணம்தான். அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் கூறப்பட்டது. ஒவ்வொருவர் குறித்தும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கான உடனடி விசாரணைகள் தனித்தனியாக ஆரம்பிக்கப்படும். அடுத்த கூட்டத்துக்கு முன்னர் இதில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு தனியான நிதியம்

நான்காவது விடயமாக வடக்கு – கிழக்கு பொருளாதார மீட்சிக்காக ஒரு விசேட அபிவிருத்தி நிதியம் ஒன்று உருவாக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதனைக் கூட்டமைப்புடன் சேர்ந்து அரசு முன்னெடுக்கும். அதன்மூலம் புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளை தருவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அரசாங்கம் உருவாக்கும். கூட்டமைப்புடனான அடுத்த கூட்டத்திற்கு முன்னர் அந்த நிதியம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அரசமைப்பு உருவாக்கத்திற்காக ஜனாதிபதி நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கை அதன் மொழிபெயர்ப்போடு இரண்டு மாதங்களுக்குள் தயாரானதும், கூட்டமைப்பு – ஜனாதிபதி அடுத்த சுற்று பேச்சு அதை அடிப்படையாக வைத்துத் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் மேற்படி நான்கு விடயங்களிலும் காத்திரமான நடவடிக்கை, கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தக் கூடிய விதத்தில் முன்னெடுக்கப்படும் என்ற உறுதி அரசு தரப்பில் வழங்கப்பட்டது.

இதற்கப்பாலும் சில விடயங்கள் நடந்தேறின. ஜனாதிபதி – கூட்டமைப்பு பேச்சு இடம்பெற்று மூன்று மணிநேரத்தின் பின்னர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிடமிருந்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கு ஓர் அழைப்பு வந்தது.

“படையினர் மக்களின் காணிகளை சுவீகரிக்கின்றார்கள் என்று ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்துள்ளீர்கள். அப்படி எந்தக் காணியையும் சுவீகரிக்கக் கூடாது எனத் தாம் உத்தரவு வழங்கியிருக்கையில், அப்படி எங்கு சுவீகரிக்கின்றீர்கள் என்று ஜனாதிபதி என்னிடம் கேட்கின்றார். தயவுசெய்து அந்த விவரங்களைத் தாருங்கள். உடன் கவனிக்கிறேன். அப்படி சுவீகரிப்பு முயற்சி ஏதும் நடக்காது. நடந்தால் உடன் எனக்குத் தகவல் தாருங்கள். நான் நடவடிக்கை எடுப்பேன். இப்போது எங்கெங்கு இப்படி சுவீகரிப்பு முயற்சிகள் நடந்துள்ளன என்று விவரத்தைத் தாருங்கள். அப்படி நடக்காமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்” – என்ற சாரப்படக் கூறினாராம் இராணுவத் தளபதி.

“சற்றுப் பொறுங்கள். விவரங்களை அனுப்புகிறேன்” – என்று குறிப்பிட்ட சுமந்திரன், கையோடு விவரங்களை அனுப்பி வைத்தார் என்று அறிய வந்தது.

அடுத்தது – சர்வகட்சி மாநாடு முடிந்ததும், தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் (தமிழன் ஆசிரிய பீடத்தை சேர்ந்தவர்) அந்த முயற்சியை வரவேற்று ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்பினார். சற்று நேரத்தில் அவருக்கு தொலைபேசி அழைப்பொன்று...

அவரது தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தார் ஜனாதிபதி கோட்டாபய. அந்த வரவேற்புக்கு முதலில் நன்றி கூறினார். “மதியம் பேச்சுக்குப் பின்னர் நீங்கள் தமிழ்க் கூட்டமைப்பினர் யாருடனாவது பேசினீர்களா? அவர்கள் என்ன கருத்தில் – மன நிலையில் – இருக்கின்றார்கள்?” – என்று கேட்டார் ஜனாதிபதி. “ஆம், சுமந்திரனுடன் பேசினேன்” – என்று குறிப்பிட்ட எமது ஊடகவியலாளர் மேலும் விவரித்தார்.

“அவர்கள் பேச்சு மூலம் தீர்வு காண்பதில் முழு நம்பிக்கை வைத்துத்தான் பேச வந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் சர்வகட்சிக் கூட்டத்தைப் பகிஷ்கரித்தபோது அவர்கள் பேச வந்தமையே பேச்சின் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வு காணவேண்டும் என்பதற்குத்தான். பேச்சு மூலம் ஓர் இணக்கத்துக்கு வந்தீர்களானால் அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய வலிமையுள்ள தலைவர் நீங்கள் என்று எண்ணுகின்றார்கள். அந்த நம்பிக்கையை நிறைவு செய்யுங்கள்” – என்றார் எமது ஊடகவியலாளர்.

“ஆமாம். நான் அதில் மிக உறுதியாக இருக்கிறேன். என்னை நம்பி வரும் போது நான் கைவிட மாட்டேன். என்ன எதிர்ப்பு வந்தாலும் இந்த முயற்சியை முன்னகர்த்துவதற்கு நான் பின்வாங்க மாட்டேன். அவர்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு கொடுப்பதன் மூலம் நம்பிக்கையைக் கட்டி வளர்த்து, அதிலிருந்து அரசியல் தீர்வு முயற்சியை நாம் எட்டலாம். அவர்களுக்கும் யதார்த்தம் விளங்குகின்றது” – என்ற ஜனாதிபதி, புலம்பெயர் தமிழர்கள் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

“டயஸ்போறா என்று அவர்களை நாம் பிரித்துப் பேசக் கூடாது. அவர்களும் நம் மக்களே. ஆனால், தொழில்நுட்ப ரீதியில் அப்படி அவர்களைப் பிரித்து வைத்துப் பேசும் சூழ்நிலை எற்பட்டு விட்டது. அவர்களையும் அவரணைத்து, அவர்களுக்கும் இணக்கமான ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும்” – என்று ஜனாதிபதி குறிப்பிட்டபோது நமது ஊடகவியலாளர் குறுக்கிட்டார்.

“ஆம், ஜனாதிபதி அவர்களே! அவர்களுக்கு (புலம் பெயர்ந்தவர்களுக்கு) முழு நம்பிக்கை ஏற்படும் விதத்தில் உங்கள் அரசின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் அமைய வேண்டும்” – என்று ஆலோசனை கூறினார் எமது ஊடகவியலாளர்.

“ஆமாம். அது குறித்து ஆராய்கிறேன்” என்ற சாரப்பட பதிலளித்த ஜனாதிபதி, இப்போதைய சமரச முயற்சிகள் தொய்ந்து போகவோ, முறியவோ தாம் விடமாட்டேன் என்று தமது வார்த்தைகளினோடு எமது செய்தியாளருக்குக் கோடி காட்டினார்.

இந்த பேச்சுக்குப் பின்னால் திரைமறைவில் பல விடயங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி இதன் அடுத்தகட்டப் பணிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அதன் விபரங்களை விரைவில் தருகிறேன்.


படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

## ரணிலை வாழ்த்திய மஹிந்த

சர்வகட்சி மாநாடு நடந்த அடுத்தநாள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலின் பிறந்தநாள். அன்றைய தினம் காலையில் ரணிலுக்கு தொலைபேசி அழைப்பையெடுத்த பிரதமர் மஹிந்த பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவித்தார். “நேற்று தனி ஆளாக சர்வகட்சி மாநாட்டுக்கு வந்து ஒரு கலக்கு கலக்கிவிட்டீர்கள் அல்லவா?” என்று ரணிலை புகழ்ந்தார் மஹிந்த.

“பேசாமல் இருந்தால் எதற்கும் தீர்வு வராது. நாங்கள் தொடர்ந்து பேசுவோம்” என்று அதற்கு பதிலளித்தார் ரணில். கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தியது. கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் அதில் கலந்துகொண்டனர்.

அதிகளவான கூட்டம் திரண்டதால் கட்சித் தலைவர், நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு நன்றியை தெரிவித்தார்.

இந்த சத்தியாக்கிரகத்திற்கு செல்லவென ரணில் நடந்துவந்து கொண்டிருந்தபோது, கட்சியின் தீவிர ஆதரவாளர் ஒருவர் வேகமாக ஓடிவந்து ரணிலுக்கு வணக்கம் சொல்ல முயன்றார். அவர் ரணிலின் தீவிர விசுவாசி என்பதால் அவர் வந்த வேகத்தைக் கண்ட பாதுகாப்புத் தரப்பினர் அதிர்ச்சியடைந்து அவரை தடுத்து நிறுத்தினர். பின்னர் தூர நின்றபடி அவர் ரணிலுக்கு வணக்கம் செலுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஹெல உறுமயவின் முக்கியஸ்தர்களும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டமை அனைவரையும் ஆச்சரியத்தில் தள்ளியுள்ளது. சஜித்துடன் இருக்கும் முக்கிய நபர்களை தம் வசம் இழுக்கும் வேலைகளை ரணில் செய்துவருவதாகவும், கிட்டத்தட்ட 12 எம்.பிக்கள் ரணிலுடன் இரகசிய பேச்சுகளை நடத்தியுள்ளதாகவும் செய்திகள் சொல்கின்றன.

## சஜித் கட்சியில் இழுபறி

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அண்மையில் கொழும்பில் கூடியது.

பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து இங்கு பேசப்பட்டது. இதற்காக அரசியல் கட்சிகளுடன் பேசும் பொறுப்பு ரஞ்சித் மத்தும பண்டார எம்.பியிடமும், தொழிற்சங்கங்களை சந்தித்து பேசும் பொறுப்பு ராஜித்த எம்.பியிடமும் வழங்கப்பட்டன.

இந்த செயற்குழுக் கூட்டத்தில் ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, தலதா அத்துக்கோரள ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. செயற்குழு நடந்த அதேநேரத்தில் ஹரீனும், மனுஷவும் ஹோட்டலொன்றில் இன்னுமொரு கலந்துரையாடலில் இருந்தனர்.

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளைக் கண்டறிய விசேட குழுவொன்றை அமைத்து, அதற்கு தலைவராக சரத் பொன்சேகாவை நியமிக்க இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. ஆனால், அதற்கு சம்மதம் தெரிவிக்க மறுத்த சஜித், அரசியல் பழிவாங்கும் வகையில் செயற்படக்கூடாதென தெரிவித்துவிட்டார்.

## ஆளுங்கட்சி கூட்டம் கோட்டா தலைமையில்

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது. பல்வேறு பிரச்சினைகள் குறித்து அங்கு பேசப்பட்டன. “மக்கள் இப்போது பெரும் நெருக்கடியில் இருக்கின்றனர். சாதாரண பொருட்களை வாங்கவே வரிசையில் நிற்கவேண்டியுள்ளது. எம்.பிக்கள் ஊருக்குப் போக முடியாத நிலைமை இருக்கிறது. வரிசைகளுக்கு அருகில் ஆளுங்கட்சி எம்.பிக்கள் சென்றாலே மக்களால் தாக்கப்படும் நிலைமை இருக்கிறது. இதுதான் உண்மை. இங்கே நாங்கள் அரசாங்கத்தை பூசி மெழுகத் தேவையில்லை” என்று கொழும்பு மாவட்ட எம்.பி. ஜகத் குமார குறிப்பிட்டார்.

“சில விடயங்களை நாங்கள் உணர்ந்திருக்கிறாம். எங்களுக்கும் தினசரி புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கின்றன. எதிர்க்கட்சியினரின் தூண்டுதலின் பெயரிலும் பல அரச விரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. நாங்கள் மக்களின் பிரச்சினைகளை விரைவில் தீர்ப்போம்” என்று அதற்கு பதிலளித்தார் ஜனாதிபதி.

“இல்லை ஜனாதிபதி அவர்களே, சில இடங்களில் மக்கள் சுயமாகவே வந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை செய்ய ஆரம்பித்துள்ளனர். நீங்கள் வேண்டுமானால் தேடிப்பாருங்கள்” என்று அதற்கு பதில் கொடுத்தார் ஜகத் எம்.பி. இந்த சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்ட பதுளை எம்.பி சாமர சம்பத், ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சருக்கு எதிராக திட்டமிடப்பட்டு சில குழுவினரால் சமூக ஊடகங்களில் விஷமப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

அதேசமயம் ஆளுங்கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் பலர் அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் கருத்துகளை வெளியிடுவது குறித்தும் இங்கு பேசப்பட்டது.


படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

## ஜே.வி.பி மக்கள் எழுச்சி

அரசாங்கத்தின் சர்வகட்சி மாநாடு நடந்த அதே தினத்தில் நுகேகொடையில் ஜே.வி.பியின் பாரிய மக்கள் பேரணி இடம்பெற்றது.

பெருமளவிலான மக்கள் கூட்டம் இதில் கலந்துகொண்டது. நாட்டின் தற்போதைய நிலையில் இரண்டு பிரதான கட்சிகளின் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்து மக்கள் விடுதலை முன்னணியினருக்கு ஆதரவை வழங்கி வருவது இந்த கூட்டத்தில் மேலும் புலனாகியதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இங்கு உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க, அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்ததுடன், அரசாங்கத்துக்கு ஆதரவளித்துவரும் நபர்களையும் விமர்சித்தார். இந்தளவான மக்கள் கூட்டத்துடன் நுகேகொடையில் மக்களோடு மக்களாக பார்வையாளராக நின்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. அந்த உரைகளைக் கேட்டுக்கொண்டிருந்தமை பலரின் கவனத்தை ஈர்த்தது.

**– சிவா இராமசாமி –**

rh i

# பிரதமரின் யாழுக்கான ‘திக்’ விஜயமும் உறவுகளின் கண்ணீரும்...

● திருமலை நவம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடாநாட்டுக்கான ‘திக்’ விஜயம் குடாநாட்டை கொந்தளிப்படைய வைத்திருப்பதுடன், விஜயத்தின் பாதுகாப்பு கெடுபிடியால் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் தாய்மார் தாக்கப்பட்டதும், அவமதிக்கப்பட்டதுமான சம்பவமானது குடாநாட்டை மாத்திரமன்றி தமிழ்த் தேசியப் பரப்பையே கோபங்கொள்ள வைத்திருக்கிறது. இன்றைய ஆட்சியாளரின் அராஜகப்போக்கு பற்றிய தவறான எண்ண அலைகளை யாழ். மக்களுக்கு மீண்டும் இச்சம்பவம் பதியவைத்துள்ளது.

பிரதமர் என்பவர் ஒரு நாட்டின் தலைவர். அவரை வரவேற்பதும் புறக்கணிப்பதும் மக்களின் அபிப்பிரயம் சார்ந்த ஜனநாயக உரிமை. பிரதமரின் யாழ். விஜயத்துக்கு காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஜனநாயக முறையில் எதிர்ப்பைக் காட்ட முயற்சிசெய்திருக்கிறார்கள். இந்த விஜயத்தின்போது வன்னியிலிருந்து வந்த காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க முல்லைத்தீவு மாவட்ட தலைவி ஈஸ்வரி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஜெனிற்றா ஆகியோர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவமானது வடக்கு, கிழக்கு வாழ் மக்களை கவலையடைய வைத்திருப்பதுடன், ஆத்திரமடையவும் செய்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களும் (19.3.2022 - 20.3.2022) வரலாற்று புகழ் கொண்ட நயினாதீவு நாகபூசணி ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். யாழ். நல்லூர் முருகன் ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு செல்லவிருந்த பிரதமர், நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என்று கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே அதை தவிர்க்கும் முகமாக மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆலய வழிபாட்டை தடுக்கும் அளவுக்கு குடாநாட்டு மக்கள் அநாகரீகம் கொண்டவர்களாக எப்போதும் நடந்துகொண்டதாக தெரியவில்லை.

இதேவேளை, பிரதமர் யாழ். நாகவிகாரை வழிபாட்டிலும் பங்குகொண்டதோடு உரையும் ஆற்றியுள்ளார். சில செய்திகளின் பிரகாரம் சுன்னாகம் பகுதியில் விகாரையொன்றுக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்திலும் கலந்து கொள்ளவுள்ளார் என்ற தகவலும் பெரிதாக பேசப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலேயே பிரதமரின் யாழ். விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். அதன் எதிரொலியாகவே மட்டுவிலில் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக மட்டுவில் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொருளாதார நிலையத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைப்பதற்காக பிரதமர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20.03.2022) வருகைதந்தபோது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உறவுகள் எதிர்ப்புப்போராட்டத்தை நடத்தியுள்ளனர். அப்போராட்டத்தில் கலந்து கொள்ள முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து வந்தவர்களை மட்டுவில் அம்மன் ஆலயத்துக்கு அருகில் வைத்து பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பொலிஸாரின் தடுப்பையும் மீறி உறவுகள் வீதியில் புரண்டு அழுது, கத்தி தமது எதிர்ப்பைக் காட்டியதோடு பிரதமரை வரவேற்கும் பதாகைகளை கிழித்தும், எரித்தும் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இந்த கள நிலையால் முல்லைத்தீவிலிருந்து வருகை தந்திருந்த முல்லைத்தீவு மாவட்ட தலைவி ஈஸ்வரி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர் ஜெனிற்றா ஆகியோர் சிறிய காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த அசம்பாவிதங்கள் யாழ். குடாநாட்டை நிலைகுலைய வைத்திருப்பதோடு, யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலையையும் உருவாக்கியுள்ளது.

மட்டுவிலில் இடம்பெற்ற தாய்மார் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தாய்மார்களுடன் இணைந்து ஒருசில உள்ளூர் தலைவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். இதனால் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தியாகராஜா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செல்வரட்ணம் மயூரன் ஆகியோர் பதாகைகள் எரிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்வதற்காக சாவகச்சேரி பொலிஸாரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தினால் தங்களுடைய பிள்ளைகளையும் கணவன்மாரையும் சகோதரர்களையும் உறவுகளையும் பறிகொடுத்த மக்களை கண்மூடித்தனமாக மிலேச்ச முறைகொண்டு தாக்கியமை எந்தளவுக்கு ஜனநாயக முறைகொண்ட செயல்? இலங்கை நாட்டில் எங்கே ஜனநாயகம் இருக்கிறது?

“வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மாரை தாக்குவதற்காகவா பிரதமர் யாழ் வந்தார்? வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜனநாயக ரீதியில் நீதி கேட்டு போராட முயற்சித்தபோது அவர்களை வழிமறித்து பஸ்ஸிலிருந்து இறங்கவிடாமல் அச்சுறுத்தி தாக்கிய சம்பவங்கள் ஆட்சியாளர்களின் அராஜகத்தை காட்டுகிறதென பலரும் தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

காணமலாக்கப்பட்டவர்களின் போராட்டமானது தொடர்கதையைப்போல் பலவருடங்களாக தொடர்ந்து இடம்பெற்றுவரும் ஒரு ஜனநாயக வழிப் போராட்டமாகும். ஆயுதமின்றி - ஆர்ப்பாட்டமின்றி அகிம்ஷை வழிமுறை தழுவிய போராட்டங்களையே அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

இறுதி யுத்தத்தின்போதும் அதன்பின்னரும் காணாமல்போன பல்லாயிரக்கணக்கான உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி அவர்களின் உறவினர்கள் கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வடக்கு, கிழக்கில் பல போராட்டங்களையும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்திவருகிறார்கள். இதனை அவர்களின் ஜனநாயக உரிமையாகவே எண்ணி மேற்கொண்டுவருகிறார்கள்.

கொழும்பு உட்பட குறிப்பாக, வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களில் பெருந்தொகையானோர் கைதுசெய்யப்பட்டும் கடத்திச்செல்லப்பட்டும் காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர். வெள்ளை வானில் ஏற்றிச்செல்லப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக, கொழும்பு தெஹிவளையில் வைத்து கடத்தப்பட்ட 5 மாணவர்கள் உட்பட 11 பேருக்கும் இதுவரை என்ன நடந்தது என்ற விசாரணை முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. ஏலவே இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்கள் மற்றும் இராணுவத்தினரிடம் உறவினர்களால் நேரடியாகவே கையளிக்கப்பட்டவர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல்போயுள்ளனர்.

இவையெல்லாம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் நடந்த கொடூரங்கள். இவற்றை உலகுக்கு எடுத்துக்காட்டவே அவருடைய வருகையை இலக்குவைத்து இந்தப் போராட்டங்களை உறவுகளாகிய நாம் மேற்கொண்டு வருகிறோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே பல்லாயிரக்கணக்கானவர்கள் காணாமலாக்கப் பட்டார்கள் என்ற பாரிய குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. எனவேதான் இந்தப் போராட்டம் தொடர்பாக ஒரு சங்கலித்தொடரான வரலாறு காணப்படுகிறது என்பது வெளிப்படையாக எடுத்துக்காட்டப்படுகிற விடயம்.

உண்ணாவிரதப் போராட்டங்கள், சுழற்சி முறை உணவு தவிர்ப்புப் போராட்டம், தொடர் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என பல போராட்டங்களை நடத்தி இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் தமது எதிர்ப்பை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இந்தப் போராட்டங்கள் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து இடம்பெற்று வருகின்றது.

காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012ஆம் ஆண்டிலிருந்து பல தீர்மானங்கள் முன்கொண்டு வரப்பட்டன. உதாரணமாக, 2017ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஐந்து பிரேரணைகளில் ஒன்றாக இந்த விவகாரம் காணப்பட்டது. இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

முன்னாள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையவர்கள் இலங்கைக்கு இப்பிரச்சினை தொடர்பில் கேட்டறியவும் ஆராயவும் வந்தபோது காணாமல்போனவர்களின் உறவுகள் இப்பிரச்சினை தொடர்பாக எடுத்துக்கூறுவதற்கு அவரை சந்திப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோது அது திட்டமிட்ட முறையில் அரசாங்கத்தால் தடுக்கப்பட்டது. இருந்தபோதும் உறவுகள் பிள்ளையவர்களை சந்தித்து தங்கள் முறைப்பாடுகளை முன்வைத்தார்கள். அதுவுமன்றி ஆணையாளர் இரகசியமான முறையில் திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களிலுள்ள பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து விடயங்களைக் கேட்டறிந்துகொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை உறவுகள பல சந்தர்ப்பங்களில் முன்வைத்ததோடு, சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையையும் பல சந்தர்ப்பங்களில் முன்மொழிந்து வந்திருக்கிறார்கள்.

2010ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்தவால் பரணகம ஆணைக்குழுவும் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது.

பரணகம ஆணைக்குழு வடக்கு, கிழக்கில் பல்வேறு அமர்வுகளை நடத்தி காணாமலாக்கப் பட்டோர் தொடர்பாக விசாரணைகளை நடத்தியபோது சுமார் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எழுத்துமூல முறைப்பாடுகளை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டது. ஆனால், நடந்தது என்ன? ஆணைக்குழுவால் குறித்த விவகாரத்துக்கு தீர்வுகாண முடியவில்லை. இதேபோன்றே நல்லிணக்கக்குழு மற்றும் காணாமல்போனோருக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவை மஹிந்த நியமித்திருந்தார். இக்குழு நாடுதழுவிய விசாரணைகளை மேற்கொண்டபோதும் இவர்களாலும் காணாமல்போனோர் தொடர்பாக தீர்வை பெற்றுத்தர முடியவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் காணாமல்போனோரின் உறவுகள் தீவிரமாக போராட்டங்களை நடத்த முற்பட்டார்கள். 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்திலாவது தங்களுக்கு நீதி கிடைக்கும் தீர்வைப்பெற முடியுமென்ற அத்த நம்பிக்கை கொண்டவர்களாக உறவுகள் காணப்பட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கான துணையாளர்களும் மைத்ரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிவந்த நிலையில், தங்கள் நீண்டகால பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைத்துவிடும் என்ற முழு நம்பிக்கை இவர்களை சமாதானமடைய வைத்தது. ஆனால், நாம் ஒன்று நினைக்க ஆட்சியாளர்கள் ஒன்று நினைக்கின்றார்கள் என்பதுபோல் எல்லாம் மாறுநிலையாகவே நடந்து கொண்டிருந்தது.

நல்லாட்சி உருவாக்கப்பட்ட காலத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஒரு நிரந்தர அலுவலகத்தை அமைக்க சட்டமொன்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இவ்வலுவலகத்தை திறக்காமல் அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்தது.

2017ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். யாழுக்கு விஜயம் செய்தவேளை, உறவுகள் அவரை சந்தித்து தடுப்பு முகாமிலுள்ள காணாமல் போனவர்கள் தொடர்பான பெயர் விபரங்களை வெளியிடவேண்டும் காணாமல்போனோர் தொடர்பான உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

ஜனாதிபதி இதற்கு பதிலளிக்கையில், இது தொடர்பில் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் கலந்துரையாடி தடுத்துவைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வெளியிட உத்தரவிடவுள்ளதாக வாக்குறுதியொன்றை நல்கியிருந்தார். முடிவு எப்படி இருந்தது. பாதுகாப்புப் படையினர் அவ்வாறு யாரும் தடுப்பு முகாமில் இல்லையென படையினர் கூறுவதாக முடிவு அவரால் தெரிவிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டளவில் நல்லாட்சிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அம்மையார் அதிர்ச்சியான தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தார். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உண்மையில் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்பதை கண்டறியவேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் அப்படி எவரையும் யாரும் முகாம்களில் மறைத்து வைத்திருக்கவில்லை. முன்னைய ஆட்சியின்போது கடமையாற்றிய இராணுவத்தின் பழக்கத்துக்கேற்ப அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கலாம். இவை இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை என்ற தனது சந்தேகத்தை அம்மையார் வெளிப்படுத்தியிருந்தார்.

இதன் எதிரொலியாகவே 2017ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ் ஆகிய இடங்களில் காணாமல்போனோரின் உறவுகள் தொடர்ந்தேர்ச்சியான போராட்டங்களை நடத்திவந்தார்கள். இலங்கை அரசாங்கத்தின் இழுத்தடிப்புகளையும் பராமுகங்களையும் நாடகமாடுதல்களையும் சர்வதேசத்துக்கு வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதற்காக கிளிநோச்சி கந்தசாமி ஆலய முன்றலில் 2017ஆம் ஆண்டு ஆனி மாதமளவில் காணாமல்போனோர் உறவுகள் கவனயீர்ப்புப் போரட்டமொன்றை 100 நாட்கள் தொடர்ந்தேர்ச்சியாக நடத்தினார்கள். இப்பேராட்டத்தின்போது பின்வரும் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தார்கள்.

★ காணாமல்போனோர் பெயர்ப்பட்டியலை அரசாங்கம் விரைவில் வெளியிடவேண்டும்.

★ இரகசிய தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படவேண்டும்.

★ அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டவர்களை பார்வையிட அவர்களது உறவினர்களை அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் அவர்களால் முன்வைக்கப்பட்டன.

முடிவில் என்ன நடந்தது? “காணாமல் போனவர்கள் பலர் வெளிநாடுகளில் பெயர் மாற்றங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, காணாமல்போனவர்களின் உறவுகள் போராட்டம் நடத்துவதில் அர்த்தமில்லை” என்று நல்லாட்சி அரசாங்கத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த பொறுப்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். இறுதி யுத்தத்தில் காணாமல்போனோர் பலர் வெளிநாடுகளில் மாற்றுப் பெயர்களுடன் வாழ்ந்துவருகிறார்கள். சர்வதேச நாடுகள் தங்கள் நாடுகளிலுள்ள தமிழர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடவேண்டும் அதன்பின்பே காணாமல் போனோர் பெயர்ப்பட்டியலை தயாரிக்க முடியுமென அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

இவ்வாறு நல்லாட்சி அரசாங்கத்திலும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்காத நிலையில், இப்போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்பது தேசம் அறிந்த விடயம். இன்றைய அரசாங்கத்தில் இவ்விவகாரம் தொடர்பாக பல்வேறு போராட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்றுவரும் நிலையில்தான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ் விஜயம் அமைந்திருந்தது.

இந்த விஜயத்தின்போது பிரதமர் கூறிய விடயம், 1970ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு தான் முதல் முதல் விஜயம் செய்திருந்ததாகவும் சுமார் அரை நூற்றாண்டுக்குப் பிறகு யாழ். மக்களை சந்திக்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2,26,009 வாக்குகள் கிடைக்கப்பெற்றதால் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து ஜனாதிபதியாகும் வாய்ப்பை அவர் பெற்றார்.

இவரின் இவ்வெற்றி தொடர்பில் விடுதலைப் புலிகளின்மீது சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன என்பது பொதுவாக பேசப்படும் விடயமாகும். ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிகொள்ள இடமளித்திருப்பார்களேயானால் நிலைமைகள் மாறுநிலை பெற்றிருக்கும். நாங்களே நம் தலையில் மண்ணை வாரிப்போட்டுவிட்டோம் என்ற கருத்துகளும் விமர்சனங்களும் பின்னாளில் பேசப்பட்ட விடயங்களாகும். அண்மையில் யாழ். குடாவுக்கு விஜயம் செய்திருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாண மக்களுக்கான சில கருத்துகளை முன்வைத்தமை தொடர்பில் இக்கட்டுரையில் பார்க்கவேண்டியது அவசியமாகிறது.



யாழ். நாகவிகாரையில் உரையாற்றிய பிரதமர், “வடக்கு மக்களை அன்று பாதுகாத்த நாங்கள், இன்று அவர்களை பாதுகாத்து வடக்கு மாகாணத்துக்கான அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்திவருகிறோம். இலங்கைவாழ் பல்லின சமூகத்தினர் மத்தியில் வரவாற்றுக் காலம்முதல் நல்லுறவு பேணப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற ஒருசில காரணிகளால் 30 வருடகால சிவில் யுத்தம் தோற்றம் பெற்றது” - என்றார்.

மட்டுவிலில் பிரதமர் உரையாற்றும்போது, உயிரிழப்புகளைத் தவிர, ஏனைய அனைத்தையும் யாழ். மக்களுக்கு வழங்கியுள்ளோம். வடக்கில் 30 வருடமாக மூடிக்கிடந்த இருண்ட யுகத்தை இல்லாதாக்கி மக்களின் சுதந்திரத்தையும் உரிமையையும் மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம் என விதந்துரைத்துள்ளார்.

பிரதமரின் இந்தக் கருத்து யாழ். மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா அல்லது ஆமோதிக்கப் படுகிறதா என்பதற்கப்பால் வடக்கு, கிழக்கு அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளுக்கு யுத்தத்துக்குப் பின்னரான குறிப்பாக, இன்றைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்றகரமான பட்டியல் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால் அது பூஜ்ஜியத்துக்கு கீழ் உள்ள நிலையையே காட்டுகிறது என்பது எல்லோராலும் வெளிப்படுத்தப்படும் உண்மை. தெற்கின் அபிவிருத்திகளும் வாழ்க்கை வளங்களும் வடக்கு, கிழக்கு மக்கள் அடைந்திருக்கிறார்களா என்பது வெறும் கேள்விக்குறியாக இருக்கமுடியும்

காணாமலாக்கப்பட்டவர்கள் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நடத்திவரும் போராட்டங்களுக்கு கடந்த அரசாங்கங்களினால் எத்தகைய தீர்வு வழங்கப்பட்டுள்ளது? அண்மையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடாக ஒரு லட்சம் வழங்கப்படுமென்று ஒரு அறிவித்தல் வெளிவந்துள்ளது. இதற்கு பதில் தந்த காணாமல்போனவர்களின் உறவுகள், எங்களின் உறவுகளான பிள்ளைகள், பேரர்கள், கணவன்மார், சகோதரர்கள், சொந்த பந்துங்களின் இழப்புகளின் பெறுமதி வெறும் இலட்சத்தால் அளவிட முடியுமா? நாங்கள் தலா 10 இலட்சம் அரசாங்கத்துக்கு தருகிறோம். எங்கள் உறவுகளை எங்களிடம் ஒப்படைக்கிறீர்களா? அவர்களுக்கு என்ன நடந்தது? என்று கூறுங்கள் என ஒரு எதிர்க்கணையையே ஏவியிருந்தார்கள்.

காணாமல்போனோர் தொடர்பில் பட்டியலை தாருங்கள். என்ன நடந்தது என்று கூறுங்கள். கையளித்தவர்களை கொண்டுவாருங்கள். கடத்தப்பட்டவாகள் எங்கேயிருக்கிறார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்துங்கள். உங்களால் முடியாவிட்டால் சர்வதேச விசாணைக்கு கொண்டுசெல்லுங்கள் என்று கடந்த பல வருடங்களாக போராடிவரும் உறவுகளின் உணர்வுகளை புரிந்துகொண்டு அரசாங்கமும் அதிகாரிகளும் நடந்துகொள்ளவேண்டும்.

வெந்த புண்ணில் வேலை பாய்சுவதுபோல் நடந்துகொள்ளப்படுமானால் எக்காலத்திலும் ஆட்சியாளர்களால் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலையே காணப்படும். அதுவுமன்றி நல்லிணக்கத்துக்கான கதவு தொடர்ந்து பூட்டப்பட்டேயிருக்கும். என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.



# ஜனநாயகத்தை விரும்பும் பலஸ்தீனம்

பலஸ்தீன் நில தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. 1976ஆம் ஆண்டு சியோனிச இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் சட்டங்களை இயற்றி பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான நிலங்களை பலாத்காரமாக கையகப்படுத்தியது. இஸ்ரேல் நிர்வாகம் நிலத்தைக் கையகப்படுத்துவதை எதிர்த்து நசரேத்தில் கடுமையாகப் போராடிய ஆறு பலஸ்தீனர்கள் இந்த துரதிர்ஷ்டமான நாளில் சுட்டுக் கொல்லப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மேலும் பலர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து பலஸ்தீனர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான ‘பலஸ்தீன நிலங்களின் பாதுகாப்புக்கான தேசிய முன்னெடுப்பு’ எனும் ஓர் அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்குமாறு இந்தக் குழு கோரிக்கை விடுத்தது. தமது நிலத்தை இழந்ததனால் ஏராளமான பலஸ்தீனர்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், பலஸ்தீன நில தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த நாளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த பலஸ்தீனர்கள் பரவலான போராட்டங்களை முன்னெடுத்தனர். 1970களுக்கு முந்திய கிளர்ச்சிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைப் போலன்றி அதிகளவிலான பலஸ்தீனர்கள் பங்குகொண்ட நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றுபட்ட போராட்டமாக இது அமைந்திருந்தது. பலஸ்தீன நில தினப் பிரகடனம் பலஸ்தீன மக்களுக்கு மிகுந்த வீரியத்தையும் வெற்றியையும் தந்தது. இஸ்ரேலிய எல்லையின் இருமருங்கிலும் வாழும் அரேபியரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் இது வழியமைத்தது.

அன்றிலிருந்து, இஸ்ரேலிய இராணுவத்தினரால் வீரமிக்க ஆறு போராளிகள் கொல்லப்பட்டதையும் தமது மூதாதையர்களின் சட்டபூர்வமான பூர்வீக நிலத்தைப் பறித்தெடுப்பதன் மூலம் பலஸ்தீன மக்களுக்கு இதுவரை இழைக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான அநீதியையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் மார்ச் 30ஆம் திகதி ஆண்டுதோறும் பலஸ்தீனர்களால் நினைவுகூரப்படுகிறது. வரலாறு நெடுகிலும் ஒவ்வொரு வருடமும் மார்ச் 30 அன்று நினைவுகூரப்படும் பலஸ்தீன நில தினம் பலஸ்தீனர்களுக்கும் உலகெங்கிலுமுள்ள புலம்பெயர் பலஸ்தீனர்களுக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. இந்த நிகழ்வு வரலாற்றைக் குறிப்பது மட்டுமல்லாமல், பலஸ்தீனப் புரட்சியைப் பற்றிய பொதுவான நினைவூட்டலையும் வழங்குகிறது.

1967இல் கிழக்கு ஜெரூசலேம், காஸா, மற்றும் மேற்கு கரையை இஸ்ரேல் சட்டவிரோதமாக ஆக்கிரமித்த முதல்நாளில் இருந்தே இஸ்ரேல் மென்மேலும் பலஸ்தீன நிலங்களை கையகப்படுத்தத் தொடங்கியதோடு, இஸ்ரேலியப் பிரஜைகளை அதிலே குடியமர்த்தவும் ஆரம்பித்தது. இன்றைய நிலைவரப்படி 6,00,000 இஸ்ரேலியர்கள் 230இற்கும் மேற்பட்ட வீட்டுத் திட்டங்களில் சர்வதேச சட்டத்துக்கு முரணான வகையில் வாழ்ந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெய்த்ஸலம் மற்றும் கெரம் நவட் (B'Tselem and Kerem Navot) வெளியிட்ட அண்மைய அறிக்கையின்படி, பறிமுதல் செய்யப்பட்ட பலஸ்தீன நிலங்களில் 20இற்கும் மேற்பட்ட துனாம்களில் (ஒரு துனாம் என்பது 1000 சதுர மீட்டருக்குச் சமம்) இஸ்ரேலியர்களைக் குடியமர்த்தி இஸ்ரேலிய அரசாங்கம் நிர்வகித்து வருகிறது.

1948இல் ஒன்றரை மில்லியன் பலஸ்தீனர்கள் தமது தாயகத்தில் வாழ்ந்தனர். அதே ஆண்டில் (1948) இஸ்ரேல் பலஸ்தீன நிலத்துக்குள் ஒரு நாடாக நிறுவப்பட்டது. 1976ஆம் ஆண்டளவில் ஒன்றரை மில்லியன் பலஸ்தீனர்களில் 20 வீதத்தினர் மட்டுமே இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்ந்தனர். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தொடர்ந்தேர்ச்சியான சோதனைகள், ஊரடங்கு உத்தரவுகள், கைதுகள், தங்கள் வீடுகளில் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் விசேட அனுமதி அட்டைகளைப் பெற்றிருக்க வேண்டியிருப்பது போன்றதான சிரமங்கள், சேரிகளில் போலான வாழ்க்கை எனப் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பலஸ்தீன சனத்தொகை கணிப்பீட்டுப் பணியகம் அண்மையில் வெளியிட்ட தரவுகளின்படி 1948 முதல் பலஸ்தீன நிலப்பரப்பில் 85 வீதத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் திட்டத்தின்படி 55 வீதமான நிலம் 1948இல் ஏற்கனவே கொடுக்கப்பட்டுமுள்ளது.

வருந்தத்தக்க வகையில், உலகில் வாழும் 13.7 மில்லியன் பலஸ்தீனியர்களில் 6.2 மில்லியன் பேர் பலஸ்தீன எல்லைக்கு வெளியே அகதிகளாக வாழ்கின்றனர். சர்வதேச சட்டத்தின்படி அகதிகள் தமது சொந்த பூர்வீக நிலத்துக்குத் திரும்ப முடியுமாக இருந்தாலும் இதுவரை பலஸ்தீன அகதிகளுக்கு தமது சொந்த ஊருக்குத் திரும்ப முடியாத நிலையே காணப்படுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றங்களை நிறுவுவது உட்பட்ட இஸ்ரேலின் பல நடவடிக்கைகள் பலஸ்தீனின் இருப்புக்கு கடுமையான தடையாக மாறியுள்ளதோடு, அவர்களின் செயற்பாடுகள் நாட்டில் நீடித்த அமைதிக்கான நம்பிக்கையையும் சிதைப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் பலஸ்தீனர்கள் தாம் பிறந்த இடத்தில் தமது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் அனுபவிப்பதைத் தடுக்கின்ற தெளிவான சியோனிசக் கொள்கையைக் குறித்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. சர்வதேச ரீதியாக கண்டிக்கப்பட்டபோதிலும் இஸ்ரேல் அரசாங்கம் அதன் சியோனிச விரிவாக்கக் கொள்கையையும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலங்களில் சட்டவிரோத குடியேற்றங்களையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

1976 சம்பவத்துக்கு 16 ஆண்டுகளுக்குப் பின்னர் பலஸ்தீன நில தினம் தேசிய பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டது. எதிர்ப்புப் பேரணிகள் மற்றும் பொது வேலை நிறுத்தங்களை முன்னெடுப்பதனூடாக பலஸ்தீனர்கள் ஆண்டுதோறும் இந்த நாளை நினைவுகூருகின்றனர். அதேநேரம், உலகின் வேறு பல பகுதிகளிலும் பலஸ்தீன நில தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கூட பலஸ்தீனர்கள் இன்றுவரை இந்த நிகழ்வை அனுஷ்டித்து வருகிறார்கள்.

உலகின் 140இற்கும் மேற்பட்ட நாடுகள் பலஸ்தீனில் சியோனிச இஸ்ரேலின் நில அபகரிப்புக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு, இந்தக் கொள்கையை கடுமையாக நிராகரித்துள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆசீர்வாதத்துடன் அபகரிக்கப்பட்ட பலஸ்தீன நிலங்களில் இஸ்ரேல் நிர்வாகம் புதிய குடியேற்றங்களை நிறுவி வருகின்றது.

இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கண்டித்து ஐநாவில் 500இற்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனாலும் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவு, பின்னூட்டம் காரணமாக உலகளவிலான கோபத்துக்கும் கண்டனத்துக்கும் மத்தியிலும் சியோனிச இஸ்ரேல் பலஸ்தீனில் நில அபகரிப்பைத் தொடர்ந்து வருகிறது. இந்த நிலையிலும் பலஸ்தீனில் இஸ்ரேலின் நில அபகரிப்புக் கொள்கையை ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் அமெரிக்கா 40இற்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில் தனது வீட்டோ அதிகாரத்தை ஐ.நா. சபையில் பயன்படுத்தியுள்ளது. இந்தப் பின்புலத்தில், இஸ்ரேலிலுள்ள சாதாரண மக்கள் ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு அல்லாடி வருகின்றனர். 1967இல் நிறுவப்பட்ட எல்லைகளுடன் ஐக்கிய நாடுகள் சபையில் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இருநாட்டுத் தீர்வை நடைமுறைப்படுத்துவதும் சுதந்திர பலஸ்தீன தேசத்தின் தலைநகராக கிழக்கு ஜெரூசலேத்தை அங்கீகரிப்பதும் பலஸ்தீன அகதிகள் தமது தாயகம் திரும்புவதற்கான உரிமையை ஏற்றுக்கொள்வதுமே தற்போதைய நெருக்கடிகளுக்கான ஒரே தீர்வாக அமைய முடியும்.

இந்தத் தீர்வு மிகவும் தாமதமானதொன்றாக இருந்தாலும் இதுவே இஸ்ரேல் பலஸ்தீன் மக்களுக்கும் முழு மத்திய கிழக்குக்கும் அமைதியைக் கொண்டுவரும்.

எனவே, சமாதானத்தை விரும்பும் ஜனநாயக சக்திகளும் அரசாங்கங்களும் 1967ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வை உடனடியாக நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டும்.

**(சுதத் அதிகாரி**
**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்,**
**சமாதானத்துக்கும் நட்புறவுக்குமான**
**இலங்கை அமைப்பு)**

# 'வெடி'மணியம்

\- தொடர்ச்சி

*விலைவாசி ஏழைகளின் வயிற்றில மட்டுமல்ல;*
*நடுத்தரகுடும்பங்களையும் நடுத்தெருவுக்கு கொண்டுவந்துவிட்டது.*

*கோட்டாபய அரசு சீனாவிடம் கையேந்தி வீணாக நாட்டை விற்று;*
*மீளமுடியாத கடனாளிகளாக நாட்டு மக்களை நடு ரோட்டில் கண்ணீர் சிந்த வைத்துவிட்டது.*

*30 வருட கொடிய போரில்....*
*கொடிய பொருளாதாரத் தடையை தமிழர் தாயகத்தில் பேரினவாத அரசுகள் விதித்தபோதும்;*

*இதுபோல எப்போதும் நடுவீதியில் தமிழர்கள் நின்று ஒப்பாரிவைத்து அழுததில்லை!*

*பசி, பட்டினி என்று யாரிடமும் கைநீட்டியதில்லை.*

*பிச்சைக்காரர்கள் இல்லாத தேசமாக சுமார் 20 வருடமாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழர் தேசம் தன்னிறைவு பெற்று நிமிர்ந்து நின்றது.*

*பெற்றோலும் மண்ணெண்ணையும் மின்சாரமும் இல்லாத தேசமாகவே பல ஆண்டுகளாக தமிழர் தேசம் இருந்தது.*

*ஆனாலும் அப்போது தமிழர் தேசம் இப்போது இருப்பதுபோல் “இருண்டு” கிடக்கவில்லை.*

*தன்னிறைவு பொருளாதாரத்தில் வன்னியும் யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் திருகோணமலையும் எப்போதும் நிமிர்ந்தே நின்றன.*

*தமிழர் தேசத்தில் குப்பிவிளக்கில் குண்டு மழையில் படித்துத்தான் பல ஆயிரம் பொறியியலாளர்களும் மருத்துவர்களும் உருவானார்கள்.*

*அப்போது எழுதுவதற்கு கொப்பியும் கிடையாது. பேனையும் கிடையாது.*
*மின்சாரமும் கிடையாது.*

*ஆனாலும் யாரும் கல்வியை கைவிடவில்லை. அதுதான் தமிழர் வரலாறு.*

*இது நூற்றாண்டுகளுக்கு முன் நடக்கவில்லை. கிட்டடியில நடந்த கதை!*

*ஆக;*

*தமிழர் தேசத்தில் சுமார் மூன்று தலைமுறைகள் இந்த பொருளாதாரத் தடை, விலைவாசி, மின் தடை, லொட்டு, லொசுக்கு எல்லாவற்றையும் பார்த்து அனுபவித்து தாண்டி வந்தவர்கள்.*

*2009இற்கு பின்னரான ஒரு புதிய தலைமுறைக்கு இந்த பொருளாதார நெருக்கடியும் விலைவாசியும் மின்தடையும் கஷ்டமாக இருக்கலாம்.*

*“ஐயோ அங்கர் இல்லை”*
*“ஐயோ பெற்றோல் இல்லை”*
*“ஐயோ அப்பிள் இல்லை”*
*“ஐயோ கறண்டு இல்லை”*

*என்று கூச்சலிடும் இந்த தலைமுறையை பார்த்து சிரிக்கிறதா ? அழுகிறதா? எண்டு தெரியவில்லை.*

*லுமாலா சைக்கிள்கள் துருப்பிடித்து வேலியோரம் குப்பையோடு குப்பையாக வீசப்பட்டு;*

*வீட்டு ரண்டு ஸ்கூட்டி பெப், மோட்டார்சைக்கிள் என்று திரிந்தார்கள்.*

*கூப்பிடு தூரம் எண்டாலும் ஆட்டோ!*
*ரியூசனுக்கு மோட்டார்சைக்கிள்!*
*கையில தொலைபேசி!*

*எண்டு இந்த தலைமுறையை சொகுசாக வாழப் பழக்கிவிட்டது யார் தவறு?*

*நாங்கள் பட்ட கஷ்டங்களை அடுத்த தலைமுறை அனுபவிக்கக்கூடாது என்ற ஆதங்கத்தில் “ஓவராக” இடம் குடுத்ததாலதான்;*

*அவர்கள் ரண்டு மணிநேரம் “கறண்ட்” இல்லையெண்டாலும் அழுகிறார்கள்.*

*பக்கத்தில இருக்கிற கடைக்கு சைக்கிளில் போக பஞ்சிப்படுகிறார்கள்.*

*ஒரு வகையில் “கோட்டாபய” நல்லது செய்திருக்கிறார் எண்டும் சொல்லல்லாம்.*

*கனவீடுகளில் இப்போது வேலியோடு வேலியாக கறள்பிடிச்சு கிடந்த “சைக்கிள்” மீண்டும் ஓடத்தொடங்கியிருக்கிறது.*

*ஒரு வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்களை நாங்களே உற்பத்திசெய்யவேணும் எண்ட “மனமாற்றம்” வந்திருக்கிறது.*

*வீட்டுக்கு ஒரு கோழி, ஆடு, மாடு வளக்கிறது எவ்வளவு முக்கியம் எண்டது உணரப்பட்டிருக்கிறது.*

*எது அத்தியாவசியம்?*
*எது ஆடம்பரம்?*

*எண்ட “தெளிவு” மக்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக வர ஆரம்பித்திருக்கிறது.*

*மணியத்தார் ஏற்கனவே பல தடவை சொன்னதுபோல;*

*தெற்கு மக்களுக்கு உது “புதுசு”*
*எங்களுக்கு உது “பழகிப்போன விசயம்”!*

*ஆனாலும்;*

*அசண்டையீனமாக நாங்கள் இருக்கக்கூடாது. இந்த இக்கட்டில் இருந்து தமிழர் தேசம் மீண்டு வரவேண்டியது மிக மிக அவசியம்.*

*கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் கற்றுக்கொண்ட பாடங்களை மனசில வைச்சு;*

*முன்னோக்கி நாங்கள் நகரவேணும்.*

*தெற்கிலே வீதியில் இறங்கி ஒப்பாரி வைக்கும் மக்களைப்பார்த்து;*

*ஆர்ப்பாட்டம் ஆட்டுக்குட்டி எண்டு ஒருபோதும் எங்கட சனம் வீதியில் இறங்கக்கூடாது.*

*ஆளும் கோட்டாவுக்கான “ எதிர்ப்பு” என்பது அவரை அரியணை ஏற்றிய பேரினவாத சிந்தனை கொண்ட அந்த*
*69 லட்சம் மக்களிடம் இருந்து வரட்டும்.*

*நாங்கள் வெறுமனே “வேடிக்கை” மட்டும் பார்ப்போம்.*

*சரி கடைசியாக;*

*“கோட்டா - சம்பந்தர்” பேச்சுப்பற்றி கதைச்சுப்போட்டு முடிப்பம்.*

*நாடு கிடக்கும் சீரழிஞ்ச நிலையில் “தமிழர்களுக்கான அரசியல் தீர்வு” பற்றி பேசும் தருணம் அல்ல இது !*

*அது சம்பந்தருக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் “கோட்டாவுக்கு” நல்லாவே தெரியும்.*

*முதலில் கோட்டாபயவை உடனடியாக சில நல்லெண்ண நடவடிக்கைகளை செய்யச்சொல்லி சம்பந்தர் இறுக்கமாக கேட்கவேண்டும்.*

*அப்போதுதான் “தமிழர்களுக்கான அரசியல் தீர்வு” பற்றி பேசுவதற்கான ஒரு நல்ல சூழல் உருவாகும்.*

*அதை விட்டுப்போட்டு நேரடியாகவே “அரசியல் தீர்வு” பற்றி கோத்தாவும் சம்பந்தரும் பேசினால்;*

*தெற்கிலே கோத்தாவின் கொடும்பாவியோடு சேர்ந்து சம்பந்தரின் கொடும்பாவியும் முழாசி எரியும்.*

*புரிஞ்சால் சரி!*

திகதி 24.03.2022
வியாழகக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4716
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,354,350.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,871,520.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 6 3 4 9 8 2

Mega POWER மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1064
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,556,600.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 243,695,582.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 37 42 50 71

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 746
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,503,940.00
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 15 57 60 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 104,060,827.60

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416



**ராஜபக்ஷ ஆட்சியிலேயே முதல் முறையாக உணவுக்கு பிற நாடுகளிடம் கையேந்துகிறோம்**

# ராஜபக்ஷக்களால் இனி ஆட்சிக்கே வரமுடியாது!

## விஜித ஹேரத் எம்.பி விசேட செவ்வி

**வாழ்க்கையில் மீண்டும் ஒருமுறை ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வரமுடியாது. வர விடவும் மாட்டோம். அவர்கள் மீண்டும் அமெரிக்காவுக்கே துரத்தியடிக்கப்படுவார்கள். ராஜபக்ஷக்களின் பெயர் உள்ளவர்களையும் மக்கள் நாட்டைவிட்டே அனுப்புவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

**'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**முழு செவ்வியும் வருமாறு:**

***நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வைப் பெறும் வகையில் முன்னெடுக்கப்பட்ட சர்வகட்சி மாநாடு குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?***

சர்வகட்சி மாநாட்டை கூட்டுவதற்கு முன்னர் நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டும். எங்களிடமுள்ள வெளிநாட்டுக் கையிருப்பு எவ்வளவு, நாங்கள் செலுத்தவேண்டிய கடன் தொகை எவ்வளவு, சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகள் எவை? அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்ன? என்பது தொடர்பாக எதுவும் சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகள் என்ன என்பதை முன்வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அதனை மறுத்துவிட்டு வெறும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இது அரசினுள் இருக்கும் முரண்பாட்டை தீர்ப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாட்டை தீர்ப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் ஏனைய கட்சிகளை அழைப்பதில் எவ்வித நன்மையுமில்லை. உண்மையான பிரச்சினை என்ன என்பதை முன்வைக்கும் போதே அதற்கான தீர்வை காண முடியும். எரிபொருள், எரிவாயு மற்றும் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை. மக்களின் வரிசைகள் குறைந்தபாடில்லை. மாறாக, அது வெறும் ஊடக விளம்பரமாகவே இருந்ததது.

***புதிய வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக சர்வகட்சி மாநாட்டில் பேசப்பட்டது. புத்தாண்டுக்கு முன்னர் அதனை கொண்டுவர முடியுமா?***

இந்தியா, சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, ரஷ்யா என உலகம் முழுவதும் கடன்பெறுவார்கள். இந்தக் கடனில் குறிப்பிட்ட தொகையை மானியத்திற்காக வழங்குவர். கடந்த வாரத்தில் மாத்திரம் ட்ரில்லியன் கணக்கில் பணம் அச்சிட்டனர். இலங்கை வரலாற்றிலேயே இந்த ஆட்சியிலேயே அதிக பணம் அச்சிடப்படுகின்றது. இவ்வாறு மீண்டும் பணத்தை அச்சிட்டு அதிலிருந்து 5 ஆயிரம் ரூபாவை மக்களுக்கு வழங்குவார்கள். கேட்டால் மானியம் எனக் கூறுவார்கள்.

**பொருளாதார வீழ்ச்சிக்கு சஜித்தும் ஒரு காரணம்**

புதுவருடத்திற்கு பணத்தை அச்சிட்டு மீண்டும் மீண்டும் நாட்டை கடன்சுமைக்குள் தள்ளுவதற்கே முயற்சிக்கின்றனர். விற்று சாப்பிடுவது, கடன் பெற்று சாப்பிடுவது மற்றும் கொள்ளையடித்து சாப்பிடுவது என்பதே இந்த அரசாங்கத்தின் கொள்கையாகவுள்ளது.

பணத்தை அச்சிட்டு மற்றும் கொள்ளையடித்த பணத்தில் மக்களுக்கு மானியம் வழங்குவதாகக் கூறுவதால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இது வெறும் கண்துடைப்பு மாத்திரமே. இதனால் மக்களுக்கு எவ்வித தீர்வும் கிடைக்காது.

***2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள போது எவ்வாறு மக்களுக்கான மானியத்தை வழங்க முடியும்?***

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், அந்த வரவு- செலவுத்திட்டத்திலுள்ள எதனையும் நிறைவேற்ற முடியாது, அது வெறும் புஸ்வானமாகி பிரயோசனமற்றதாகியுள்ளது. ஏப்ரலுக்கு முன்னர் இடைக்கால யோசனையாகவே முன்வைக்கப்படவுள்ளது.

இது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் இதுவரை மக்களால் தமிழ், சிங்கள புதுவருடத்தைக் கொண்டாட முடியாதுள்ளது. பாழாய்ப்போன அரசால் மக்களுக்கு நிம்மதி போயுள்ளது.

***பொருளாதார நெருக்கடிகள் குறித்து நீங்கள் அதிகம் பேசுகின்றீர்கள் இந்த பொருளாதார நெருக்கடிக்கு ஜே.வி.பியிடமுள்ள தீர்வென்ன?***

முதலில் பொருளாதார நெருக்கடி தொடர்பான உண்மையை மக்களுக்கு கூறவேண்டும். 24 மணித்தியாலத்தில் எங்களால் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும். வரிசைகளை இல்லாது செய்வோம், டொலர் பிரச்சினை இல்லை, எரிபொருள் பிரச்சினையில்லை என இவர்கள் பொய்யான விடயங்களையே கூறுகின்றனர். எனவே, உண்மையான பிரச்சினையை மக்களுக்குக் கூறவேண்டும்.

இரண்டாவது, ஊழல் மோசடிகளற்ற ஆட்சியை உருவாக்க வேண்டும். அரசாங்கம், எதிர்க்கட்சி என இரு தரப்புக்கும் அதனை செய்ய முடியாது. தேசிய மக்கள் சக்திக்கே ஊழலற்ற ஆட்சியை உருவாக்க முடியும்.

உள்நாட்டு உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால பொருளாதார திட்டங்களை வகுத்து உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும்.

மக்களும் அரசியல் தலைவர்களும் விட்டுக்கொடுப்புகள் மற்றும் அர்ப்பணிப்புகளுக்குத் தயாராகி சீர்குலைந்துள்ள நாட்டை கட்டியெழுப்புவதற்கான பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தையும் இதனூடக மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

***பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண நீண்டகாலம் செல்லுமா?***

அதனை கணிக்க முடியாது. இந்தியாவினால் பெற்ற கடனைக் கொண்டு இரு வாரங்களுக்கு நாட்டை கொண்டு செல்ல முடியும். சீனாவிடமிருந்து 2.5 பில்லியன் கடனை பெற்றால் அதிகபட்சம் 2 அல்லது 3 மாதங்களுக்கு நாட்டை கொண்டுசெல்ல முடியும். அதன்பின்னர் மீண்டும் நாடு அதலபாதளத்திற்குள் விழும்.

ஜூன் மாதத்தில் நாங்கள் ஒரு பில்லியன் டொலர் கடனை மீள செலுத்த வேண்டும். இவ்வருடத்தில் மாத்திரம் நாங்கள் 7 பில்லியன் டொலர் கடனை செலுத்தவேண்டியுள்ளது. ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலராக இருக்கும்போது இறக்குமதி வருமானம் 20 பில்லியன் டொலராக இருக்கின்றது. 8 பில்லியன் டொலர் பற்றாக்குறையாகவுள்ளது. மீள செலுத்த வேண்டிய கடன் 7 பில்லியன் டொலர் மற்றும் பற்றாக்குறை 8 பில்லியன் டொலருமாக 15 பில்லியன் டொலர் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் அனுப்பும் முழுத் தொகையின் வருமானம் 6 பில்லியன் என்றாலும் எங்களுக்கு 9 பில்லியன் டொலர் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனை பெற்றுக்கொள்வதற்கு எவ்வித வழிமுறைகளும் இல்லை என்பதால் கடன்சுமையில் சிக்கியுள்ள நாங்கள் மேலும் மூச்சுவிட முடியாதளவிற்கு தள்ளப்படுவோம்.

பெற்ற கடனை மீள செலுத்த முடியாதபோது, நாட்டின் சொத்துகளை விற்பனை செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். தற்போதுவரை திருகோணமலை எண்ணெய்த்தாங்கி, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம், கெரவலபிட்டி மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் என அனைத்தையும் அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கு விற்பனைசெய்தே நாட்டை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

நாட்டை அடகுவைத்தே இவர்கள் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்றனர். இலங்கை வரலாற்றில் இதுவரை உணவுக்காக யாரிடமும் கடன் கேட்டதில்லை. ராஜபக்ஷ ஆட்சியிலேயே முதல் முறையாக உணவுக்காக கடன் பெற்றுக்கொள்ள வேண்டிய மோசமான நிலைமைக்கு நாட்டை தள்ளியுள்ளனர். ராஜபக்ஷக்கள் இனியும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே முடியாது.

**சர்வதேச நாணய நிதியத்திடம் சென்ற எந்தவொரு நாடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டதாக வரலாறு கிடையாது**

***தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு கடந்த கால அரசாங்கமே பொறுப்பு என அரசாங்கம் கூறுகின்றது. இல்லை தற்போதைய அரசாங்கமே என எதிர்க்கட்சி கூறுகின்றது. உங்களுடைய கருத்தென்ன?***

இரு தரப்புகளும் பொறுப்புக் கூறவேண்டும். 1974ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிசெய்த இரு தரப்பும் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டும். இவர்களின் ஆட்சியிலேயே சீனி தொழிற்சாலை, ரயர் தொழிற்சாலை போன்றவற்றை சீர்குலைத்து உற்பத்தி பொருளாதாரத்தை இல்லாதொழித்தனர்.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பில் நைலோன், யூரியா உரம் போன்ற உற்பத்திகள் முன்னெடுக்கப்பட்டன. வாகனங்கள் தயாரிக்கப்பட்டன. நாட்டில் உற்பத்திகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவர்களின் ஆட்சியில் அனைத்துத்துறையும் சீர்குலைக்கப்பட்டதால் ரணில், மஹிந்த மற்றும் கோட்டாபய என அனைத்து தரப்பும் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். பெசில் ராஜபக்ஷ அமெரிக்காவின் பொருளாதாரத்திற்காகவே செயற்படுகின்றார். இதுவரை அவர் அமெரிக்காவின் குடியுரிமையை நீக்காது நாட்டை காட்டிக்கொடுக்கின்றார். பின்னர் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுவிடுவார். அடுத்த மாதத்தில் அவர் மீண்டும் அமெரிக்கா செல்லவுள்ளார். அவர்களுக்கு நாடு குறித்து எவ்வித கவலையுமில்லை.

**பிற நாடுகளிடமிருந்து கடன் பெற்றும் பணம் அச்சிட்டுமே மானியம் வழங்குவார்கள்**

***சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வது குறித்து உங்களுடைய நிலைப்பாடு என்ன?***

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்ற எந்தவொரு நாடும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டதாக வரலாறு கிடையாது. அதன் கடன் மானியங்களால் மேலும் மேலும் வீழ்ச்சிகண்டுள்ளது. ஒரு கடனை மீளச் செலுத்துவதற்கு மற்றொரு கடனுமாக மாறி மாறி கடன் பெற்று கடன் சுமைக்குத் தள்ளப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் இரகசியமானது என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவே கூறியுள்ளார் என்றால், அந்த யோசனைகள் எங்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும்.

குறிப்பாக, ரூபாவின் பெறுமதியை அதிகரித்தல், அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், வருமான மற்றும் வெற் வரியை திருத்தம் செய்தல் மற்றும் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்டவற்றின் விலைகளை அதிகரித்தல் போன்ற சர்வதேச நாணய நிதியத்தின் யோசனைகளாகவுள்ளன. அதற்கமையவே, தற்போது வரி அதிகரித்தல், விலைகளை அதிகரித்தல் போன்றன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

***நீங்கள் அரசாங்கத்தின் குறைபாடுகளை மக்களுக்கு தெளிவுபடுத்தினாலும், 2015இல் வீட்டுக்கு அனுப்பிய ராஜபக்ஷக்களை மீண்டும் மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தெரிவுசெய்தனர். இவர்களை உங்களால் ஆட்சியிலிருந்து நீக்க முடியுமா?***

வாழ்க்கையில் மீண்டும் ஒருமுறை ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வரமுடியாது. வர விடவும் மாட்டோம். ராஜபக்ஷக்களின் பெயர் உள்ளவர்களையும் மக்கள் நாட்டை விட்டே துரத்தியடிப்பார்கள். வரிசைகளில் நின்று துன்பத்தை அனுபவிக்கும் மக்களின் எதிர்ப்புகள் வெடிக்க ஆரம்பித்துள்ளதால் வெகு விரைவில் ராஜபக்ஷக்கள் மீண்டும் அமெரிக்காவிற்கே துரத்தியடிக்கப்படுவார்கள். இனியொரு போதும் ராஜபக்ஷக்களை மக்கள் ஆட்சிக்கு கொண்டுவர மாட்டார்கள்.

***உங்களுடைய கூட்டங்களை பார்க்கவும் உரைகளைக் கேட்பதற்கும் நன்றாக இருந்தாலும் உங்களால் ஆட்சியமைக்க முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?***

பொறுத்திருந்து பார்ப்போம். இவ்வாறு பகல் கனவு கண்டு மகிழ்ந்தவர்கள் பலர் இருக்கின்றனர். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என மத பேதமின்றி மக்கள் இன்று ஜே.வி.பியுடன் ஒன்றிணைந்துள்ளனர். வடக்கு, கிழக்கு மக்களும் புதிய அரசியல் மாற்றத்திற்காக எங்களுடன் ஒன்றிணைந்துள்ளனர். ராஜபக்ஷ ஆட்சியை விரட்டியடித்து மக்களாட்சியை கொண்டுவருவதற்கு தேசிய மக்கள் சக்தியுடன் இன, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

***பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும்போது, மூன்றாவது தரப்பாக உங்களால் ஆட்சியமைக்க முடியுமா?***

நிச்சயமாக ஆட்சியமைப்போம். மக்கள் அலை எங்களுடன் இருக்கின்றது. அதுபோன்றதொரு மக்கள் அலை சஜித் தரப்புக்கு இல்லை. முட்டாள்தனமான கருத்துகளைக் கூறும் அவர்களுடன் யாரும் இணையப்போவதில்லை. சஜித் பிரேமதாச என்பவர் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பங்காளி என்பதால் மக்கள் இவர்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதனால், ஐக்கிய மக்கள் சக்தியை விட தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கே மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.



நேர்காணல்:
யோ.தர்மராஜ்
dharmarajmayuran@gmail.com

# தேர்தல் இப்போதைக்கு கிடையாது



**அமைச்சர் எஸ்.பி. 'தமிழன்' வார இதழுக்கு பிரத்தியேக செவ்வி**

**நேர்காணல்:- நா.தினுஷா**

**தேர்தல் விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருப்பதற்கான நேரம் இதுவல்ல அதற்கான சந்தர்ப்பமும் தற்போது இல்லை. பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளேயே நாம் தற்போது சிக்கியுள்ளோம். ஆகவே, இந்தப் பிரச்சினையிலிருந்து முன்னோக்கி செல்ல வேண்டியதே தற்போதுள்ள கட்டாயத் தேவை - என கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.**

**'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியின் போதே இதனைக் குறிப்பிட்டார். அவருடனான நேர்காணலின் முழு விபரம் வருமாறு,**

**புதிய அமைச்சுப் பதவியொன்று உங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றனவா?**

வெற்றிகரமாக எனது கடமைகளை ஆரம்பித்துள்ளேன். தொழிற்றுறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையிலேயே இந்த அமைச்சை பொறுப்பேற்றுள்ளேன். எனது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை திரட்டி வருகிறோம்.

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பில் சரியான தகவல்களை திரட்டிக்கொள்ள வேண்டியதே தற்போதைய நிலைமையில் முக்கிய தேவையாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து அமைச்சின் நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளேன்.

**உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சினூடாக எவ்வாறான கடமைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளீர்கள்?**

**உருப்படாத எதிர்க்கட்சியே சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றவில்லை.**

கைத்தொழில் அமைச்சே எனக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நாட்டை அபிவிருத்தியடையச் செய்யக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவ்வாறு அபிவிருத்திச் செய்யக்கூடிய தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதனூடாக எமது உற்பத்தித்துறையை மேலும் ஊக்குவிக்கக்கூடியதாக இருக்கும்.

அதேபோன்று நாடளாவிய ரீதியில் அநேகமான சிறியளவிலான தொழிற்சாலை உரிமையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை பொருளாதார ரீதியாகவும், நிவாரணங்களினூடாகவும் ஊக்குவித்தால் அவர்களினூடாக நாட்டுக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மறுபுறம் தற்போதுள்ளதைவிட புதிய பாரியளவிலான தொழிற்சாலைகளை உருவாக்கக்கூடிய வளங்களும், வாய்ப்புகளும் எம்மிடம் இருக்கின்றன. அதேபோன்று பெரும்பாலான தொழிற்சாலைகள் பல்வேறு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளன. நாட்டுக்கு வருவாய் சேர்க்கும் வகையில் இயங்கிவந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டமையினால் அது மேலும் எமது உற்பத்தி பொருளாதாரத்தை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

சீனி தொழிற்சாலை, கடதாசி தொழிற்சாலை, டயர் உற்பத்தி தொழிற்சாலை, சீமெந்து உற்பத்தி தொழிற்சாலைகள் என

**★நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.**

பல்வேறு தொழிற்சாலைகள் வெவ்வேறு காரணங்களுக்காக மூடப்பட்டு தற்போது இயங்காமலிருக்கின்றன. அவற்றை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

**மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மீண்டும் திறப்பது தொடர்பில் ஏதேனும் திட்டங்கள் இருக்கின்றனவா?**

தற்போது அதுதொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். தற்போதுள்ள நிலையில் அவற்றை அவசரமாக மீண்டும் ஆரம்பிக்க முடியாது. மூடப்பட்ட தொழிற்சாலைகளை விரைவாக மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமானால் தேவையான முதலீகள் அவசியமாகும். அவற்றை மீள ஆரம்பிப்பதற்கான முதலீடுகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாடு தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? அந்த மாநாடு சாதகமாக அமைந்தது எனக் கருதுகிறீர்களா?**

அரசாங்கத்தரப்பு உள்ளிட்ட ஏனைய கட்சி தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை என்று பார்க்கும்போது அது சாதகத்தன்மையையே வெளிப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு கட்சியும் அவற்றின் நிலைப்பாடு களையும், எதிர்பார்ப்புகளையும் அறிவித்திருந்தன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது தேசிய பிரச்சினையாகும். ஆகவே, வடக்கு தமிழ்க் கட்சிகளுக்கும் இந்த தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது என்பது இந்த சர்வகட்சி மாநாட்டினூடாக சகலரும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட தரப்பினரும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் நிலைப்பாடுகளையும் தெரிவித்திருந்ததோடு, வடக்கு பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடி இருந்தார்கள். இதனை சிறந்த முன்னேற்றமாகவே நாங்கள் கருதுகிறோம்.

**சர்வகட்சி மாநாட்டின் பின்னரான அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன?**

நடந்துமுடிந்த சர்வகட்சி மாநாட்டில் பங்காளிக் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட சகல கருத்துகளையும் திரட்டி, ஜனாதிபதியினால் தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. அந்தக் குழுவினூடாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து கிடைக்கும் பரிந்துரைக்கமைய அடுத்த சர்வகட்சி மாநாட்டை நடத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். அதற்காமைய அடுத்த மாநாட்டுக்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

சர்வக்கட்சி மாநாட்டில் அரசியல் கட்சி தலைவர்களினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான திட்டங்களை வகுக்கவேண்டும். அதன்பின்னர் மீண்டும் சகல அரசியல் கட்சி தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும்.

எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஒருசில தினங்களில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். அதன்பின்னர் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படும்.

**ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றியிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பிரதான எதிர்க்கட்சிகள் இந்த மாநாட்டை புறக்கணித்திருந்தன. இதுதொடர்பில் உங்களின் நிலைப்பாடு?**

நாட்டின் மீது பற்றும், அக்கறையும் இல்லாதவர்களே சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றவில்லை. மாறாக, நாட்டை தற்போதுள்ள நிலைமையிலிருந்து கட்டியெழுப்ப வேண்டும், அபிவிருத்தியின் பாதையில் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களே இந்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தார்கள் என நான் நினைக்கிறேன்.

நாட்டை நேசிப்பவர்களாக இருந்தால், பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டுமென்ற அவசியம் இருக்குமாக இருந்தால், மக்கள்படும் கஷ்டம் தொடர்பில் ஏதேனும் கவலை இருந்தால் அனைவரும் பங்குபற்றியிருப்பார்கள். அவ்வாறு அக்கறையுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொண்டிருந்தமை வரவேற்கத்தக்கதாகும்.

எதிர்க்கட்சிக்கு நாடு தொடர்பிலோ நாட்டிலுள்ள மக்கள் குறித்தே எவ்வித கவலையும் இல்லை. நடப்பது நடக்கட்டும். இறுதியில் தம்மால் ஆட்சிக்கு வர முடியும் என எண்ணும் உருப்படாத எதிர்க்கட்சியே இந்த மாநாட்டில் பங்குபற்றவில்லை.

**நாட்டில் ஒவ்வொரு பிரதேசத்திலும் எரிபொருள், சமையல் எரிவாயு உள்ளிட்ட அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்தும் பொருட்களுக்கு மக்கள் வரிசையில் காத்திருந்து அவதியுறும் நிலையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா?**

டொலர் நெருக்கடியே, மக்கள் பொருட்களுக்காக வரிசையில் காத்திருக்கும் நிலை உள்ளிட்ட மக்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் காரணமாகும். இந்த டொலர் நெருக்கடிக்கு பிரதானமாக காரணம் கடந்த நல்லாட்சி அரசாங்கம் என்பதை மறுக்க முடியாது.

கடந்த அரசாங்கம் திறந்த சந்தையில் பன்னாட்டு முறியை விநியோகித்து, 13 பில்லியன் ரூபாவை பெற்றுக்கொண்டது. அதனூடாகவே நாட்டில் தற்போது இந்த டொலர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பாரியளவான கடன்களை பெற்றுக்கொண்டது மாத்திரமல்லாமல், 7 மற்றும் 8 சதவீதமாக இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 2 சதவீதமாக வீழ்ச்சியடையச் செய்திருந்தது.

அதன்பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாடு கையளிக்கப்பட்டது. டொலர் நெருக்கடிக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் கடந்த அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். அதேபோன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்றதும் கொரோனா தொற்று நிலை நாட்டை ஆக்கிரமித்தது.

இந்த தொற்று நிலைமை ஏற்பட்ட முதலாவது கட்டத்தில் அதனை எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருந்தது. அதன்போது சீனாவிலேயே கொரோனா பரவல் தீவிரமாக இருந்தது. அதனைத் தொடர்ந்து நாட்டில் இரண்டாம், மூன்றாம் என புதிய கொரோனா அலைகள் உருவாவதற்கான காரணம் எதிர்க்கட்சியாகும்.

ஆசிரியர்கள், விவசாயிகள், சுகாதார சேவையாளர்கள் அனைவரும் வீதிக்கு இறங்கி போராட்டம் செய்தது மட்டுமல்லாமல் பேரணி சென்றனர். அதனைத் தொடர்ந்து இந்த நோய்நிலைமை தீவிரமாக பரவலடைய ஆரம்பித்தது. இந்தப் போராட்டங்களையும் எதிர்க் கட்சியே ஏற்பாடு செய்திருந்தது. இதனூடாகவே நோய் நிலைமை மேலும் அதிகரித்தது.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை ஊக்குவிக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்தது. தடுப்பூசி வேலைத்திட்டங்களினூடாக உலக நாடுகளின் மத்தியில் நான்காம், ஐந்தாம் இடத்தைப் பிடித்துள்ளோம்.

**அரசுக்குள் எந்த முரண்பாடும் இல்லை.**

இதனைத் தொடர்ந்து மீண்டும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. அது மாத்திரமின்றி எமது நாட்டவர்கள் வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகளை நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர். இதேவேளை, ஆடை தயாரிப்புக்கான முதலீடுகளும் தற்போது அதிகரித்துள்ளன. இதனூடாக இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

**தொழிற்றுறையை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை முன்வைத்தாலும் தற்போதுள்ள நிலையில் உணவகங்கள் மூடும் நிலை உருவாகியுள்ளதே?**

எரிவாயு நெருக்கடியின் காரணமாகவே இந்தச் சூழ்நிலை உருவாகியுள்ளது. எரிவாயு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எரிவாயு விநியோக நடவடிக்கைகள் சீரானதும் இந்த நிலைமை வழமைக்குத் திரும்பும்

**இலங்கைக்கு உத்தியாகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி செயலாளர் விக்டோரியா நுவாண்ட் தலைமையிலான குழுவினர் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியிருந்தார். இதுதொடர்பில் என்ன கருதுகிறீர்கள்?**

தேர்தல் விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருப்பதற்கான நேரம் தற்போது இல்லை. அதற்கான சந்தர்ப்பமும் தற்போது இல்லை. பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளேயே நாம் தற்போது சிக்கியுள்ளோம். அதேபோன்று தேர்தலுக்கான முறைதொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது. ஆனால், இதுவரையில் அதுதொடர்பில் எவ்வித இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

ஆகவே தேர்தல் முறை தொடர்பில் சரியான இறுதித் தீர்மானமொன்றை எடுத்ததன் பின்னர் உரிய நேரத்தில் தேர்தலை நடத்த முடியும்.

**இராஜாங்க அமைச்சராக கடமையாற்றிய நிமல் லான்சா எம்.பி. தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகியிருந்தார். இவ்வாறு அரசாங்கத்துக்குள்ளிருக்கும் அமைச்சர்கள் பதவி விலகக் காரணம் என்ன?**

நிமல் லான்சா எம்.பியின் இராஜாங்க அமைச்சுப் பதவிக்குள் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாகவே அவர் பதவி விலகியிருந்தார். அதனால், அராங்கத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்துடன் இணைந்து தொடர்ந்து கடமையாற்றிக்கொண்டே இருக்கிறார். அமைச்சரவை அமைச்சருக்கும், இராஜாங்க அமைச்சருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாகவே அவர் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

**அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளில் முரண்பாடு காணப்படுகின்றதல்லவா?**

பங்காளிக் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளில் எவ்வித குளறுபடிகளும் இல்லை. சுமுகமான முறையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதுபோன்ற நெருக்கடியான சூழ்நிலையில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியதே அவசியமாகும். அதற்கு மாறாக கட்சிகளுடன் முரண்படுவதால் பிரச்சினைகளுக்கு தீர்வுக் காணமுடியாது. தற்போதுள்ள நிலைமையில் சகலரும் ஒற்றுமையாகவே செயற்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைக் கமையவே சர்வ கட்சி மாநாடு நடத்தப்பட்டது. அவர்களுடனான பேச்சுவார்த்தைகள் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**நல்லாட்சி அரசாங்கத்தின் கவனயீனமே தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு காரணம்**

படப்பிடிப்பு: லலித் பெரேரா



# குறுகிய காலத்திற்குள் வெறுப்பை பெற்றுள்ள கோட்டாபய அரசாங்கம்

இலங்கை சுதந்திரமடைந்து 74 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், பிரித்தானியாவின் பிடியிலிருந்து 1948இல் விடுபட்டு இலங்கையில் 1947இல் சோல்பரி அரசியலமைப்பினூடாக நாடாளுமன்ற ஆட்சி உருவாக்கப்பட்டது. அந்த வகையில் இலங்கையில் செல்வாக்குப் பெற்ற கட்சியாக டி.எஸ்.சேனநாயக்கவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டது. இதன் பிரகாரம் 1947இல் இடம்பெற்ற இலங்கையின் முதலாவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 42 ஆசனங்களைப் பெற்று வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. அத்துடன், இலங்கையின் முதல் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற டி.எஸ்.சேனநாயக்க 1952இல் அகால மரணமடைந்தார். இதனைத் தொடர்ந்து அவரது மகனான டட்லி சேனநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஆனாலும், 3 மாதங்கள் கழிந்த பின்னர் 1953இல் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தியதுடன், அந்தத் தேர்தலில் டட்லியின் தலைமையிலான ஐ.தே.க. 54 ஆசனங்களை வெற்றிகொண்டு மீண்டும் ஆட்சியமைத்தது. ஆனால், அன்றைய அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜயவர்தன அரிசிக்கான விலையை அதிகரிப்பு செய்ததால் எதிரணியிலிருந்த இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஒரு பிரஜை உயிரிழந்தார். இதன் காரணமாக டட்லி தனது பதவியை இராஜினாமா செய்தார். இதன் பிரகாரம் அன்றைய ஆளுநர் சேர்.ஜோன் கொத்தலாவலவை பிரதமராக நியமித்தார். இவ்வாறான நிலையில் ஐ.தே.க. அரசில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஐ.தே.கவை விட்டு வெளியேறியதுடன், 1951இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். 1956இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை முன்னிலைப்படுத்தி மக்களின் ஏகோபித்த ஆதரவோடு இலங்கையின் 4ஆவது பிரதமராக பதவியேற்றார். ஆனால், தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாத காரணத்தினால் 1959 செப்டெம்பர் மாதம் பிக்கு ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதன்பின்னர் இடைக்கால பிரதமராக டொக்டர் தஹநாயக்க நியமிக்கப்பட்டார். அவர் 6 மாதங்கள் அப்பதவியில் இருந்தார். பின்னர் 1960 மார்ச் மாதம் பொதுத் தேர்தல் இடம்பெற்றதுடன், ஐ.தே.க. 50 ஆசனங்களையும், ஸ்ரீல.சு.க. 46 ஆசனங்களையும் பெற்றதுடன், ஐ.தே.க. டட்லி சேனாநாயக்கவின் தலைமையில் ஆட்சியமைத்தபோதிலும் சிம்மாசன உரையின் வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததால் நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட்டு, 1960 ஜூலை மாதம் மற்றுமொரு பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இதில் ஸ்ரீல.சு.க. 75 ஆசனங்களை வெற்றிகொண்டதுடன், சிறிமாவோ அம்மையாரின் தலைமையில் ஆட்சிபீடமேறியது. உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் அவர் பெற்றுக்கொண்டார்.

ஆனால், 1970 மே மாதம் முதல் 1977 மே மாதம் வரை ஏழாண்டுகள் ஆட்சிசெய்த கூட்டணி திட்டமிடப்படாத பொருளாதார நடவடிக்கையினால் மக்கள் இருண்ட யுகத்துக்குள் பயணித்ததுடன், பட்டினிச்சாவையும் எதிர்கொண்டனர். அத்துடன், தேர்தல் வாக்குறுதியாக சந்திரமண்டலம் சென்றேனும் இரண்டு பங்கு அரிசியை இலவசமாகத் தருவதாகக் கூறியே ஆட்சிபீடமேறினர். ஆனால், எதுவும் இடம்பெறவில்லை. மாறாக கறுப்புச்சந்தையும், கியூ வரிசையும், கூட்டுறவு கொள்ளையர்களும் உருவாகினர்.




இதுபோன்று 1977இல் ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான ஐ.தே.க. தேர்தல் வாக்குறுதியாக திறந்த பொருளாதாரம், 8 இறாத்தல் உணவு, தமிழ் மக்களுக்கான தீர்வு போன்ற வாக்குறுதிகளை வழங்கியதுடன், 5/6 பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடமேறியது. ஆனாலும், இருளில் மூழ்கிக் கிடந்த இலங்கையில் திறந்த பொருளாதாரம் காரணமாக நாட்டின் அனைத்துத்துறைகளும் பிரகாசிக்கத் தொடங்கியதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரணமாக 70 சதவீதமான பொதுமக்கள் சிறந்த அந்நிய செலாவணியைப் பெறலாகினர். அத்துடன், அரசமற்றும் தனியார்துறைகளில் 1977 முதல் 1985 வரையிலான காலப்பகுதிக்குள் பத்து இலட்சம் பேர்வரை சகலதுறைகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். கொள்ளையர்களின் பிடியில் சிக்கியிருந்த கறுப்புச்சந்தை விடுவிக்கப்பட்டு அத்தியாவசிய அனைத்துப் பொருட்களும் நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையுடன் விநியோகிக்கப்பட்டன. பிறிமா மா ஆலை உட்பட மேலும் பல கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு நாடு நல்லதொரு நிலையில் பயணித்தவேளையில்தான் தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் 1983 இல் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி ஆயுதப்போராட்டமானது வடக்கு கிழக்கை மட்டுமின்றி முழு இலங்கையையும் பாதித்தது. ஆனாலும், நாட்டில் யுத்தம் இடம்பெற்றாலும் 1977 முதல் 1994 வரை நுகர்வோரைப் பாதிக்காத நிலையில், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. குறிப்பாக, 1977 இல் 1 ரூபா 10 சதமாக இருந்த பாணின் விலையை ஜயவர்தனவின் அரசாங்கம் 60 சதமாகக் குறைத்தது. மேற்படி பாணின் விலையானது 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை 5 ரூபா 10 சதமாகவே காணப்பட்டது. ஆனால், 1994 ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சந்திரிகா அம்மையார் 3 ரூபா 50 சதத்துக்கு பாண் தருவதாகவும், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனவும் கூறியே ஆட்சிபீடமேறினார். ஆனால், அவரது பத்தாண்டு ஆட்சியில்தான் அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாடின்றி விலையேறியதுடன், போதைப்பொருள் வியாபாரிகளும் முளையிட ஆரம்பித்தனர். அத்துடன், தமிழர்களுக்கான தீர்வு நாடாளுமன்றில் கொண்டுவந்து விவாதிக்கப்பட்ட போதிலும் இறுதியில் செல்லாக்காசாகியது.

ஆனால், இலங்கையில் ஸ்ரீல.சு.க ஆட்சியிலிருந்த சமயமெல்லாம் நாட்டில் பசியும், பட்டினியும், பொருட்களுக்கான கியூ வரிசையும், பணத்தட்டுப்பாடும், பொருட்களுக்கான உச்சநிலை விலையேற்றமும், இலஞ்சம், ஊழல் மோசடிகளும், பாலியல் துஷ்பிரயோகங்களும், கொள்ளை - கொலைகளும், அடக்குமுறைகளும், மத நிந்தனைகளும், கலாசார சீரழிவுகளும், வேலைநிறுத்தங்களும் கட்சி உட்பூசல்களும் சிறுபான்மையினருக்கு எதிரான அடாவடித்தனங்களும், வெள்ளை வேன் கடத்தல்களும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளும், தற்கொலைகளும் பதிவாகிய சம்பவங்களே காணப்படுகின்றன.

இலங்கையில் 1947 முதல் 1989 வரை அரசியல் தலைவர்கள் தங்களின் வெற்றிக்காக அத்தியாவசியப் பொருட்களான மாவு, அரிசி, பருப்பு போன்றவற்றைப் பயன்படுத்தியே தேர்தலில் வெற்றி பெறலாகினர். ஆனால், 1983இல் நாட்டில் தமிழ்க் குழுக்கள் ஆயுதமேந்தியதிலிருந்து புலிகள் என அழைக்கப்பட்டதுடன், உள்நாட்டில் மட்டுமன்றி உலக அரங்கிலும் புலிகள் இயக்கம் பேசுபொருளாக மாறியதுடன், தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் அவர்களை முன்னிலைப் படுத்தி அரசியல் செய்யும் வாய்ப்புகளும் கிடைத்தன. கடந்த 1989 முதல் அதன்பின்னர் ஆட்சியலமர்ந்த சந்திரிகா, ரணில், மஹிந்த மற்றும் சிங்கள அமைப்புகள், சிறு சிறு அரசியல் தலைவர்கள், பௌத்த பிக்குகள் போன்றவர்கள் அரசியலில் தங்களின் செல்வாக்கை மக்களின் மத்தியில் திணிப்பதற்கு புலிகளை தங்களின் ஆயுதமாக எடுத்துக்கொண்டனர்.

ஆனாலும், 2005இல் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா அம்மையாரின் அரசில் பிரதமராக விளங்கிய மஹிந்த ராஜபக்ஷ களமிறங்கியதுடன், தேர்தல் வாக்குறுதிகளாக இலங்கையில் முன்னர் இருந்த சிங்களத் தலைவர்கள் செய்த தவறை நான் ஒருபோதும் செய்யப்போவதில்லை, நிறைவேற்றதிகார ஜனாதிபதியை இல்லாமல் செய்வேன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன் என்ற வாக்குறுதிகளோடும் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஆனால், 2009இல் நாட்டில் 30 வருடகாலமாக நிலவிய யுத்தத்தை நிறைவுசெய்த கையோடு இலங்கை மக்களினாலும் சர்வதேச நாடுகளினாலும் புகழப்பட்டார், போற்றப்பட்டார். இதன் காரணமாக "யுத்தத்தை முடித்துவைத்த சித்தன் நானே" என்ற போதை மஹிந்தவின் தலையிலேறி தலைவிரித்தாடியதால், நாட்டு மக்கள் எதிர்பார்த்த நல்ல விடயங்களுக்குப் பதிலாக நாட்டில் வேண்டத்தகாத பலதரப் பட்ட மோசடிகளும், ஊழல்களும், அடக்குமுறைகளும், அடாவடித்தனங்களும், முஸ்லிம் மக்களுக்கெதிரான தாக்குதல்களும் ராஜபக்ஷவின் பத்தாண்டு அதிகாரத்துக்குள் இடம்பெற்றதுடன், யுத்தம் முடிவடைந்த நிலையிலும், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகளும் விஷம்போல் ஏறலாகின. நாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து காணப்பட்டன. ஆனாலும், யுத்தத்தை முடித்துவைத்தவர் என்றவகையில் அவர் எதைச் செய்தாலும் சிங்களவர்கள் அதனைக் கண்டுகொள்ளவே இல்லை. ஆனால், தமிழ் மக்களும், முஸ்லிம்களும் குறிப்பிட்ட சில எண்ணிக்கையிலான சிங்கள மக்களும், ராஜபக்ஷ மீது வெறுப்புக்கொண்டனர்.

இந்த நிலைமையில்தான் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு வருடங்கள் இருக்கையில், 2015இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அவர் ஏற்பாடுசெய்தார். ஆனாலும், அவரோடு இருந்து பிட்டும், தேங்காயும்போல் விளங்கிய மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக சந்திரிகா, ரணில் மற்றும் ஏனைய சிறுபான்மை கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து வேட்பாளராக நிறுத்தினர். ஆனாலும், சிங்கள மக்களின் செல்வாக்கைப் பெற்றவராக ராஜபக்ஷ காணப்பட்ட நிலையில், மைத்திரியினால் சிங்கள மக்களின் வாக்குகளில் 37 சதவீதத்தையே பெறக்கூடியதாக இருந்ததுடன், அவரது வெற்றிக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே வெற்றியைப் பெற்றுக்கொடுத்தன. அத்துடன், 2015 ஓகஸ்ட் மாதம் ஸ்ரீல.சு.க. மற்றும் ஐ.தே.க. இணைந்து நல்லாட்சியை உருவாக்கின. ஆரம்பத்தில் மைத்ரியும், ரணிலும் ஒன்றுபட்டு செயற்பட்டனர். ஆனால், ஒரு வருடம் கழிந்த நிலையில் மைத்ரிக்கும், ரணிலுக்கும் ஏற்பட்ட தீராத உட்பூசல் காரணமாக அரசாங்கத்துக்குள் பாரிய பிரச்சினை தலைதூக்க ஆரம்பித்தது. இதனால் பெரும் எதிர்பார்ப்புகளுடன் வாக்களித்த மக்கள் ஏமாற்றமடைந்தனர். குறிப்பாக, முஸ்லிம் மக்கள் இனவாதக் கும்பல்களினால் தாக்கப்பட்டனர். அவர்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துகள் சூறையாடப்பட்டன.

ஆனாலும், நல்லாட்சியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. இலஞ்சமும், ஊழல் மோசடிகளும் தலைவிரித்தாடின. அத்துடன், ஜனாதிபதி மைத்ரிக்கும், பிரதமர் ரணிலுக்குமிடையில் ஏற்பட்ட தீராத குரோதம் காரணமாக நல்லாட்சி படிப்படியாகக் கரைந்து சென்றது. இத்தனைக்கும் ரணிலின் பிடிவாதம் மிதமிஞ்சிய நடவடிக்கைகளே காரணமாக இருந்தன. 19ஆவது திருத்தத்தின் வாயிலாக ஜனாதிபதிக்கான சில அதிகாரங்களை அகற்றிய கையோடு, அதனை மையமாக வைத்து ரணில் கட்டுக்கடங்காமல் ஏதோ தானே ஜனாதிபதி என்ற நினைப்பில் செயற்பட்டதன் காரணமாகவே நல்லாட்சியின் பிழைப்பு கெட்டது என்றால் மிகையாகாது. ஆனால், மைத்ரியுடன் இணைந்து ரணில் செயற்பட்டிருந்தால் ராஜபக்ஷக்களின் ஆதிக்கம் தலைதூக்கியிருக்காது. இதனை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட மஹிந்த ராஜபக்ஷ, மொட்டு அணியை புதிதாக உருவாக்கியதுடன், 2018இல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சி, ஐ.தே.க. மற்றும் ம.வி.மு. ஆகிய கட்சிகளை பின்தள்ளி அபார வெற்றியை மொட்டு பெற்றது.

இந்நிலையில், புத்துயிர் பெற்ற ராஜபக்ஷ, 2019இல் இடம்பெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த தனது சகோதரர் கோட்டாபயவை வேட்பாளராக நிறுத்த மேற்கொண்ட நடவடிக்கையின்போதே 2019 ஏப்ரல் 21இல் சஹ்ரான் கும்பல்களினால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களினால் தேவாலயம் மற்றும் ஹோட்டல்கள் தகர்க்கப்பட்டதுடன், பல உயிர்கள் பலியாயின. பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகளும் சேதமாக்கப்பட்டன. இதனை மையமாக வைத்து நாட்டில் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளதாக குற்றஞ்சாட்டி முஸ்லிம் பயங்கரவாதிகள் எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சத்தை சிங்கள மக்களின் மத்தியில் பரப்பி நாட்டில் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், அச்சமின்றியும் வாழவேண்டுமானால் கோட்டாபய போன்ற இரும்பு மனிதருக்கு வாக்களித்து இந்நாட்டின் தலைவராக்க அனைத்து சிங்கள மக்களும் ஓரணி திரளுமாறு பிக்குகள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்தனர். அத்துடன், ஐ.தே.கவுக்குள் ஏற்பட்ட அதிகாரப்போட்டியின் காரணமாக சஜித்துக்கு அனுமதியளிக்க ரணில் மறுத்ததன் காரணமாகவும், பின்னர் இறுதி நேரத்தில் விட்டுக்கொடுத்ததினாலும், சஜித்துக்கு மக்களின் மத்தியில் பிரசாரம் செய்ய போதிய காலம் இல்லாமையினாலும், அவரால் போதிய சிங்கள வாக்குகளைப் பெற முடியாமல் போனது.

சஜித் ஜனாதிபதியாக வருவாரென தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்ததுடன், தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம் பகுதிகளில் பெரும்பாலான வாக்குகளை வழங்கிய போதிலும் சிங்களப் பிரதேசங்களில் சஜித்துக்கு 31 சதவீத வாக்குகளே கிடைக்கப் பெற்றதுடன், கோட்டாபய இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளை பெற்று இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாகத் தெரிவானார். அதனடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஜனாதிபதிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விபரம் ஒரே பார்வையில் பின்வருமாறு:-

**1982 - ஜே.ஆர்.ஜயவர்தன (ஐ.தே.க) 34,50,811 (52%)**
**ஹெக்டர் கொப்பேகடுவ (ஸ்ரீல.சு.க.) 25,25,680**

**1988 - ஆர்.பிரேமதாச (ஐ.தே.க) 25,62,419 (52%)**
**சிறிமாவோ பண்டாரநாயக்க (ஸ்ரீல.சு.க) 23,09,210**

**1994 - சந்திரிகா குமாரதுங்க (ஸ்ரீல.சு.க.) 47,20,743 (62%)**
**சிறியாணி திசாநாயக்க (ஐ.தே.க) 27,30,407**

**1999 - சந்திரிகா குமாரதுங்க (ஸ்ரீல.சு.க.) 43,07,640 (52%)**
**ரணில் விக்ரமசிங்க (ஐ.தே.க) 36,28,235**

**2005 - மஹிந்த ராஜபக்ஷ (ஸ்ரீல.சு.க) 48,88,610 (52%)**
**ரணில் விக்ரமசிங்க (ஐ.தே.க) 47,07,375**

**2010 - மஹிந்த ராஜபக்ஷ (ஸ்ரீல.சு.க.) 60,19,210 (62%)**
**சரத் பொன்சேகா (அன்னம்) 40,10,621**

**2015 - மைத்ரிபால சிறிசேன (அன்னம்) 62,67,681 (52%)**
**மஹிந்த ராஜபக்ஷ (ஸ்ரீல.சு.க.) 57,61,710**

**2019 - கோட்டாபய ராஜபக்ஷ (பொதுஜன பெரமுன) 69,62,833 (53%)**
**சஜித் பிரேமதாச (ஐ.தே.க.) 54,43,707**

மேற்படி 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவான கோட்டாபய குறைந்தபட்சம் ஒரு மாகாண சபையில் கூட அரசியல் இல்லாத ஒருவராவார். அப்படிப்பட்டவரிடமே இந்நாட்டின் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதுடன், போதாக்குறைக்கு பொதுத் தேர்தலில் 3/2 பெரும்பான்மையையும் கேட்டார்கள். மக்கள் அதனையும் கொடுத்தார்கள். ஆனால், என்ன பலமிருந்தும் நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்ல முடியாமல் ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் செய்வதறியாது தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். இதற்கு அரசாங்கம் கொரோனாவையே காரணம் காட்டிய போதிலும் உண்மையான காரணம் அதுவல்ல. அரசாங்கத்திடம் சிறந்த ஒரு நிலையான கொள்கையோ, திட்டமிடல் திறன்களோ இல்லாமையினால்தான். இன்று அனைத்துத் துறைகளையும் சார்ந்த மக்கள் அரசுக்கெதிராக வீதிகளிலிறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1953இல் இடம்பெற்ற பாரிய ஹர்த்தாலை விடவும் தற்போதைய ஆட்சியாளர்கள் மக்களின் எதிர்வலைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மறுபுறத்தில் இயற்கை அழிவுகள் ஒருபுறம், தலைக்கு மேல் உயர்வடைந்த பொருட்களின் விலையேற்றம், கொரோனாவின் தாக்கம் போன்றவற்றினால் அரச ஊழியர்கள் உட்பட நாளாந்த வேலை செய்வோரும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக எதிர்வரும் காலங்களில் நாட்டு மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள நேரிடலாம் என்ற அச்சத்துடன் மக்கள் காணப்படுகின்றனர்.

எது எப்படியிருப்பினும், இலங்கையில் ஆட்சிசெய்த அரசாங்கங்களில் கோட்டாபயவின் அரசாங்கமே மிகவும் குறுகிய காலத்திற்குள் மக்களின் விசனத்துக்கும், அதிருப்திக்கும், வெறுப்புக்கும் உள்ளாகியிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. கோட்டாபயவை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தவர்களே இன்று வீதிகளில் இறங்கி அரசுக்கெதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். இந்த அரசின் பங்காளியாக இருப்பவர்களும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் தங்களின் விசனத்தைத் தெரிவித்து வருகின்றனர். இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் குறுகிய காலத்துக்குள் ஒட்டுமொத்த மக்களினதும் வெறுப்பைப் பெற்றுக் கொண்ட ஆட்சியாக கோட்டாபயவின் அரசாங்கம் தடுமாறிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலைமைதான் 1970 முதல் 1977 வரை அதிகாரத்திலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான அரசாங்கம் கடைப்பிடித்த உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டுப் பொருட்களுக்கான தடை, கள்ளச்சந்தை, கியூ வரிசை, பசி, பட்டினி, மரவள்ளிக்கிழங்கு யுகம், வேலையின்மை, இலஞ்சம், ஊழல், தொடர் வேலைநிறுத்தம், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு போன்றவற்றின் காரணமாக நாடும், மக்களும் 7 ஆண்டு காலமாக இருண்ட யுகம் ஒன்றுக்குள் சிக்கித் தவித்தனர். அதன் பயனாக மக்களின் வெறுப்பைப் பெற்றுக்கொண்ட அன்றைய அரசாங்கம் 1977இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பாரிய தோல்வியைப் பெற்றதுடன், எட்டு உறுப்பினர்களை மாத்திரமே பெற்றது. அத்துடன், ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் தொடர்ந்தும் 1977முதல் 1994வரை 17 வருடங்களாக ஆட்சியில் இருப்பதற்கும் வழியமைத்துக் கொடுத்தன. ஆனாலும், ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் பிரேமதாச போன்றவர்களின் நிர்வாகத்தில் பல கட்டுக்கோப்புகள் காணப்பட்டன. அன்றைய தலைமைத்துவத்தை மதித்தார்கள். இலஞ்சம், ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கு அஞ்சினார்கள். நாட்டில் யுத்தம் இடம்பெற்ற நிலையிலும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத நிலையில், பல தரப்பட்ட நல்ல மானியங்கள் வழங்கியதுடன், அத்தியாவசிய அனைத்துப் பொருட்களும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் எந்தத் தட்டுப்பாடுகளுமின்றி கிடைக்கப் பெற்றன. அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலமாக வறுமைநிலையில் வாழ்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அந்நிய செலாவணி மூலம் தங்களின் வாழ்வாதாரத்தை சிறப்பாக்கிக் கொண்டனர்.ஆனால், இலங்கையின் தற்போதைய நோக்கினால் 1970 களில் எதிர்கொண்ட பசி, பட்டினி போன்றவற்றுக்கு எதிர்வரும் காலங்களில் முகங்கொடுக்க நேரிடலாம் என் மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஆகவே, தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை முறியடித்து நாட்டையும், மக்களையும் இயல்புநிலைக்கு கோட்டபாயவும், அவரது அரசாங்கமும் கொண்டுவருவார்களா என்பதுதான் தற்போதைய கேள்வியாக உள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம்.

யூ.எல்.ஏ.மஜீட்,
சாய்ந்தமருது.



# அறிவுசார்ந்த பொருளாதாரத்தில் சுகாதாரத் துறையின் பங்களிப்பு

வரிசை என்ற வார்த்தை, தற்காலத்தில் பொதுமக்கள் மத்தியில் பொதுவாக ஒலிக்கும் வார்த்தையாகும். அத்தியாவசியப் பொருட்கள் ஆடம்பரப் பொருட்களாக மாறியதன் பாதிப்புக்கு அனைவரும் ஆளாகியிருக்கிறார்கள். தற்போதைய பொருளாதார மந்தநிலை 2019ஆம் ஆண்டில் எதிர்பார்த்தது எனவும், அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் பொருளாதார ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது என்றும் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய இருப்பு 79 சதவீதம்



வைத்தியர் செனல் பெர்னாண்டோ
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர்

திடீரென குறைவடைந்தது. அதேநேரத்தில் பிற நாடுகளால் கடந்த இரண்டு ஆண்டுகளில் தங்களது வெளிநாட்டு நாணய இருப்புகளை அதிகரிக்க முடிந்தது. பங்களாதேஷ் தமது வெளிநாட்டு ஒதுக்கத்தை இந்தியாவை முந்திக் கொண்டு 41 சதவீத உயர்வைக் காட்டியது.

இலங்கை அதன் அந்நிய செலாவணியை முக்கியமாக, பொருட்களின் ஏற்றுமதி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், பயிற்றப்படாத தொழிலாளர்களின் ஏற்றுமதி மற்றும் சுற்றுலா மூலம் பெறுகிறது. நாட்டின் இறக்குமதிகள் எப்போதும் ஏற்றுமதியைவிட அதிகமாகவே உள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% பங்களிப்புச் செய்கின்ற நாட்டின் சுற்றுலாத் துறையானது 2019ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஈஸ்டர் தினத் தாக்குதல்களால் 70 சதவீதம் வீழ்ச்சியடைந்ததுடன், கொவிட் பெருந்தொற்றால் மேலும் பாதிக்கப்பட்டது. பெருந்தொற்றின் ஒவ்வொரு அலையையும் கட்டுப்படுத்துவதற்கு நாடுதழுவிய தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டு நாட்டை கிட்டத்தட்ட முடக்கநிலைக்குத் தள்ளியது.

இந்த வைரஸ் உலகளவில் பல நாடுகளைப் பாதித்ததன் விளைவாகப் பொருளாதாரம் மற்றும் இயல்புநிலைக்கு இடையூறு ஏற்பட்டது. இது இலங்கையின் ஏற்றுமதியைப் பராமரிப்பதிலும் தொழிலாளர் ஏற்றுமதியிலிருந்து வருவாயைப் பெறுவதிலும் இலங்கைக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதற்கிடையில் கொவிட்-19இற்கு எதிராக சிறந்த தடுப்பூசி வழங்கல் திட்டத்தை நாடு முன்னெடுத்தது.

ஆனால், இறக்குமதியைக் குறைத்து உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் வரிவிதிப்புக் கொள்கையை ஸ்தாபிப்பதன் மூலம் இலங்கையை தன்னிறைவடையச் செய்வதற்கு இலங்கை மூலோபாய ரீதியாக முன்னேற்றங்களைத் திட்டமிட வேண்டும்.

உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கொவிட்-19 தொற்றுநோயை நிர்வகிக்கச் சுகாதாரப் பணியாளர்கள் கடினமாக உழைத்தாலும், ஏனைய வகை தொழில் சார்ந்தோர் வீட்டிலிருந்தே வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தக் கருத்தியலின் விளைவாக அவர்களுக்கான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டன. சில நாடுகளில் சுகாதாரப் பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகளை வழங்கியதால் ஏற்கனவே நிலவிய சூழ்நிலையை மேலும் மோசமாக்கியது.

எனவே, வெளிநாட்டு நாணயத்தை நாட்டிற்குக் கொண்டுவருவதற்கு திறன்சார்ந்த தொழிலாளர்களை ஏற்றுமதிசெய்வது, முக்கியமாக தர மருத்துவ அலுவலர்கள் மற்றும் சிறப்பு மருத்துவ அதிகாரிகளின் ஏற்றுமதி அவசியம் என்பது வெளிப்படையானது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) 2013ஆம் ஆண்டில் முன்முயற்சியை மேற்கொண்டு அறிவுப் பொருளாதாரத்தில் சுகாதாரத்துறை பங்களிப்பு குறித்த கருத்தியல் முன்மொழிவைச் சமர்ப்பித்தது. திறமையான தொழிலாளர்களை ஏற்றுமதிசெய்வதன் முக்கியத்துவத்தைப் புள்ளிவிவரங்களுடன் இந்த முன்மொழிவு தெளிவாக விளக்குகிறது.



வைத்தியர் வாசன் இரத்தினசிங்கம்
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர்

இது அறிவுசார்ந்த பொருளாதார கருத்தியலை உகந்தளவுக்கு உயர்த்த, அந்நிய செலாவணியை அதிகரிக்கும் என்றபோதும், துரதிஷ்டவசமாக அடுத்தடுத்த அரசாங்கங்கள் மேற்படி முன்மொழிவை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டன.

அறிவு அடிப்படையிலான பொருளாதாரம் என்பது, கல்வி மற்றும் அறிவு (மனித மூலதனம்) என்பன எப்படி ஓர் உற்பத்தி சொத்தாக அல்லது வணிகத் தயாரிப்பாக விற்பனைசெய்யப்பட்டு, தனிப்பட்ட வணிக மற்றும் பொருளாதாரத்துறைக்கு இலாபத்தை வழங்குவதற்கானதாகும். பொருளாதாரம் பற்றிய இந்தக் கருத்து இயற்கை வளங்கள் அல்லது பௌதீக பங்களிப்பிற்குப் பதிலாக அறிவுசார் திறன்களைப் பெரிதும் நம்பியுள்ளது. அறிவுப் பொருளாதாரமானது பிரதானமாகக் கீழ்வரும் விடயங்களால் வரையறுக்கப்படுகிறது.

1) தொழில் முனைவோர் மற்றும் அறிவைப் பயன்படுத்துவதற்கான ஊக்கத்தொகைகளை வழங்கும் நிறுவன அமைப்பு.

2) திறமையான தொழிலாளர்கள் மற்றும் சிறந்த கல்வி முறை என்பவற்றின் கிடைப்பனவு.

3) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்கான அணுகல் வசதி.

4) துடிப்பான புத்தாக்கத் தளம்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனிநபர், நாடு மற்றும் சர்வதேச சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பல நன்மைகளை அடையாளம் கண்டுள்ளது. அந்நியச் செலாவணி அதிகரிப்பு மட்டுமன்றி மேலும் பல நன்மைகளையும் அடையாளப்படுத்தியுள்ளது. உள்ளூர் சுகாதாரத்துறையைச் சர்வதேச தரத்திற்கு இணையாகப் பராமரிப்பதற்கு வைத்தியர்கள் முகாமைத்துவம் சார்ந்த நெறிமுறைகள் மற்றும் நடைமுறை நுட்பங்கள் தொடர்பான தங்கள் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த வேண்டும். இந்த வாய்ப்பு, வளர்ந்த நாடுகளின் சுகாதாரத்துறையில் பணியாற்றுவதன் மூலம் மனப்பாங்கு மேம்படுத்தல், தொழில்துறை அனுபவப் பிரச்சினைகள் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளப் பயனுள்ளதாக இருக்கும். உலகளவில் நன்கு அங்கீகரிக்கப்பட்ட சுகாதார நிறுவனங்களில் பணிபுரியும் இலங்கை மருத்துவர்களால் நாட்டின் நற்பெயரும் மற்றும் அதன் சுகாதார கட்டமைப்பும் ஊக்கம் பெறும்.

இலங்கையில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்வியானது, சர்வதேச மருத்துவ பாடத்திட்டங்களுடனும் ஆங்கிலத்திலும் நடத்தப்படுகிறது. ஆயினும்கூட, சிறந்த முன்னேற்றத்துக்கான எதிர்பார்ப்புகள் உள்ளன. வெளிநாட்டுச் சுகாதார மையங்களுடன் பகிர்ந்து கொள்ளும் அனுபவமும் ஒத்துழைப்பும் எமது பயிற்சித் திட்டங்களை மேம்படுத்த உதவுவனவாக அமையும்.

சுகாதார சுற்றுலா மற்றும் சிகிச்சை பிரயாண மருத்துவம் போன்ற கருத்தியல்கள் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் மிகவும் பிரபலமாகி வருகின்றன. இவற்றினூடாக நமது நாட்டிற்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சேவை செய்வதற்கான ஒரு முக்கிய மையமாக இலங்கை இருக்கும். அதற்குக் கொள்கை அடிப்படையிலான கருத்தியல். தேவையான அரசியல் அனுசரணையுடன் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். எனவே, இத்திட்டத்தின் மூலம் வெளிநாட்டில் பயிற்சிபெற்ற வைத்திய அதிகாரிகள் இலங்கையில் இத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்ய முடியும்.

இறுதியாக, அறிவுசார் பொருளாதாரக் கருத்தியலானது நாடு எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார மந்தநிலையைச் சமாளிக்கும் ஒரு முறையாகும். இது நமது தாய் நிலத்திற்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்.

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்**

# இளவலுக்கு பட்டாபிஷேகம் செய்த வைகோ

திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர்வாள், பிரசாரப் பீரங்கி எனப் புகழப்பட்ட வைகோவின் அரசியல் வாழ்க்கை இறுதிக்கட்டத்தை நெருங்கி விட்டது. மூப்பு, உடல்நிலை காரணமாக முன்புபோல் தீவிரமாகச் செயற்பட முடியாத நிலை உள்ளது. வாரிசு அரசியலை மூர்க்கமாக எதிர்த்த வைகோ தனது மகன் துரை வையாபுரிக்கு கட்சியில் உயர் பதவியைக் கொடுத்து அழகு பார்த்துள்ளார். கழகத்தின் மூத்த நிர்வாகிகளின் விருப்பம்





இல்லாமல் நடைபெற்ற வாரிசு அரசியலால் கழகத்தினுள் கலகக்குரல் எழுந்துள்ளது

கருணாநிதியின் குடும்ப அரசியலுக்கு எதிராகப் பேசி விமர்சனம் செய்திருக்கிறார் வைகோ. திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு வெளியேறியதற்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், வாரிசு அரசியலே முக்கியமான காரணமாகும். 1993ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வைகோ வெளியானதற்கு கருணாநிதி தனது மகன் ஸ்டாலினை முன்னிலைப்படுத்தி வாரிசு அரசியல் செய்கிறார் என்ற குற்றச்சாட்டு முதன்மையானது. வைகோவை வெளியேற்றுவதற்கு கருணாநிதி செய்த அரசியல் இன்னொரு வகையானது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த தலைவராக வைகோ வந்துவிடுவார் என்ற பயத்தில் கருணாநிதி சூழ்ச்சி செய்ததாக வைகோவின் ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டினர். வைகோவுக்காக அன்று ஐந்து தொண்டர்கள் தீக்குளித்து உயிரைக் கொடுத்தனர். அதற்காக நீதி கேட்டு வைகோ நெடும் பயணம் சென்றார். இன்று அவை எல்லாம் மறக்கடிக்கப்பட்டு தனது வாரிசுக்கு பதவி கொடுத்து அழகு பார்க்கிறார் வைகோ.

துணைப் பொதுச் செயலாளர்கள், தலைமை கழகச் செயலாளர் உள்ளிட்ட நான்கு பதவிகளுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. ஏற்கனவே தலைமை கழகச் செயலாளர் பதவிக்கு வைகோவின் மகன் துரை வைகோ அறிவிக்கப்பட்டுள்ளார். இதுதான் மூத்த நிர்வாகிகள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வாரிசு அரசியலை எதிர்த்துப் போராடிய வைகோவின் செயலை மூத்த நிர்வாகிகள் அங்கீகரிக்கவில்லை. கட்சியின் தலைவர் வைகோதான். ஆனால், அதற்காக இரத்தம் சிந்தி, சிறைக்குச் சென்று, போராட்டம் நடத்தி, சொத்தை இழந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களின் முதுகில் ஏறி மகனுக்கு பதவி கொடுப்பதை அவர்கள் விரும்பவில்லை. வைகோவின் மகன் அரசியலுக்கு வருகிறார் என சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் செய்தி வெளியானது. அப்போது வைகோ கடுமையாக மறுத்து அறிக்கை விடுத்தார்.

சிவகங்கையில் அதிருப்தி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். சிவகங்கை மாவட்ட செயலாளர் செவந்தியப்பன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், விருதுநகர் மாவட்ட செயலாளர் சண்முகசுந்தரம், உயர்நிலைக்குழு உறுப்பினர் அழகுசுந்தரம், வழக்கறிஞர் அணி செயலாளர் பாரத மணி உட்பட பலரும் கலந்துகொண்டனர். போர்க்கொடித் தூக்கியிருக்கும் செவந்தியப்பன் வைகோவின் நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தவர். பொடா சட்டத்தின்கீழ் கைதாகி வைகோவுடன் பல மாதங்கள் சிறையில் இருந்தவர். அப்படிப்பட்ட நபரே இன்று அதிருப்தியில் இருக்கிறார்.



கலிங்கப்பட்டியில் கடந்தாண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் வைகோவின் மகன் துரை வைகோவை தலைமைக் கழகச் செயலாளராக தெரிவுசெய்ய முடிவு செய்தார். எந்தவிதமான முன்னறிவிப்புமின்றி அவசரமாகக் கூட்டம் நடத்தி, துரை வைகோவை ம.தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளராகத் தெரிவுசெய்ததால் மாவட்ட செயலாளர்கள், உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்து அக்கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

சென்னையில் ம.தி.மு.கவின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதிருப்தி நிர்வாகிகள் கலந்துகொள்ளாமல் புறக்கணித்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், வைகோ மகன் துரை வையாபுரி கட்சித் தலைமை கழகச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டதுக்கு பொதுக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. கலகக்குரல்கள் அதிகரித்திருக்கும் நிலையில் வைகோ என்ன முடிவை எடுக்கப்போகிறார் என்பதுதான் அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

அதிருப்தியாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தூது போனதாகத் தகவல் வெளியாகியுள்ளது. கூட்டணிக் கட்சி எனப்தாலும் வைகோமீது ஸ்டாலின் மதிப்பு வைத்திருப்பதாலும் அவர்களுக்கு கதவு திறக்கப்படவில்லை. கட்சியை திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைக்கப் போவதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

சிவகங்கை மாவட்ட ம.தி.மு.க. கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் செந்தியப்பன், உயர்நிலை குழு உறுப்பினர்கள் சேர்ந்து ம.தி.மு.க. கட்சியில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை குறித்து பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிலையில், மாவட்டத்திலுள்ள ம.தி.மு.க. கட்சி நிர்வாகிகள், கட்சி அலுவலகத்திற்கு உள்ளே பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தக்கூடாது என போராட்டம் செய்தனர்.

கட்சி அலுவலகம் எங்களுக்கு சொந்தம் என்றும் மாவட்ட செயலாளர் செவந்தியப்பன் பல மாதங்களாக கட்சியில் செயற்படாமல் உள்ளார் என்றும் தலைவர் வைகோமீது தவறான குற்றச்சாட்டு கூறுகிறார் என நிர்வாகிகள் சரமாரியாகக் குற்றஞ்சாட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் செய்தியாளர்களை சந்தித்த மாவட்ட செயலாளர் செவந்தியப்பன், ம.தி.மு.கவில் உட்கட்சி ஜனநாயகம் இல்லை. வைகோ, மகன் துரை வையாபுரிக்கு எல்லாவித அதிகாரத்தையும் கொடுப்பதற்கு வேலைகளை திட்டமிட்டு செய்து வருகிறார். ம.தி.மு.கவை பொறுத்தவரை உயர்நிலை குழுவைக் கூட்டி உயர்நிலைக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளை மாவட்ட செயலாளர் கூட்டத்தில் விவாதிப்பது வழக்கம்.

ஆனால், கடந்த ஓராண்டு காலமாக உயர்நிலை கூட்டத்தைக் கூட்டவில்லை. உயர்நிலைக் குழுக் கூட்டத்தை தவிர்த்து வருகிறார். கட்சிக்கு 40 ஆண்டுகள் உழைத்த தி.மு.க. தலைவர் ஸ்டாலினையே குடும்ப அரசியல் என்று சொன்னவர்தான் வைகோ. ஆனால், தற்போது தனது மகனை கட்சிக்குள் கொண்டுவந்துள்ளார். குடும்ப அரசியல் இல்லை என்கிறார் என குற்றஞ்சாட்டினார். மேலும், ம.தி.மு.கவை கலைத்துவிட்டு தி.மு.கவுடன் இணைக்க வேண்டும் என்றும் உயர் நிலைய குழு உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

வைகோவின் அரசியல் ஆட்டத்தால் கருணாநிதி முதலமைச்சராகும் வாய்ப்பு பறிபோனது. விஜயகாந்தை முன்னிறுத்தி வைகோ தேர்தல் வியூகம் அமைத்ததால் வாக்குகள் சிதறின. விஜயகாந்தின் ஆதரவு இல்லாததால் கருணாநிதி தோல்வியடைந்தார். அதற்குப் பிராயச்சித்தமாக ஸ்டாலினை முதல்வராக்க பிரசாரம்செய்தார்.

அரை நூற்றாண்டு அனுபவம் உள்ள வைகோவால் கட்சியைக் கட்டிக் காப்பாற்ற முடியவில்லை. அரசியல் அனுபவம் இல்லாத துரையால் கட்சியைத் தூக்கிநிறுத்த முடியுமா என்ற கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை.

வைகோவின் கட்சி பெயரளவில் மட்டும்தான் இருக்கிறது. சின்னம் முடக்கப்பட்டிருக்கிறது. வைகோவின் கட்சி உறுப்பினர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்கள். வைகோவுக்கு நாடாளுமன்ற பதவி கிடைத்துள்ளது. இன்றைய பரபரப்பான அரசியலில் வைகோவின் மகனால் எதுவும் செய்ய முடியாது. மூப்பனாரின் மகனைப் போலவே வைகோவின் மகனும் அரசியல் செய்யப்போகிறார்.

**அபி**



# மரணப்பிடிக்குள் தேசம் கடக்கும் பயணம்

**போவோம்... செத்தால் எல்லோரும் கடலோடு சேர்வோம்;**
**பிழைத்தால் இந்தியாவுக்குப் போவோம்...**
**எதிர்காலம் கண்ணை மறைக்க, கனவுகளை சுமந்த படகு கடல் அலையை கிழித்துச் செல்கிறது...**

இது வெறும் கதையல்ல... வாழ வழித்தேடி அண்டைநாட்டுக்கு படையெடுக்கும் நம்மினத்தோரின் கண்ணீர்க் கதை...

ஒருகாலத்தில் சிங்க தேசத்தைப் (இலங்கையை) போன்றொரு சாம்ராஜ்ஜியத்தை கட்டியெழுப்பவேண்டும் என்று கனவு கண்ட சிங்கப்பூர், இன்று வானுலகம் வியக்கும் வாழ்வியலை வையகத்துக்கு காட்டி வியப்பின் உச்சத்துக்குச் சென்று நிற்கிறது. ஆனால், இன்று சிங்கப்பூரின் கனவு தேசமோ வாக்களித்த மக்களின் வயிற்றுப்பசி போக்கமுடியாமல் வக்கற்றுக் கிடக்கிறது...

ஆம். வரிசையில் நின்று தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிய காலம் போய், வாக்களித்த பாவத்திற்காக பொருளாதாரச் சுமையை எம்மில் திணித்து வீதிக்கு இறக்கிவிட்டுள்ளது நம் தேசம்...

நொடிக்கொருபொழுது விலையேற்றம் காணும் அத்தியாவசியப் பொருட்கள்.... எரிவாயுக்கொரு வரிசை.... மண்ணெண்ணெய்க்கு மற்றுமொரு வரிசை; சற்றே தள்ளி பால்மாவுக்கொரு வரிசை...

கொளுத்தும் வெயிலில் உணவு - தண்ணீரின்றி பலமணிநேரம் கால்கடுக்க காத்திருப்பு... இதில் பல மணிநேர மின்துண்டிப்பு வேறு...

இன்னும் அடுத்தவேளை உணவுக்கு அண்டை வீட்டாரிடம் கையேந்த மட்டுமேயுள்ளது. இன்னும் சில நாட்களில் அவர்களிடமும் கேட்க முடியாத நிலை உருவாகிவிடும்... பகல் இரவானதும் வீதியில் துவண்டு வீழ்கின்றனர் அப்பாவிகள். அரசின் அசமந்தப்போக்கால் மண்ணெண்ணெய்க்காக காத்திருந்த அப்பாவிகள் நால்வர் உயிர்த் துறந்தனர்... இதுவே சோகத்தின் உச்சம்...

இன்னும் என்ன வேண்டும்... நாடாளுமன்றம் சென்று வாக்களித்தோருக்காக பேசவேண்டியோர் தமது வாக்குவங்கியை தக்கவைத்துக்கொள்ள ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி தர்க்கம் புரிந்துகொண்டிருக்கின்றனர்.

என்ன செய்ய, உயிர் பிழைத்தால் போதும்... வாழ வழித்தேடி அண்டைநாடான இந்தியாவுக்கு படையெடுக்கின்றனர் அப்பாவிகள் இன்று.

''எனது கணவர் கூலி வேலைக்குச் செல்கிறார். தற்போதைய நிலையில் ஒருவேளை சாப்பாட்டுக்கு 2 ஆயிரம் ரூபா செலவாகிறது.

எமது தினசரி வருமானம் 1500 ரூபா மட்டுமே கிடைக்கிறது. இந்த வருமானத்தை வைத்து என்னால் எப்படி என் குழந்தையுடன் இலங்கையில் வாழ முடியும்? எனவேதான் என் தம்பி குடும்பத்துடன், படகில் இந்தியாவுக்கு வந்துள்ளோம்.

இதுவரை இலங்கை அரசு எந்தவிதமான உதவியும் மக்களுக்கு செய்யவில்லை. இன்னும் எம்மில் பலர் தமிழகத்திற்கு வரத் தயாராகவுள்ளனர். ஆனால், அவர்கள் எப்போது வருவார்கள் என்பது குறித்து தகவல் எதுவும் தெரியாது.

என் தம்பி என்னையும் என் குடும்பத்தையும் தமிழகத்திற்கு அகதியாக செல்ல அழைத்தபோது, இங்கிருந்து கஷ்டப்படுவதற்கு பதில் இந்தியா போவோம். பிழைத்தால் இந்தியாவில் வாழ்வோம். இல்லையெனில், கடலோடு சாவோம் என்று முடிவுசெய்துதான் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மன்னாரிலிருந்து கிளம்பினோம்.

கிளம்பி ஒரு மணிநேரத்தில் படகு என்ஜினில் பழுது ஏற்பட்டு நடுக்கடலில் நின்றது. என்ஜினை சரிசெய்ய சுமார் 37 மணிநேரத்துக்கு மேலானதால் என்ஜினை சரிசெய்யும்வரை கடும் வெயிலில் குடிநீர், உணவு இல்லாமல் உயிருக்குப் போராடிய நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் தனுஷ்கோடிக்கு வந்துசேர்ந்தோம்.


சிவசங்கரி

இலங்கையில் இருக்கும் மக்கள் மனஅழுத்தத்தில் வாழ்ந்து வருகின்றனர். காரணம், காலை எழுந்ததிலிருந்து இரவு தூங்கும்வரை ஒவ்வொரு மணிநேரத்தையும் கடப்பது கடும் சவாலாகவுள்ளது. இன்னும் சில நாட்களில் தமிழகத்திற்கு அகதிகளாக அதிகமான இலங்கை தமிழர்கள் வர வாய்ப்புள்ளது.''

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் உயிருக்குப் பயந்து அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்த நிலையில், தற்போது பட்டினிச்சாவுக்கு பயந்து நடுக்கடலில் சுமார் 37 மணிநேரம் உயிருக்குப் போராடி குழந்தைகளுடன் தனுஷ்கோடி வந்துசேர்ந்ததாக மன்னாரிலிருந்து அகதிகளாக சென்றுள்ள சிவசங்கரி என்ற தாய் கண்ணீர்மல்க ஊடகமொன்றுக்கு செவ்வியளித்துள்ளார்.

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை (22ஆம் திகதி) காலைமுதல் இரவுவரை இலங்கைத் தமிழர்கள் 16 பேர் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் கடற்கரையிலிருந்து கடந்த திங்கட்கிழமை 21ஆம் திகதி தமக்குச் சொந்தமான கண்ணாடி இழைப்படகில் ஐந்து குழந்தைகள், மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் என வவுனியாவைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் தனுஷ்கோடிக்கு புறப்பட்டுள்ளனர். அதில் ஒருவரே சிவசங்கரி.

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்த காலங்களில் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து உயிர் பிழைத்தால் போதும் என 1990ஆம் ஆண்டு தமிழகத்திற்கு அகதிகளாக சென்றனர். போர் முடிந்த பின் 2012இல் மீண்டும் இலங்கைக்குத் திரும்பினர்.

இந்நிலையில், தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி. உணவு பஞ்சத்தால் பட்டினிச்சாவுக்கு பயந்து குழந்தைகளோடு மீண்டும் இரண்டாவது முறையாக அகதிகளாக தனுஷ்கோடி வந்துள்ளதாகவும், இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் பல ஆயிரக்கணக்கானோர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சமடையவுள்ளதாகவும், எரிபொருள் தட்டுப்பாட்டால் வரமுடியாமல் அவதியுற்று வருவதாகவும் தமிழகத்திற்கு அகதிகளாக சென்றுள்ள வவுனியாவைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.

''பொருட்களின் விலை அதிகரிப்பால் எங்களுக்கு வாழ வழியில்லை. குழந்தைக்கான பால்மா விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. எதிர்வரும் நாட்களில் இன்னும் விலை அதிகரிக்கலாம். என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரால் தொடர்ந்து தொழில் செய்ய முடியவில்லை.

அவருடைய வருமானத்தை வைத்து எங்களால் வாழ முடியாதென தீர்மானித்து நான்கு மாத குழந்தையுடன் உயிரை பணயம் வைத்து ஃபைபர் படகில் தமிழகத்திற்கு வந்துள்ளோம்.

எங்களை படகில் அழைத்து வந்தவர் அதிகாலை ஒரு மணியளவில் தனுஷ்கோடி அருகேயுள்ள ஒரு மணல் திட்டில் இறக்கி விட்டுவிட்டு, ''இதுதான் மண்டபம் பகுதி. விடிந்தவுடன் நீங்கள் நடந்து அல்லது வேறு படகில் மண்டபம் அகதிகள் முகாமுக்கு சென்றுவிடலாம்'' என கூறிச் சென்றார்.



அதை நம்பி விடியும்வரை காத்திருந்தோம். ஆனால், காலையில் பார்க்கும்போதுதான் நாங்கள் கடலுக்கு நடுவிலுள்ள ஒரு மணல்திட்டில் இருக்கிறோம் என தெரியவந்தது. கண்ணுக்கு எட்டும் தூரம்வரை யாருமே இல்லை. உதவி கேட்கவும் எவருமில்லை. கைக்குழந்தையுடன் நடுக்கடலில் கடும் காற்று மற்றும் வெயிலுக்கு மத்தியில் பல மணிநேரம் காத்திருந்தோம்.

அப்போது அந்தப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களின் தொலைபேசியை வாங்கி மண்டபம் அகதிகள் முகாமிலுள்ள எங்களது உறவினர்களை தொடர்புகொண்டோம். அவர்கள் மூலமாக கடலோர காவல் படைக்கு தகவல் அளிக்கப்பட்டது.

சுமார் 8 மணிநேரத்திற்கு மேலாக உண்ண உணவின்றி, குடிக்கநீரின்றி குழந்தைக்கு பால் கூட கொடுக்க முடியாமல் மணல் திட்டில் காத்திருந்தோம். பின்னர் எங்களை மீட்டு கடலோர காவல்படை முகாமுக்கு அழைத்து வந்தனர்.

மண்டபம் வந்த பின்னர்தான் எங்களுக்கு உயிரே வந்தது. இறுதிக்கட்ட போரின்போது இலங்கையில் வாழ முடியாமல் எங்கள் உறவினர்கள் பலர் தமிழகத்துக்கு அகதிகளாக வந்தனர். ஆனால், இப்போது உணவுப் பஞ்சத்திலிருந்து உயிர் பிழைப்பதற்காக நாங்கள் எங்கள் கைக்குழந்தையுடன் தமிழகத்துக்கு வந்துள்ளோம்.

இலங்கையில் இதே நிலை நீடித்தால் பட்டினிச்சாவு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படும் என நாங்கள் வசிக்கும் பகுதியில் சிறுவர்கள்முதல் முதியவர்கள்வரை குடும்பம் குடும்பமாக தமிழகத்திற்கு வர காத்துக்கொண்டிருக்கின்றனர்.''

இவ்வாறு நான்கு மாத குழந்தையின் தாயான மேரி கிளாரா தெரிவித்துள்ளார்.

மன்னார் எமில்நகர் மற்றும் சிலாவத்துறை ஆகிய பகுதிகளிருந்து இரு குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் கடந்த திங்கட்கிழமை இரவு தலைமன்னாரிலிருந்து தமிழகத்துக்குச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவரே மேரி கிளாரா.

தமிழகம் சென்ற இவர்களை படகோட்டி கடலிலுள்ள தீடை பகுதியில் இறக்கிவிட்டுச் சென்ற நிலையில், தனுஷ்கோடியை அடுத்துள்ள 4ஆவது மணல் திட்டுப் பகுதியில் குறித்த 6 பேரும் நின்றுள்ளனர்.

தகவலறிந்து இலங்கைத் தமிழர்களை அழைத்து வர மண்டபம் கடலோர காவல்படை முகாமிற்கு சொந்தமான கப்பல் விரைந்து சென்று செவ்வாய்க்கிழமை (22) அதிகாலை அவர்களை மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மன்னார் எமில்நகர் பகுதியிலிருந்து இந்தியா சென்ற குறித்த இளம் குடும்பத்தினரின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்கு சிவில் உடையில் சென்ற கடற்படையினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். மேலும் குறித்த இளம் குடும்பத்தினரின் பெற்றோர்களை கைதுசெய்ய முற்பட்டுள்ளதாகவும் மேரி கிளாரிவின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் தொடர்ந்து விசாரணை என்ற போர்வையில் சிவில் உடையில் பலர் வீட்டுக்கு வருவதாகவும் உரிய சீருடை, அடையாள அட்டைகளின்றி அச்சுறுத்தும் விதமாகவும் கொலை, கடத்தல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள்போல் தங்களை அச்சுறுத்தும் விதமாகவும் விசாரணைகள் மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

**''இதுதான் மண்டபம் பகுதி. விடிந்தவுடன் நீங்கள் நடந்து அல்லது வேறு படகில் மண்டபம் அகதிகள் முகாமுக்கு சென்றுவிடலாம் என கூறிச் சென்றார். அதை நம்பி விடியும்வரை காத்திருந்தோம். ஆனால், காலையில் பார்க்கும்போதுதான் நாங்கள் கடலுக்கு நடுவிலுள்ள ஒரு மணல்திட்டில் இருக்கிறோம் என தெரியவந்தது. கண்ணுக்கு எட்டும் தூரம்வரை யாருமே இல்லை. உதவி கேட்கவும் எவருமில்லை. கைக்குழந்தையுடன் நடுக்கடலில் கடும் காற்று, வெயிலுக்கு மத்தியில் பல மணிநேரம் காத்திருந்தோம்''**



குறித்த அச்சுறுத்தல்கள் மற்றும் விசாரணைகள் தொடரும் பட்சத்தில் தாங்கள் பொலிஸ் நிலையம் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தஞ்சமடையவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என பாதிக்கப்பட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மேலும் சிலர் அகதிகளாக தனுஷ்கோடிக்கு வரக்கூடும் என்பதால் சர்வதேச கடல் எல்லை பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்த கடல் பாதுகாப்பு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி அண்டைநாடான இந்தியாவுக்கு படையெடுப்போர் அங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் நோக்குடனேயே வெளியேறுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறன்றன.

### விடிவுகாலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும்

இதேவேளை, இலங்கையிலிருந்து தமிழகம் வரும் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக மத்திய அரசிடமும், அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களிடமும் தொடர்புகொண்டு இதை எப்படி கையாளவேண்டும் எனப் பேசிக்கொண்டிருக்கின்றோம். எனவே, அதற்கொரு விடிவுகாலத்தை தமிழக அரசு ஏற்படுத்தித் தரும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### 115 முகாம்களில் இலங்கைத் தமிழர்கள்

தமிழகத்திலுள்ள சுமார் 115 முகாம்களில் 73,241 இலங்கைத் தமிழர்களும் (19,340 குடும்பத்தினர்) மற்றும் வெளியிடங்களில் 31,802 இலங்கைத் தமிழர்களும் (11,288 குடும்பத்தினர்) வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் வாழ்ந்துவரும் இலங்கை அகதிகள் தென்னங்கீற்று முடைதல் போன்ற சுயதொழில் மற்றும் கட்டுமானப்பணிகளிலும், இளைஞர்கள் நூற்பாலை மற்றும் விசைத்தறி ஆலைகளிலும் பணிசெய்து வருமானம் ஈட்டுகின்றனர். 25 ஆண்டுகள் அவர்கள் தமிழகத்திலேயே வாழ்ந்தாலும் அவர்களுக்கான குடியுரிமை வழங்கப்படவில்லை. குடியுரிமை கிடைக்காததால், அரச தொழில் உட்பட எந்த உதவியும் கிடைக்கவில்லை. இதனால் பலர் முகாமை விட்டு தப்பிச்செல்வதாக அகதிகள் தெரிவிக்கப்படுகிறது.

### எதனால் இந்த நிலையில்?

இலங்கையின் இன்றைய நிலைக்கு என்னதான் காரணம் என்றால் காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், அதை சுருங்கச்சொன்னால், செய்யவேண்டிய காரியங்களை உரிய தருணத்தில் செய்யாமல், காலம் தாழ்த்தியது இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நெருக்கடிக்கான பிரதான காரணம்.

ஆனால், அதனுடைய பின்னணி மிக நீண்டது என சொல்ல வேண்டும். 1947ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கைகள் நிலைத்திருக்கக்கூடியதாக இருக்கவில்லை. அவ்வப்போது பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் அந்த கொள்கைகளை மாற்றிக்கொண்டே இருந்தன. அரசாங்கமே அடிக்கடி தங்களுடைய கொள்கைப் பிரகடனங்களை மாற்றிக்கொண்டிருந்தது. ஆகவே, கொள்கையில் எந்தவிதமான நிலைத்த தன்மையும் இல்லை. செய்யக்கூடாத கொள்கைகளை, கொள்கை முடிவுகளை பிழையான நேரத்திலே எடுத்தமை இந்த நெருக்கடிக்கான பிரதான காரணமாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உலகை உலுக்கிய கொரோனா பெருந்தொற்று நம் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மற்றுமொரு காரணமாக அரசியல் வட்டாரங்களில் எத்தி வைக்கப்படுகிறது. கொரோனா பெருந்தொற்றால் நாளொன்றுக்கு இலட்சக்கணக்கான உயிர்களை பலிகொடுத்து உயிரிழந்தோரின் உடல்களை எரியூட்டுவதற்குக் கூட அல்லல் பட்ட எமது அயல்நாடான இந்தியா, பெரும் பொருளாதார சரிவை சந்தித்தது. எனினும், பெருந்துயரிலிருந்து மெல்லென மீண்டெழுந்து நம் நாட்டு பொருளாதார சரிவை சரிசெய்ய தற்போது கடன் வழங்கியுள்ளது. நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நம் நாடோ பொருளாதார வீழ்ச்சிக்கு கொரோனா பெருந்தொற்றை காரணம் காட்டிக்கொண்டிருக்கிறது.

நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாடுகளில் கடனுக்கு மேல் கடன் பெற்ற அரசு, நாட்டின் நாலா பக்கங்களை கூறுபோட்டு அந்நியர்களிடம் தாரைவார்த்துவிட்டு கடனை மீள செலுத்த முடியாமல் சிக்கித் தவித்துவருகிறது.

தற்போதைய நிலையில் அரிசி ஒரு கிலோ 150 ரூபா முதல் 350 ரூபாவுக்கும் மேல் விற்கப்படுவதுடன், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 156 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றது.

சிற்றுண்டிச்சாலைகளில் ப்ளேன்ரீ ஒன்றின் விலை 65 ரூபாவுக்கும், மாலுபாண் ஒன்று 65 ரூபா முதல் 75 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன. வீடின்றி வீதியே கதியென்று வாழும் அன்றாட காட்சிகளுக்கு தர்மம் செய்வோரும் இல்லை. வீதியோர சிற்றுண்டிகளே அன்னச்சாலைகள் என்றிருந்தோரின் நிலை இனி என்னவாகும்? ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்காக ஆர்ப்பாட்டங்கள் பல முன்னெடுத்தும் அர்த்தமற்றுபோன மலையகம் வாழ் மக்களின் நிலை என்னாவது? அவர்களும் அண்டை தேசம் நோக்கி படையெடுக்கப் போகிறார்களா? நாளொன்றுக்கு இரண்டாயிரம் ரூபா சம்பளம் பெறும் ஒருவராலேயே ஒருநாளை சமாளிக்க முடியாமல் திண்டாடும் இந்நாட்டில் நாளைய நாள் விடியல் என்னவாக இருக்கும்?

இத்தனை கேள்விகள் எம்மில் இருக்கும் நிலையில் உயிர்பிழைப்புக்காக அண்டை நாட்டில் அடைக்கலம் தேடியதுபோய் பட்டினிச்சாவுக்குப் பயந்து நாட்டை அண்டை நாட்டில் தஞ்சம்புகும் இன்றைய அவலநிலை சர்வதேச ரீதியில் இலங்கைக்குக்கு களங்கத்தை ஏற்படுத்தும். காலக்கிரமத்தில் துரிதமாக செயற்பட்டு நாட்டுக்கு ஏற்படும் அவப்பெயரை துடைத்தெறிய வேண்டியது அரசின் கடமையாகும்.

• கே. சுபானி



காரைக்கவி

# சீத்துவக்கேடு 180

கண்ணும் காதும் நாடகம் ரசிக்க வேணும் எண்டு சொல்லிப்போட்டு அடுக்களையுக்கை போய் கொள்ளிக்கட்டை எடுத்து சுத்தின சுருட்டை பத்திக்கொண்டு வந்த அப்பு, "அட மோனை உனக்கு ஒண்டு சொல்ல மறந்து போனன். உந்த நாடகம் எண்ட சொல்லை தொல்காப்பியத்துக்குப் பிறகு "பட்டினப் பாலையில, பாடல் ஒர்த்தும் நாடகம் நயந்தும்" எண்டு வாற வரியளிலையும் சீவக சிந்தாமணியில "நாறியுஞ் சுவைத்தும் நரம்பின் இசை கூறியும் குளிர் நாடகம் நோக்கியும்" எண்டு வாற வரியளிலையும் பாக்கலாம்" எண்டார்.

பேந்து, "தனிய தொல்காப்பியத்தில மட்டும் நாடகத்தைப் பற்றிச் சொல்லேல்லை. அதுக்குப் பிறகு நாடகத்துக்கெண்டே கன புலவர்மார் கன புத்தகங்கள் எழுதினவை" எண்டார்.

அப்பு உப்பிடிச் சொல்லவும், எனக்கெண்டா அந்தப் புத்தகங்களின்ரை பெயரை என்டான்னை அறியவேணும் எண்ட ஆசை வர, அப்புவிட்டைக் கேட்டன். உடன அப்பு பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், இசை நுணுக்கம், இந்திர காளியம், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு, பரத சேனாபதீயம், கூத்த நூல், சயந்தம், சிற்றிசை, செயன்முறை, தாளவகையோத்து, பஞ்ச மரபு, பரதம், பெருநாரை, பெருங்குருகு, பேரிசை மதிவாணர் நாடகத் தமிழ், முறுவல், மோதிரப்பாட்டு, வஞ்சிப்பாட்டு, விளக்கத்தார் கூத்து எண்டு ஒருதொகை புத்தகங்களின்ரை பெயர்களைச் சொன்னார்.

அப்பு உப்பிடிச் சொல்லவும் ஆச்சி, தனிய உந்தப் புத்தககங்கள் எண்டில்லை பத்துப்பாட்டு, அகநானுறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, பெரும்பாணாற்றுப் படை, பட்டினப்பாலை, திருக்குறள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை எண்ட புத்தகங்களிலையும் நாடகத்தைப் பற்றிச் சொல்லி கிடக்கு எண்டா.

உப்பிடிச் சொன்னவ, சிலர் உங்க நடனத்தையும் நாடகத்தையும் போட்டு ஒண்டுமொடாக் குழப்பிக் கொண்டு இருக்கினம் . அந்தக் காலத்தில நடன மகளிர் எண்டு ஒருத்தரையும் சொல்லுறேல்லை. நாடக மகளிர் எண்டுதான் சொல்லுறது. அப்பிடித்தான் பழைய இலக்கியங்களிலை சொல்லிக் கிடக்கெண்டா.



உடன அப்பு, ஓமடா மோனை ஆச்சி சொல்லுறது சரி. முந்தி உந்தப் பெண்டுகளை அப்பிடித்தான் சொல்லுறது. பெரும்பாணாற்றுப் படையில, " நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த விசி வீங்கு இன்னியங் கடுப்ப'' எண்டும் சிலப்பதிகாரத்தில உரைப் பாயிரத்தில, "நாடக மேத்தும் நாடகக் கணிகை" எண்டும் சொல்லிக் கிடக்கு எண்டார் .

"உனக்கு ஒரு விஷயம் தெரியுமே. முந்தி உந்த நாடகங்கள் சீரும் சிறப்புமா இருந்த காலம் போய் களப்பிரர் காலம் எண்ட இருண்ட காலத்தில நாடகங்களும் இருண்டு போச்சுது எண்டு சொல்ல வேணும். அதுகும் உந்த காலத்தில பெருமளவுக்குப் பரவின சமண சமயக்காரர் நாடகங்களாலை சனத்துக்கு காம உணர்ச்சி கூடும் எண்டு எதிர்த்தவையாம்" எண்டார். எண்டாலும் பெருங்கதை, சீவகசிந்தாமணி எண்ட சமண நூல்கள் உந்த நாடகத்தைப் பற்றிச் சொல்லுது எண்டார் அப்பு.

அப்பு உப்பிடிச் சொல்லவும் எத்தினை பேர் எத்தினை புத்தகங்களை எழுதினாலும் எங்கட இளங்கோவடிகள் மாதிரி ஆரும் நாடகக் கலை பற்றி விபரமா எழுதினது கிடையாது எண்ட ஆச்சி, அவர் உந்த மேடையள் எப்பிடி இருக்கவேணும். ஆக்கள் மேடையில எப்பிடி நடிக்க வேணும். திரைச் சீலையள் எப்பிடி இருக்க வேணும் எண்டு ஊரிப்பட்ட விசயங்களச் சொல்லி இருக்கிறார் எண்டா. உதாலதான் ஆக்கள் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் எண்டிறவை எண்டா.

பேந்து உவர் இளங்கோவடிகள் மேடையின்ரை அளவு எப்பிடி இருக்க வேணும் எண்டதை

**"நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்**
**கோலளவு இருப்பத்து நல்விரலாக**
**எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து**
**ஒருகோல் உயரத்து உறுப்பின தாகி**
**உத்திரப் பலகையோடு அரங்கின் பலகை**
**வைத்த இடைநிலம் நாற்கோ லாக**
**ஏற்ற வாயில் இரண்டுடன்**
**தோன்றிய அரங்கில்"**

(சிலப்பதிகாரம். அரங்கேற்று காதை)

எண்ட பாட்டில சொல்லுறார் எண்டா.

(தொடரும் )

---



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

**மேஷ ராசி அன்பர்களே!**

பல வகைகளிலும் அனுகூலமான வாரம். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிப்பதால் உடல் அசதியும் மனதில் சோர்வும் உண்டாகும். வாரப் பிற்பகுதியில் அதிகாரிகளின் ஆதரவால் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போல் இருக்கும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாகவே இருக்கும். பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

உறவினர்கள் மூலம் நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளைப் பற்றி இருந்துவந்த மனக்கவலை நீங்கும். வாரப் பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்கவும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். நிர்வாகத்தினரின் பாராமுகம் அவ்வப்போது சோர்வை ஏற்படுத்தும். வாரப் பிற்பகுதியில் அலுவலகத்தில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வியாபாரத்தில் கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம். பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். பாராமுகமாக இருந்த புகுந்தவீட்டு உறவினர்கள் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்துகொள்வர்.

**மிதுன ராசி அன்பர்களே!**

நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். வார பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவு அதிகரிக்கும். தடைப்பட்டுவந்த சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். பணிச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்கள் பணிகளில் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும். வியாபாரம் சற்று சுமாராகத்தான் இருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிசெய்ய வேண்டாம். முக்கிய பிரமுகர்கள் வாடிக்கையாளர்களாக அறிமுகமாகும் வாய்ப்பு ஏற்படும். பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்கவேண்டி வரும். சகோதரர்களிடம் கேட்ட பண உதவி கிடைக்கும்.

**கடக ராசி அன்பர்களே!**

அதிர்ஷ்டம் தரும் வாரம். எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. திருமண வயதிலுள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகைகளும் பதவி உயர்வும் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டாகும். சக ஊழியர்களிடம் சொந்த விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும். வாடிக்கையாளர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும் என்பதால் பொறுமை அவசியம். பணியாளர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். உங்கள் முயற்சிகளுக்கு பெற்றோரின் ஆதரவும் உதவியும் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டு.

**சிம்ம ராசி அன்பர்களே!**

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணவசதி போதுமான அளவு இருக்கும் என்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. பிள்ளைகளால் சில பிரச்சினைகளும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். அலுவலகத்தில் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்துக் காத்திருந்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. நிர்வாகத்தினரின் பாராட்டுகள் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். ஆனால், பணியாளர்களால் சில வீண்செலவுகளும் ஏற்படும். சக வியாபாரிகள் மற்றும் பங்குதாரர்களிடம் அனுசரணையாகச் செல்வது நல்லது. பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக்கூடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

மன நிம்மதி தரும் வாரம். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அதனால், தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். சில சலுகைகள் கிடைக்கும். உங்கள் ஆலோசனைகள் நிர்வாகத்தினரின் பாராட்டு பெறும். சிலருக்கு இடமாறுதல் கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். புதிய முதலீடுகள் செய்வதற்கு வங்கிக் கடனுதவி கிடைக்கும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் மனதில் சோர்வும் உடல் அசதியும் உண்டாகும். எதிர்பார்த்த சுபச் செய்தி ஒன்று கிடைக்கக்கூடும்.

**துலா ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தை வழி உறவினர்களுடன் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். வீட்டில் பராமரிப்புப் பணிகளின் காரணமாக உடல் அசதி உண்டாகும். அரசாங்க அதிகாரிகளால் ஆதாயம் கிடைக்க வாய்ப்புண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். சக பணியாளர்கள் மத்தியில் உங்கள் கௌரவம் உயரும். உங்கள் ஆலோசனைக்கு நிர்வாகத்தினர் முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும். சிலருக்கு வியாபாரம் தொடர்பான தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரிடும். பணியாளர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். ஆனால், கடன்கள் விஷயத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் விடுமுறையில் செல்வதால், அவர்களின் பணிகளையும் சேர்த்துப் பார்க்க நேரிடும். அலுவலக விடயங்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளாமல் இருப்பது நல்லது. வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவோ அல்லது வேறு இடத்துக்கு மாற்றவோ நினைத்திருந்தால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். சகோதர வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்கள் உதவியாக இருப்பார்கள். பதவி உயர்வு கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். பணியாளர்கள் விடுமுறையில் செல்வதால், அவர்களுடைய வேலைகளையும் சேர்த்துப் பார்க்கவேண்டி வரும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம். பிறந்த வீட்டிலிருந்து மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும்.

**மகர ராசி அன்பர்களே!**

மனதில் அவ்வப்போது தேவை இல்லாமல் தோன்றும் குழப்பங்களால் குடும்ப நிர்வாகத்தில் முழு கவனம் செலுத்தமுடியாது. பணவசதி திருப்திகரமாக இருந்தாலும், பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு கையிருப்பைக் கரைக்கும். வெளியில் செல்லும்போது கொண்டுசெல்லும் பொருட்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். அலுவலகத்தில் சற்று இறுக்கமான சூழ்நிலையே காணப்படும். பணிச்சுமை அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தச் சாதகமான வாரம். தேவையான நிதியுதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் சோர்வு உண்டாகும். கணவரின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. நண்பர்கள் மூலம் பிற்காலத்தில் ஆதாயம் தரக்கூடிய தகவல் ஒன்று கிடைக்க வாய்ப்புண்டு. அலுவலகத்தில் உங்கள் பணிகளில் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். சக வியாபாரிகளுடன் அனுசரித்துச் செல்லவும். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மீன ராசி அன்பர்களே!**

வாரப் பிற்பகுதியில் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்புண்டு. சிலருக்கு நண்பர்களின் சந்திப்பும் அவர்கள் மூலம் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. அதிகாரிகளிடம் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதில் கவனம் தேவை. பங்குதாரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும்.



தமிழன் சிறுகதை

# பிள்ளையின் கவனம்

ஸாலிஹ் அஸீம்

இப்போ தெல்லாம் பயணமென்பது கொடிய வதையாகிப் போய்விட்டது. எரிபொருளின் விலையேற்றம் காரணமாக பஸ்கள் கூட வழமையான தனது சேவையினை இடைநிறுத்திக் கொண்டன. மட்டுப்படுத்தப்பட்ட சேவையினையே மேற்கொண்டு வருவதால் மிக அவசர பயணங்களை மாத்திரமே மேற்கொள்ள முடிகிறது.

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் எனது வீட்டுக்கு பக்கத்து வீட்டு மாமாவின் மனைவியை புற்றுநோய் காரணமாக சிகிச்சைக்காக சேர்த்திருந்தனர். எனவே, அவரை பார்த்துவிட்டு வருவதற்காக துணைக்கு என்னையும் அழைத்தார். பக்கத்து வீடு என்பதால் என்னால் மறுக்க முடியவில்லை.

''தம்பி பெத்த புள்ளைங்க கூட துணைக்கு வரமாட்டேங்குதுப்பா. மறுக்காம வாப்பா. எனக்கு அங்கு போயெல்லாம் பழக்கமில்லைப்பா'' என்று கெஞ்சும்போது எப்படிதான் மறுக்க முடியும்.

''சரி மாமா நான் வருகிறேன்'' என்று சம்மதித்துவிட்டேன்.

சொன்னப்படி மறுநாள் அதிகாலை மூன்று மணியிருக்கும் இருவரும் பஸ்தரிப்பு நிலையம் நோக்கி நடந்து சென்றோம். பதினைந்து நிமிடம் போயிருக்கும் பஸ்தரிப்பு நிலையத்தை சென்றடைந்து விட்டோம். பிரயாணம் செல்வதற்காக வழமைக்கு மாறாக நிறைய பேர் கூடியிருந்தனர்.

''என்ன தம்பியிது. சனம் இப்படி நெறைஞ்சுப்போயிருக்கு. ஏதாவது விசேஷமா'' --- என்றார்.

''இல்லை மாமா. எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் அதனாலேதான் பஸ் அதிகமாக போக்குவரத்து செய்வதில்லை. அதனால்தான் வந்தவங்க போக முடியாமலும் போக வேண்டியவங்க பஸ் இல்லாமலும் காத்துக் கிடக்கிறாங்க'' என்று நான் சொன்னபோதுதான் அவருக்கு நிலைமை விளங்கியது.

''சே.... என்ன நாடு இது'' என்று அலுத்துக்கொண்டார்.

ஒன்றரை மணித்தியாலங்கள் கரைந்த பின்தான் கொழும்புக்கு பஸ் வந்தது. இருவரும் எல்லோருடனும் முண்டியடித்துக் கொண்டு ஓடிப்போய் அப்பஸ்ஸிலே ஏறிக் கொண்டோம். ஒருவாறு நமக்கு இருக்கையும் கிடைத்தது. சற்றுநேரத்தில் சனம் நெரிசலாகிவிட்டது. காற்று புகக்கூட இடமின்றி வேற்று கொட்டத் தொடங்கிவிட்டது. சற்றுநேரத்தில் பஸ் புறப்படத் தொடங்கியது.

பஸ் புறப்படத் தொடங்கியதும்தான் ஏதோ ஜன்னல் வழியால் கொஞ்சம் காற்று வரத் தொடங்கியது. அப்போதுதான் சற்று ஆறுதலாகயிருந்தது.

சற்றுநேரம் சென்றிருக்கும் நாமிருக்கும் இருக்கைக்குப் பின்னாலுள்ள இருக்கையில் ஒரு பெண்ணும் அவளுடைய அப்பாவும் அவளின் நான்கு வயது மதிக்கத்தக்க பிள்ளையும் இருந்தனர். அப்பெண் கைப்பையை திறந்து அதிலிருந்து ஒரு டப்பாவை எடுத்தாள். அதன் மூடியை திறந்துவிட்டு அதிலிருந்த சாப்பாட்டை கையிலெடுத்து பிள்ளைக்கு ஊட்டிவிட ஆயத்தமானாள்.

அப்பிள்ளை கையிலே ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை வைத்துக்கொண்டு எதையோ பார்த்துக்கொண்டிருந்தது. உடனே அப்பெண் அவ்வுணவினை அப்பிள்ளைக்கு ஊட்டினாள். ஆனால், அதை அப்பிள்ளை உட்கொள்ள மறுத்தது.

''என் செல்லமில்லே. சாப்பிடுங்க'' என்று அப்பெண் கெஞ்சுக்கொண்டிருந்தாள். அப்போதும் அதனை சாப்பிடாமல் அக்குழந்தை அடம்பிடித்தது.

போதாக்குறைக்கு அவளின் அப்பாவும் ஏதேதோ சொல்லிப் பார்த்தார். பிள்ளை கேட்பதாக இல்லை. வேறு வழியில்லாமல் பிள்ளையின் வாய்க்குள் உணவை பலவந்தமாக திணித்தாள். பிள்ளை அதனை துப்பிவிட அதன் சில பகுதிகள் நமக்கு மேலும் வந்து விழுந்தது. மாமா கடுப்பாகி விட்டார்.

''பாருங்க தம்பி. பிள்ளை துப்பினது நமக்கு மேலயும் வந்து விழுந்து விட்டது. அதைப்பார்த்தும் பார்க்காததுமாதிரி இருக்காங்க. என்ன மனுசங்க இவங்க'' என்றவரின் வார்த்தையில் கோபம் தெரிந்தது.

நான் சற்று அவர்களை உற்றுப் பார்த்தேன். அப்போதுதான் எனக்கு விளங்கியது. அப்பிள்ளையின் கவனம் தொலைபேசியில் இருந்ததால் இடையில் புகுந்து சாப்பாட்டை கொடுப்பது தனக்கு இடைஞ்சலாக இருந்திருக்கிறது. அதுதான் அப்பிள்ளை அவ்வுணவை சாப்பிடவில்லையென்பது எனக்கு விளங்கிவிட்டது. அதனை மாமாவிடமும் எடுத்துச் சொன்னேன். விடயத்தை புரிந்துகொண்ட மாமா கோபத்தை அடக்கிக்கொண்டு அமர்ந்திருக்க திரும்பவும் கட்டாயப்படுத்தி அப்பெண் பிள்ளைக்கு சாப்பாட்டினை ஊட்டிவிட மீண்டும் அக்குழந்தை வேகமாக உணவை துப்பிவிட அது சரியாக மாமாவின் முகத்திலேயே அப்பிவிட்டது.

ஏற்கனவே கடுப்பாகியிருந்த மாமாவுக்கு கோபம் உச்சத்திற்கே போய்விட்டது. சட்டென்று பின்னால் திரும்பியவர்,

''என்ன பிள்ளை நீங்கள் வளர்க்கிறீங்க.... இந்த வயசுலேயே கையிலே தொலைபேசியை கொடுத்து பழக்கினால் எப்படி பிள்ளை சாப்பிடும்? முதல்ல கையில இருக்கிற தொலைபேசியை வாங்கிவிட்டு அதுக்கப்புறமா சாப்பாட்டை கொடுங்க'' என்று உரத்தக் குரலில் கத்திவிட, அவர்களுக்கும் அவமானமாக போயிருக்கும். உடனே கையிலிருந்த தொலைபேசியை வாங்கிய அப்பெண்ணின் அப்பா தன்னுடைய பைக்குள் போட்டுவிட்டார். அதனால் கொஞ்ச நேரம் கத்திய அப்பிள்ளை ஓய்ந்துவிட, மீண்டும் சாப்பாட்டினை ஊட்டிவிட பசியினை உணர்ந்த அப்பிள்ளை எந்த மறுப்புமில்லாமல் சாப்பிடத் தொடங்கியது.

(முற்றும்)

( 1 - 8 )

(கோப்பி தோட்டத்தில்)

புள்ள பொறந்து இப்ப
ஆறுமாசோ தாண்டிருச்சி..
புருசன் நெனப்பலயே
மாசகணக்காகிருச்சி....

பொறந்த இந்த பொட்டப்புள்ள
முனியாண்டி
பயலாட்டம் அப்பிடியே
உரிச்சிருக்கா...

மூக்காயி இப்போ
கோப்பி தோட்ட
மலையில் எல்லாம்
வேலை செய்ய பழகிக்கிட்டா...

எங்கயாச்சும் ஓரிடத்தில்
முனியாண்டியோட
சேந்து சின்னப்பய ராசனும்
உசுரோட இருக்கணும்னு
ஆண்டவர வேண்டிக்குவா....

புருசனோட நெனப்பில்
அவ கோப்பி பழம்
புடுங்கையில ஒருநாள்
கோப்பி பழத்தை எல்லாம்
தூக்கி எறிஞ்சிப்புட்டா...

எடுபட்ட கழுதையினும்
எச்சக்கல நாயியினும்
கங்காணி பலமாதிரி
திட்டிப்புட்டு புள்ள பெத்த
பொம்பலனு நெனப்பு கூட
இல்லாம வவுத்தில்
ஒதச்சிபுட்டா...

ஐயா சாமியினு மயங்கி
விழுந்தவள அக்கப்பக்க
ஆளுகதா தூக்கி கொண்டு
போனாய்ங்க மயக்கம்
தெளிஞ்சிட மணிக்கணக்கு
ஆகியது...

மயக்கம் தெளிஞ்சிட்டாலும்
அந்த வெளங்காத நாயி
மவே வவுத்தில் ஒதச்ச ஒத
இன்னமும் வலிக்கிறதா
வள்ளியம்மே கெளவிக்கிட்ட
அவ அப்பப்போ
அழுதுக்குவா....

மூக்காயி ரெண்டு புள்ள
பெத்தாலும் இளவட்ட
பெண்டுமாதிரி வடிவாக
தானிருந்தா புருசே வேற
கூட இல்ல..

வள்ளியம்மே கெழவிக்கிக்கூட
அந்திநேரம் அவ்வளவா
பார்வையில்ல..

வதுளையில மூக்காயி
சேந்த ஊரு தொங்கு தோட்டம்
என்று சொல்லி மலையோர
காட்டு ஊரு...

அந்த தோட்டத்துக்கு
புதுசாக வந்திருந்த சீமதொர
அவ்வளவா சரியுமில்ல
கங்காணிமாருகள
பங்களாவில் கூட்டிவச்சி...

அழகான பெட்டைகளா
கூட்டியார சொல்லுவானாம்
கங்காணி கவ்வோதியும்
இளசு பொடுசுகள ஏமாத்தி
கூட்டிவந்து சீரழிச்சி விட்டுப்
புட்டு

சீமை தொர குடிச்சி
வச்ச வெளிநாட்டு போதைகள
இவிங்களும் குடிச்சிட்டு
மப்புல திரியிவாய்ங்க...

சீரழிந்த பொண்ணுகளும்
விதிய நொந்துக்கிட்டு
வாழுவாங்க...
இல்லயின்னா தூக்கி மாட்டி
தொங்குவாங்க....

அந்தா ஒரு கறுத்த பொண்ணு
தலை எல்லாம் கலைஞ்ச
மாதி ஆத்துப்பக்கம்.
பொறப்படுது...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

தொடரும்...
எம். ராமதாஸ்
இறம்பொடை



# முகநூல் காதல்



தமிழன் தொடர்கதை

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

அத்தியாயம் ௦2

அவன் தனியார் நிறுவனமொன்றில் வேலை பார்க்கிறான். அவன் இந்தியாவைச் சேர்ந்தவன். அவனுடைய அப்பா, அம்மா, குடும்பங்கள் வேறு மாநிலத்தில் வாழ்ந்தாலும் அவனது வேலை நிமிர்த்தம் அவன் இங்கே இருக்கவேண்டிய சூழ்நிலை.

அவன் தங்கிக்கொள்வதற்கு வேறு இடம் இருந்தபோதும் அவளுக்காகவே அவன் இங்கு தங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. என்றெல்லாம் அவன் இவளிடம் சொல்லி இருந்தான்.

அவள் இலங்கையைச் சேர்ந்தவள். அவளுக்கும் அம்மா, அப்பா என்ற உறவுகள் இருக்கிறார்கள்தான். அவர்கள்

அவளின் ஆசைகள் எதுவாக இருந்தாலும் செய்து கொடுப்பார்கள். அவளோடு கூடப்பிறந்தவர்கள் யாருமில்லை. அதனால் அவள் வீட்டில் மிகவும் செல்லப்பிள்ளையாகவே வளர்ந்து வந்தாள்.

கணினி, தொலைபேசி என்று அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்து குளிரூட்டி, மென்மையான மெத்தை என்று எல்லாமே சொகுசு வாழ்க்கைதான். அத்தனையும் மறந்து பெற்றவரை துறந்து அவர்களின் தவிப்பை கூட நினைத்துப் பார்க்காமல் பிரகாஷை நம்பி முட்டாள்தனமாக இந்தியாவுக்கு வந்தவள், அதைவிட முட்டாள்தனமான ஒரு முடிவினை எடுப்பதற்காகவே இப்போது துணிந்திருக்கிறாள். அதற்கான வழியையே இப்போது தேடியும் கொண்டிருந்தாள்.

பிரகாஷுக்கும் அவளுக்குமான உறவு மிகவும் நீண்ட நாள் உறவல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்னர் முகநூல் மூலமாகதான் அது ஆரம்பித்தது.

பிரகாஷ் கவிதைகள் எழுதக்கூடியவன். அதிகமாய் காதல் கவிதைகள் எழுதும் அவனது கவிதைகளில் இளசுகளின் உணர்வுகளை சற்று உரசிப்பார்க்கக் கூடிய வரிகள் அக்கவிதைகளை அலங்கரிக்கும். அவ்வரிகளால் இளம் வட்டங்களை வசீகரிக்கக் கூடியவன். அதனை ரசிக்கும் இளம் சிட்டுகளில் அவளும் ஒருத்தியாய் சிறைப்பட்டுவிட்டாள்.

அவ்வாறு ரசித்து வந்தவள், அடிக்கடி அவனுடைய கவிதைகளுக்கு பின்னூட்டலில் தனது கருத்தினை தெரிவித்து வந்தாள். சிலநேரங்களில் உள் பெட்டிக்குள் சென்று, ''என்ன உங்களின் கவிதையில் விரசம் அதிகமாக இருக்கிறதே'' என்பாள்.

அதனைக் கேட்கும் பிரகாஷ், ''கவிதையென்றால் அப்படியெல்லாம் இருக்கத்தான் செய்யும். அப்போதுதான் வாசகர்கள் ரசிப்பார்கள். வெறுமனே கருத்தாக கவிதை இருக்கக்கூடாது அதில் சுவை இருக்கவேண்டும். இளமை கூட ஒரு சுவைதான். அதனால் அதனை சுவையாகத்தானே சொல்ல வேண்டும். சோகமாக சொல்ல முடியுமா...?'' என்பான்.

''உன் விழியைத்தான் பார்த்தேன். அது

என்னை விடியும்வரை விழிக்க வைத்துவிட்டது'' என்று அவள் சொல்வதற்கெல்லாம் அவன் ஒரு சிறு கவிதை சொல்வான். அது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவளுடைய உள் பெட்டியில் சுகம் விசாரிக்கும் பிரகாஷ், தங்களின் கருத்து மூலம் தரும் உற்சாகத்திற்கு மிக்க நன்றி என்றும் சொல்லுவான்.

அதற்கு அவளும் பதில் அனுப்புவாள். இப்படியேதான் ஆரம்பித்தது அவர்களின் தொடர்பு. அது மெல்ல மெல்ல வளர்ந்து கடைசியில் காதல் செடியாகியும் விட்டது.

இருவரும் வெவ்வேறு நாடுகளில் இருந்தாலும் தொலைத்தொடர்புகள் மூலம் இணைந்துகொண்ட இருவர்களது மனங்களும் ஒன்றாகிவிட்டன.

# அஜீரணத்தை குணப்படுத்தும் பாட்டி வைத்தியங்கள்



வயிற்றில் ஏற்படும் அஜீரணக் கோளாறு மருத்துவத் துறையில் டிஸ்பெப்சியா (dyspepsia) என அழைக்கப்படுகிறது. சரியாக சாப்பிடாதவர்கள், ஜீரணக் கோளாறு இருப்பவர்களுக்கு அஜீரணம் ஏற்பட வாய்ப்புள்ளது. வயிறு உப்புசமாக உணர்ந்தாலோ, வயிறு வலித்தாலோ அது அஜீரணமாக இருக்கலாம்.

அஜீரணம் ஏற்பட பல காரணிகள் உள்ளன. காரமான உணவு, சாப்பிட்டவுடன் படுப்பது, மன இறுக்கம், பதற்றம், மது அருந்துதல், புகைபிடித்தல் ஆகியவை அஜீரணம் ஏற்பட காரணிகளாக உள்ளன.

இரைப்பைப் புற்றுநோய் (stomach cancer), இரைப்பை அழற்சி (gastritis), குடற்புண் (peptic ulcers), பித்தப்பைக் கல் (gallstones), கணைய அழற்சி (pancreatitis) ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அஜீரணம் ஏற்பட வாய்ப்புள்ளது.

வாய் குமட்டுதல், வாய் துர்நாற்றம், வயிற்று வலி, நெஞ்செரிச்சல், வாய் புளித்தல், வயிற்றுப்போக்கு, பசியின்மை, வாயு தொல்லை, வயிறு உப்புசம் போன்றவை அஜீரணத்திற்கான அறிகுறிகளாகும்.

### அஜீரணத்தை குணமாக்க வீட்டு வைத்தியம்

**இஞ்சி:** உணவுடன் இஞ்சி சேர்த்துக்கொள்ளலாம் அல்லது இஞ்சி தேநீர் அருந்தலாம். இஞ்சியில் ஆண்டி ஆக்சிடண்ட் இருப்பதால் அஜீரணத்தை குணப்படுத்த உதவும். இஞ்சியில் வலி மற்றும் அழற்சியை குணப்படுத்தும் தன்மை உள்ளது.

**எலுமிச்சை:** சாப்பிட்ட பிறகு எலுமிச்சை ஜூஸ் குடித்தால் வயிற்றெரிச்சல் மற்றும் வயிற்று வலி குறையும்.

**புதினா:** குடல் தசைகளை மிருதுவாக்க புதினா உதவுவதுடன், வாய் துர்நாற்றத்தை நீக்கும், வாய் குமட்டுதலை குணமாக்கும். சாப்பிட்ட பிறகு புதினா இலைகள் அல்லது புதினா தேநீர் பருகலாம்.

**சமையல் சோடா:** வயிற்று அமிலத்தை சமன் செய்ய சமையல் சோடா உதவும். அஜீரணம் மற்றும் நெஞ்செரிச்சலுக்கு நிவாரணம் தரும். நாளுக்கு ஒருமுறை ஒரு டேபிள் ஸ்பூன் சமையல் சோடாவை தண்ணீர் அல்லது தேனில் கலந்து சாப்பிடலாம்.

**நெல்லிக்காய்:** நாளுக்கு ஒருமுறை நெல்லிக்காய் சாப்பிட்டு வர அஜீரணக் கோளாறு நீங்கும்.

**இலவங்கப்பட்டை:** ஆண்டி ஆக்சிடண்ட் இருப்பதால் அஜீரணத்தை குணப்படுத்த இலவங்கப்பட்டை உதவும். இதனை அப்படியே சாப்பிடலாம் அல்லது தேநீரில் கலந்து நாளுக்கு 2-3 முறை அருந்தலாம்.

**பெருஞ்சீரகம்:** இரைப்பை நீர் சுரக்க பெருஞ்சீரகம் உதவும். பெருஞ்சீரகத்தை அப்படியே சாப்பிடலாம் அல்லது நீருடன் கலந்து சாப்பிடலாம்.

**தேன்:** பக்டீரியாக்கள் உற்பத்தியை தடுப்பதன் மூலம் அஜீரணத்தை குணப்படுத்த தேன் உதவும். தேனை அப்படியே சாப்பிடலாம் அல்லது வெதுவெதுப்பான நீரில் கலந்து சாப்பிடலாம்.

# தாழ்வு மனப்பான்மையை போக்க என்ன செய்யலாம்?



நம்மில் பலர் நமது நிறைகளை ரசிக்காமல், குறைகளை மட்டுமே கவனிக்கிறோம். அதை மற்றவர்களுடன் ஒப்பிட்டு 'அவர்களைப்போல் தோற்றம், அழகு, உடல் அமைப்பு இல்லையே' என யோசித்து மன அழுத்தம் கொள்கிறோம். இதனால் நம்மை அறியாமலே நமக்குள் தாழ்வு மனப்பான்மை உருவாகிறது.

உங்கள் தாழ்வு மனப்பான்மையை போக்க இவற்றை செய்துபாருங்கள்.

### உங்களை நேசிக்க கற்றுக்கொள்ளுங்கள்:

பல நேரங்களில் பிறர் நம்மை நேசிக்கவில்லையே என்று கவலை கொள்கிறோம். பிறர் உங்களை நேசிக்க வேண்டுமெனில், முதலில் உங்களை நீங்கள் நேசிக்க வேண்டும். மாசு மருவற்ற முகம், கட்டுக்கோப்பான உடலமைப்பு, அளவான உயரம் மட்டும் தான் அழகு என்று எண்ணுவதை விட்டுவிடுங்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படியே உங்களை விரும்புங்கள்.

### உங்களிடம் நேர்மறையாக பேசுங்கள்:

'எனக்கு அழகு இல்லை, உடல் எடை அதிகமாக உள்ளது, முகத்தில் பருக்கள் உள்ளது, உயரம் குறைவாக இருக்கிறேன்' என எதிர்மறையாக பேசுவதை நிறுத்துங்கள். காலையில் எழுந்தவுடன், கண்ணாடி முன்பு நின்று 'நான் அழகாக இருக்கிறேன், என் தோற்றம் அழகாக உள்ளது' என நேர்மறையாக பேசுங்கள். முகத்தில் புன்னகையுடன் சில நிமிடங்கள் கண்ணாடியைப் பார்த்து எந்தவித எதிர்மறை எண்ணங்களும் இல்லாமல், உங்களை நீங்களே பாராட்டுங்கள், ரசியுங்கள். உங்கள் காதலரோடு, கணவரோடு எப்படி அன்பாக பேசுவீர்களோ, அதேபோல் உங்களிடம் அன்பாக இருங்கள்.

### மற்றவருடன் ஒப்பிடாதீர்கள்:

நிறத்திற்கும், அழகிற்கும் சம்பந்தமில்லை என்பதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். நம்மை அடுத்தவர்களுடன் ஒப்பிடுகையில், தாழ்வு மனப்பான்மை அதிகமாகும். இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான அழகுதான். உங்களுக்கு இருக்கும் கண், மூக்கு, காது, நிறம், உடலமைப்புபோல் இந்த உலகில் வேறு யாருக்கும் இல்லை. அதனால் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடாதீர்கள். உங்களுடைய மதிப்பு உங்களின் அழகில் இல்லை, உங்கள் திறமையில்தான் உள்ளது. மற்றவர்களைவிட நீங்கள் தனித்துவமாகவும், அழகாகவும் இருக்கிறீர்கள் என்பதை ஆழமாக நம்புங்கள்.

### மற்றவர்கள் சொல்வதை கேட்காதீர்கள்:

உங்கள் தோற்றத்தைப் பற்றி எதிர்மறையான கருத்துகளை மற்றவர்கள் கூறினால், அதை காது கொடுத்து கேட்காதீர்கள். மற்றவர்கள் கூறுவதை தடுக்கும் சக்தி நம் கையில் இல்லை. ஆனால், நாம் அந்த கருத்தை எப்படி மூளைக்குள் எடுத்துக்கொள்கிறோம் மற்றும் உணர்கிறோம் என்பது நம் கையில் உள்ளது. மற்றவர்கள் கூறும் கருத்திற்கு, சவாலாக இருக்கும் நேர்மறை கருத்தை மனதில் நிறுத்துங்கள். உதாரணமாக, ஒருவர் உங்களது ஆடையைப் பற்றி குறையாக பேசினால், அதை யோசித்து தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல், 'நான் இந்த ஆடையில் மிகவும் அழகாக இருக்கிறேன் அல்லது அவர்கள் என்ன பேசுகிறோம் என்று யோசிக்காமல் பேசுகிறார்கள்' என்று எதிர்மறையாக வரும் கருத்துகளையும்கூட நேர்மறையாக மாற்றுங்கள்.

ஆரோக்கியமாகவும், தன்னம்பிக்கையோடும் இருக்கும்போது மற்றவர் கண்களுக்கு இயல்பாகவே நீங்கள் அழகாகத் தெரிவீர்கள்.

## காரிகை களம்



# உடல் எடையை குறைக்க உதவும் வற்றாளைக் கிழங்கு



உடல் எடையை குறைக்க முயற்சி செய்பவர்களுக்கு உருளைக்கிழங்கு எதிரியாக அமைந்திருக்கும். ஆனால், அதே ரகத்தைச் சேர்ந்த வற்றாளைக் கிழங்கு நண்பனாக அமையும். ஏனெனில், வற்றாளைக் கிழங்கில் நார்ச்சத்து போன்ற ஸ்டார்ச் எதிர்ப்புப்பொருள் உள்ளது. அவை உடலில் உறிஞ்சப்படுவதில்லை. கார்போஹைட்ரேட்டுகளுக்கு பதிலாக இதுபோன்ற ஸ்டார்ச் எதிர்ப்புகொண்ட உணவுகளை சாப்பிடுவது கொழுப்பை எரிக்கும் செயல்முறையை துரிதப்படுத்தும். உடல் எடை இழப்புக்கும் பக்கபலமாக அமையும். மேலும் வற்றாளைக் கிழங்கை சாப்பிடுவது பசியை கட்டுப்படுத்தும். பசி உணர்வின்றி வயிறு நிறைந்த திருப்தியை நீண்டநேரம் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

விற்றமின் ஏ மற்றும் சி தவிர, வற்றாளைக் கிழங்கில் விற்றமின் பி, மாங்கனீசு, பொட்டாசியம் போன்ற பிற அத்தியாவசிய ஊட்டச்சத்துகளும் அதிகம் இருக்கின்றன.

வற்றாளைக் கிழங்கை தினமும் சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பது குறித்து பார்க்கலாம்.

வற்றாளைக் கிழங்கு போன்ற ஆன்டி ஆக்சிடென்ட் உணவுகளை சாப்பிடுவது செல்கள் முதிர்ச்சியடைவதை தடுக்கும். இதன்மூலம் வயதான தோற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தவிர்க்கப்படும். மேலும் நாட்பட்ட நோய்களை தடுக்கவும் உதவும்.

விற்றமின் ஏ மற்றும் விற்றமின் சி ஆகியவை ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு தேவையான விற்றமின்களாகும். ஆட்டோ இம்யூன் உள்ளிட்ட கொடிய நோய்களிடம் இருந்து தற்காத்துக்கொள்வதற்கு இந்த இரண்டு விற்றமின்களும் உள்ளடங்கி இருக்கும் உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். மழைக்காலம் மற்றும் குளிர்காலத்தில் வற்றாளைக் கிழங்கு சாப்பிடுவது சளி, இருமல் மற்றும் காய்ச்சல் அபாயத்தை குறைக்கும்.

விற்றமின் ஏ மற்றும் சி தவிர, வற்றாளைக் கிழங்கில் விற்றமின் பி, மாங்கனீசு, பொட்டாசியம் போன்ற பிற அத்தியாவசிய ஊட்டச்சத்துகளும் அதிகம் இருக்கின்றன. இவை எலும்பு தேய்மானம் ஏற்படும் அபாயத்தை குறைக்கின்றன.

நீரிழிவு நோய் இருப்பவர்கள் வற்றாளைக் கிழங்கை சாப்பிட்டால் இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கும் என்பது தவறான கருத்தாகும். வற்றாளைக் கிழங்கில் ஸ்டார்ச் எதிர்ப்புப் பொருள் உள்ளது. இது கார்போ ஹைட்ரேட்டில் இருந்து கிடைக்கும் ஸ்டார்ச்சை விட வித்தியாசமானது. வற்றாளைக் கிழங்கில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் அதிலிருக்கும் ஸ்டார்ச் மெதுவாக எரிந்து நீண்டநேரம் ஆற்றலை அளிக்கும். மேலும் இரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரிக்காது.

உயர் இரத்த அழுத்த பிரச்சினை கொண்டவர்கள் சர்க்கரை வள்ளிக்கிழங்கு சாப்பிடுவதற்கு தயங்க வேண்டியதில்லை. ஏனெனில், இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்துக்கொள்ள உதவும். வேகவைத்த சர்க்கரை வள்ளிக்கிழங்கில் வாழைப்பழத்தில் இருப்பதைவிட பொட்டாசியம் சத்து அதிகமாக இருக்கும். பொட்டாசியம் இரத்த அழுத்தத்தை சீராக்க உதவும். உடலிலிருந்து கூடுதல் சோடியத்தை அகற்றவும் வழிவகை செய்யும். இதய ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.

# கடலை மாவு போண்டா



### தேவையான பொருட்கள்:

கடலை மாவு – 300 கிராம்
பெரிய வெங்காயம் – 3
ஆப்ப சோடா – கால் டீஸ்பூன்
உப்பு – தேவையான அளவு,
பச்சை மிளகாய் – 2
கறிவேப்பிலை – சிறிதளவு
கொத்தமல்லித்தழை – சிறிதளவு
எண்ணெய் – தேவைக்கேற்ப.

### செய்முறை :

கொத்தமல்லி, பெரிய வெங்காயம், ப.மிளகாயை பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் கடலை மாவை போட்டு அதனுடன் அப்ப சோடா மற்றும் உப்பு சேர்த்து நன்கு கலந்து கொள்ளுங்கள்.

பின்னர் அதனுடன் நறுக்கிய கொத்தமல்லி, பெரிய வெங்காயம், ப.மிளகாயை போட்டு கலந்துகொள்ளவும்.

கடலை மாவு போண்டா மொறுமொறுவென்று ரொம்பவே சுவையாக வருவதற்கு ஒரு இரகசியமுண்டு. கடைகளில் பெரும்பாலும் இதனை பின்பற்றிதான் மொறுமொறு போண்டாக்கள் செய்வது வழக்கம். ஒரு குழி கரண்டி அளவிற்கு எண்ணெயை சூடேற்றிக்கொள்ளுங்கள். சூடான எண்ணெயை இதனுடன் கலந்து பிசைந்தால் போண்டா சுடுவதற்கு மொறுமொறுவென்று சூப்பராக வரும்.

எண்ணெய் கலந்த பின்பு தேவையான அளவிற்கு தண்ணீரை தெளித்து போண்டா மாவு பிசையுங்கள். கெட்டியான போண்டா மாவு பதத்துக்கு மாவு பிசைந்து கொள்ளவும்.

ஒரு கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் அடுப்பை மீடியமாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு நீங்கள் கலந்து வைத்துள்ள மாவிலிருந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் போட்டு இருபுறமும் சிவக்க நன்கு வேகவைத்து எடுக்க வேண்டும்.

சிறு சிறு உருண்டைகளாக இல்லாமல், பெரிதாக போட்டால் மேலே மொறுமொறுவென்றும் உள்ளே சரியாக வேகாமல் இருக்கலாம். எனவே, சிறு சிறு போண்டாக்களாக போட்டு எடுப்பது நல்ல ருசி கொடுக்கும்.

# அழகுக் குறிப்புகள்

- *கூந்தலுக்கு கெமிக்கல் கலந்த கண்டிஷனர்களைப் பயன்படுத்துவதற்கு பதிலாக தயிரைப் பயன்படுத்தினால், கூந்தல் நன்கு பட்டுபோன்று, மென்மையாக இருக்கும். முடி உதிர்வு பிரச்சினை நீங்கி, முடி அடர்த்தியாக வளர உதவி செய்யும்.*

- கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளர எலுமிச்சை மிகவும் உதவி செய்கின்றது, அதாவது, எலுமிச்சை சாறுடன் சிறிதளவு தயிர் கலந்து தலைக்கு மசாஜ் செய்து, பின்பு சிறிதுநேரம் கழித்து குளிர்ந்த நீரால் தலையை அலச வேண்டும். இவ்வாறு வாரத்தில் இரண்டு முறை செய்து வர தலை சுத்தமாக காணப்படும். மேலும் பொடுகு தொல்லை நீங்கும், அதேபோல் முடி உதிர்வு பிரச்சினை தடுக்கப்படும்.

- உதடு மென்மையாக மற்றும் வறட்சியின்றியும் இருப்பதற்கு லிப்-பாம்களை பயன்படுத்தாமல், சிறிது நெய்யை தடவி வந்தால், உதடுகளில் வெடிப்புகள் ஏற்படாமல் தடுக்கலாம். இவ்வாறு செய்வதினால் உதடு மென்மையாக மற்றும் வறட்சியின்றியும் காணப்படும்.

- சருமத்திற்கு க்ரீம்கள் மற்றும் லோசன்கள் பயன்படுத்துவதற்கு, தேங்காயெண்ணெய் அல்லது கடுகு எண்ணெயை தடவினால், சருமம் மென்மையாக, ஈரப்பதத்துடன், சுருக்கமின்றி இருக்கும்.

- தேங்காயெண்ணெயை வெதுவெதுப்பாக சுடேற்றி, தலைக்கு தடவி நன்கு 20 நிமிடம் மசாஜ் செய்து, 30 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முடி வளர்ச்சி அதிகரிப்பதோடு, முடி அடர்த்தியாக வளரும்.

- முகம் பொலிவுடன் இருக்கவேண்டும் என்று கடைகளில் விற்கும் ஃபேஸ் மாஸ்க்குகளை போடுவதற்குப் பதிலாக, பழங்களை வைத்து மாஸ்க் போட்டால், அதிலுள்ள சத்துகள் முகத்தை பளிச்சென்று பொலிவுற வைக்கும். அதிலும் மாம்பழம், பப்பாளி, எலுமிச்சை, திராட்சை, ஸ்ட்ராபெர்ரி போன்றவை மாஸ்க் போடுவதற்கு மிகவும் சிறந்த பழங்கள்.



# இதுதான் முதலும் கடைசியும் -ரெஜினா

தெலுங்கு, தமிழ் இரண்டிலும் கதாநாயகியாக நடித்துவரும் ரெஜினா விரைவில் சிரஞ்சீவி நடிப்பில் வெளியாகவுள்ள 'ஆச்சார்யா' திரைப்படத்தில் சானா கஸ்டம் என்ற ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாடி இருக்கிறார். இந்தப் படத்தில் பூஜா ஹெக்டே, காஜல் அகர்வால் என இரண்டு கதாநாயகிகள் இருந்தாலும், அவர்களுக்கென இதுபோன்று குத்து பாடல்கள் இல்லாமல் ரெஜினாவுக்கு மட்டுமே அது ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் படத்தில் தான் ஒரு பாட்டுக்கு ஆடியது இதுதான் முதலும் கடைசியும் என ஓர் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார் ரெஜினா.

இதுபற்றி சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறும்போது, ''ஒரு பாட்டுக்கு ஆடுவதில் எனக்கு எப்பவும் விருப்பம் இருந்ததில்லை. ஆனால், ஒரே ஒருவரை தவிர, நான் சில வருடங்களுக்கு முன்பு ஒரு பேட்டியில் கூறும்போது கூட, சிரஞ்சீவியுடன் மட்டும் வாய்ப்பு கிடைத்தால் ஒரு பாட்டுக்காவது ஆடிவிட வேண்டும் என்ற எனது ஆசையை தெரிவித்திருந்தேன். காரணம், அது என் பாக்கெட் லிஸ்ட்டில் இடம்பிடித்த ஆசைகளில் ஒன்று. அதற்கேற்றாற்போல் 'ஆச்சார்யா' படத்தில் வாய்ப்பு வந்ததும் எந்த மறுபேச்சும் பேசாமல் ஒப்புக்கொண்டேன். சிரஞ்சீவியுடன் இணைந்து நடனம் ஆடுவதுபோன்ற வேறு இனிய அனுபவம் ஏதாவது இருக்கிறதா என்ன? ஆனால், அவருடன் சேர்ந்து ஆடிய பின் இதுவே ஒரு பாடலுக்கு ஆடுவது முதலும் கடைசியுமாக இருக்கும் என்று கூறியுள்ளார் ரெஜினா.



# 13 படங்களில் நீக்கப்பட்டேன் - வித்யாபாலன்

பொலிவூட்டின் முன்னணி நடிகையாக இருப்பவர் வித்யாபாலன். முதலில் தமிழ் படத்தில் நடிக்க வந்து இங்கு வாய்ப்பு கிடைக்காமல் புறக்கணிக்கப்பட்டு, பல்வேறு அவமானங்களை சந்தித்து அதன்பிறகு பொலிவூட்டுக்கு சென்று முன்னணி நடிகையானார். ஆரம்பகால சினிமாவில் தான் சந்தித்த அவமானங்கள் குறித்து ஏற்கனவே பேசியிருக்கிறார்.

ஆனாலும் 2 பாலச்சந்தர் படத்திலிருந்து நீக்கப் பட்டதை தற்போது கூறியிருக்கிறார்.

தற்போது அவர் நடித் துள்ள 'சல்ஜா' படம் ஓடிடி தளத்தில் வெளி யாகியுள்ளது. இதன் புரமோசனுக்காக அளித்த பேட்டியில் வித்யாபாலன் இதுகுறித்து கூறியிருப் பதாவது:

நான் நடிக்க வந்த புதிதில் நடந்த சம்பவங்களை என்னால் மறக்கவே முடியாது. 13 படங்களி லிருந்து நான் நீக்கப்பட்டேன். அதில் ஒரு படத்தில் நடிப்பதிலிருந்து தயாரிப்பாளர் என்னை நீக்கிவிட்டு, என்னிடம் நடந்துகொண்ட விதம் மறக்க முடியாதது. அவர்கள் என்னிடம் மோசமாக நடந்துகொண்டனர். நான் மிகவும் அசிங்கமாக இருப்பது போன்று உணர வைத்தனர். அதனால் கண்ணாடியில் என்னை பார்ப்பதற் கான தைரியம் வர எனக்கு 6 மாதங் கள் தேவைப்பட்டது.

2004 ஆம் ஆண்டு காலகட்டத்தில், இயக்குநர் கே. பாலசந்தரின் 2 படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டேன். அப்போது, வேறு பல படங்களிலிருந்து நான் விலக்கப்பட்ட நேரம், ஆனாலும் பாலச்சந்தர் படத்திலிருந்து நீக்கப்பட மாட்டேன் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். பாலச்சந்தரின் படப்பிடிப்புக்காக நியூசிலாந்துக்கு செல்லவிருந்த நிலையில் என்னை நீக்கிவிட்டனர். என்னிடம் அதுபற்றி கூறவில்லை. எனது தாயார் கேள்விப்பட்டு என்னிடம் சொன்னார்.

ஆத்திரத்தில் மரைன் டிரைவிலிருந்து பந்திரா பகுதிவரை அந்த நாளில் நடந்தே சென்றேன். கடும் வெயிலில் மணிக்கணக்கில் நடந்து சென்றேன். நிறைய அழுதேன். அந்த நினைவுகள் இன்றும் என்னை விட்டு நீங்காமல் உள்ளன - என்று கூறியிருக்கிறார்.




# நிறைய தோல்விகளை சந்தித்த நபர்தான் நான் - பூஜா ஹெக்டே



''இளைய தளபதி விஜய்ல ஆரம்பிச்சு ஹிருத்திக் ரோஷன் வரைக்கும் எனக்கு எப்பவுமே டஃப் கொடுத்துட்டே இருக்கிற ஹீரோக்களாதான் ஜோடி சேர்றாங்க...'' பிரபாஸ் ஜோடியாக 'ராதே ஷ்யாம்', விஜய் ஜோடியாக 'பீஸ்ட்' படத்தின் 'அரபிக் குத்து...' பாடல் 100 மில்லியன் ரீச் என பூஜா ஹெக்டே கூறுகிறார்.

**'ராதே ஷ்யாம்' எங்க எப்படி உங்களை இம்ப்ரஸ் செய்தது?**

நிஜத்தில் நீங்க பார்க்கற பூஜா எப்படியோ, கிட்டத்தட்ட அதே கெரக்டர் ஸ்கெட்ச்தான் 'ராதே ஷ்யாம்' படத்துல என்னுடைய பிரெர்னா கதாபாத்திரம். டைரக்டர் ராதா கிருஷ்ண குமார் அந்த கெரக்டர் டீடெயிலை விவரிக்கும்போதே எனக்கு கதை பிடிச்சிருச்சு. காதல் படங்களுடைய ஸ்பெஷலே ஹீரோ - ஹீரோயின் கெமிஸ்ட்ரிதான். அந்த கெமிஸ்ட்ரியை கதைக்குள்ளயும் திரைல பிரபாஸுக்கும் எனக்கும் கூட நிறையவே பார்க்க முடிஞ்சது. இது ஒர்க்அவுட் ஆகும்னு தோணுச்சு. அதேமாதிரி நடந்திருக்கு!

**லக்கி சார்ம் பூஜா ஹெக்டே... இந்தப் பெயர் கிடைக்க நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டீங்க?**

நிறைய. ஒரு காலத்துல ஏராளமான தோல்வியை சந்திச்ச நபர்தான் நான். ஆனா, மக்களை மகிழ்விக்கத்தான் என் நேரத்தை இப்படி செலவு செய்யறேன்னு நினைச்சதுமே எனர்ஜி வந்துடும். என் கஷ்டம், ஹார்டு வேர்க் எல்லாம் பெருசா தெரியாது.நிறைய... நிறைய கடினமான சூழல்களை சந்திச்சிருக்கேன். யாரோ ஒருத்தர், எங்கேயோ ஒரு மூலைல 'ஆல வைகுண்டபுரமோ' தெலுங்குப் படத்துல வந்த 'புட்ட பொம்மா...' பாடலைப் பார்த்தோ அல் லது விஜய் கூட நான் ஆடியிருக்கிற 'அரபிக் குத்து...' பாட்டுக்கு தாளம் போட்டோ சந்தோஷமா இருக்காங்கன்னா அதுதான் என்னுடைய வெற்றி. கஷ்டப்பட்டு எந்த உதவியும் இல்லாம இந்த நிலைக்கு வந்திருக்கறதால எப்பவும் நான் வெற்றியை ஒரு பொருட்டா பார்த்ததே இல்ல. ஏராளமான தோல்விகள் கொடுத்த பக்குவம்தான் இப்ப எனக்குக் கிடைச்சிருக்கற இந்த ஸ்டேஜ்.

**இந்தியாவின் ஆகச் சிறந்த இயக்குநர்களின் ஃபேவரைட் ஹீரோயினா தொடர்ந்து இருக்கீங்க... இது எப்படி சாத்தியப்பட்டது?**

என்னைப் பொறுத்தவரை மொழி ஒரு தடையே கிடையாது. என் கனவு, ஆசை எல்லாமே இந்திய நடிகையாகணும் என்பது தான். தமிழ்லதான் முதல் என்ட்ரீ. இப்ப மறுபடியும் 'ராதே ஷ்யாம்', 'பீஸ்ட்' வழியா தமிழ் ஆடியன்ஸை சந்திக்கறேன். நிறைய பேர் இந்த கேப்பை ஒரு நெகட்டிவா யோசிக்கறாங்க. ஆனா, நான் அப்படிப் பார்க்கலை. இப்ப எப்படி என்ட்ரீ ஆகியிருக்கேனோ அதைத்தான் நான் சந்தோஷமா பார்க்கு றேன்.இப்படி எல்லா விஷயத்தையும் பொஸிட்டிவா பார்க்கற மனுஷி நான். இந்த பொஸிட்டிவ் எண்ணம் காரணமாதான் இயக்குநர்களும், ஹீரோக்களும் திரும்பத் திரும்ப என்னையே ஹீரோயினாக ஃபிக்ஸ் செய்யறாங்கன்னு நம்புறேன்.

**நம்பர் 1 நடிகை என்கிற போட்டியில் நம்பிக்கை இருக்கா?**

நிச்சயமா இல்ல. இந்த நம்பர் கேம் ஒரு மாயை. மக்கள் சொய்ஸ், மார்க்கெட் இதெல்லாம் மாறிட்டே இருக்கும். நல்ல நடிகை என்கிற பெயர்தான் நிலைக்கும். அதுதான் என்னுடைய டார்கெட். அதேபோல் நம்பர் ஒன் நடிகை என்ற பெயரை விட, இப்ப இருக்கற இளம் பெண்களுக்கு ஒரு இன்ஸ்பிரேஷனா இருக்கதான் நான் முயற்சி செய்வேன். அதுக்கு ஏற்பதான் படங்கள்ல நடிக்கறேன்.

**ஹீரோயின் அடிப்படையிலான ஒரு படம் பூஜா ஹெக்டேகிட்ட இருந்து எப்ப கிடைக்கும்?**

ஆக்ச்சுவலி நாங்க ஹீரோயின்ஸ்... பெண்கள் சார்ந்த கதைகள்ல நடிக்கத் தயாராகிட்டோம். நடிச்சு நிறைய படங்களும் வர ஆரம்பிச் சிடுச்சு. ஆனா, ஹீரோக்கள்தான் இன்னமும் ஹீரோயின்கள் இல்லாம ஒரு படம் கூட நடிக்கத் தயாரா இல்ல. இதுவே பெரிய மாற்றம் இல்லையா?! நிச்சயம் நல்ல கதை வந்தா ஹீரோயின் சென்ட்ரிக் படத்துல நடிக்க நானும் தயார்!

**'அரபிக் குத்து...' பாடல் அனுபவம் பத்தி சொல்லுங்க?**

ஆக்ச்சுவலா 'அரபிக் குத்து...' பாட்டுக்காக தளபதி கூட டான்ஸ் ஆடி என் வெயிட்டை நான் குறைச்சிருப்பேன்னு நினைக்கறேன். அவ்ளோ எனர்ஜியான மனுஷர். அவருக்கு ஈடுகொடுக்க முயற்சி செய்திருக்கேன். விஜய் டான்ஸ் ஆடும்போது பார்க்கணுமே... செம கூல் அண்ட் சில் மேன்! அப்பறம் 'பீஸ்ட்' பத்தி எந்த கேள்வியும் இப்ப கேட்காதீங்க... சொல்லக் கூடாது... அது ரகசியம்.

# ஏப்ரல் 7 இல் வெளியாகும் 'சாணிக்காயிதம்'

தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்களில் ஒருவரான செல்வராகவன் நடிப்பிலும் ஆர்வம் காட்டிவருகிறார் . அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் செல்வராகவன், கீர்த்திசுரேஷ் இணைந்து நடித்துள்ள படம் 'சாணிக்காயிதம்'. இந்தப் படத்திலிருந்து இதுவரை முதல்பார்வை மட்டுமே வெளியாகியுள்ளது. இந்தத் திரைப்படம் தியேட்டரில் வெளியாகாமல் நேரடியாக ஓடிடியில் ஏப்ரல் 7ஆம் திகதி வெளியாக இருக்கிறது. இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் செல்வராகவன் விஜயின் 'பீஸ்ட்' படத்தில் நடித்துள்ளார். அதுமட்டுமன்றி இயக்குநர் மோகன் ஜி இயக்கத்திலும் புதிய படம் ஒன்றில் நடிக்க கதாநாயகனாக இருக்கிறார்.




# முதல் முறையா கொமடி வேடத்தில் நடித்திருக்கேன் - அக்ஷரா ஹாசன்

இயக்குநர் ராஜா ராமமூர்த்தி இயக்கத்தில் அக்ஷரா ஹாசன் நடித்திருக்கும் 'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு' கடந்த வெள்ளிக்கிழமை அமேசான் பிரைமில் வெளியாகியது. தமிழில் 'கடாரம் கொண்டான்', 'விவேகம்', இந்தியில் 'ஷமிதாப்' என நடித்திருக்கும் அக்ஷரா, இந்தப் படம் குறித்து பேசும்போது,

"இந்தப் படத்தோட கதையைக் கேட்டப்போ ரொம்ப சுவாரஸ்யமா இருந்தது. ஏன்னா, இந்த மாதிரி கதையை பெருசா யாரும் பண்ணினதில்லை. ரொம்ப ஸ்ட்ராங்கான ஸ்க்ரிப்ட். அதுமட்டுமல்லாம, கதையை கொமடியாகவும் கொண்டுபோயிருக்காங்க. பெரியதொரு மெசேஜ் இருக்கு. ரொம்ப சென்சிட்டிவா இதை ஹேண்டில் பண்ணியிருக்காங்க. இந்தப் படத்தோட கெரக்டரோட நான் ரொம்ப கனெக்ட் ஆகியிருக்கேன். ஏன்னா, எல்லாரும் லைப்ல இந்த மாதிரி நிறைய விஷயங்களைத் தாண்டி வந்திருக்கோம். வாழ்க்கையோட சில தருணங்கள்கூட கனெக்ட் பண்ணி நடிச்சிருக்கேன்.

படத்துல நான் ரொம்ப அப்பாவியான கெரக்டர். முதல் முறையா கொமடி பண்ணியிருக்கேன். அதுவே ரொம்ப சவாலா இருந்தது. டைரக்டர் என்ன சொன்னாரோ அதை பாலோ பண்ணினேன். டைரக்டர் மைண்ட்ல இருக்குறதை மட்டும் ரெஃபரன்ஸ் எடுத்துக்கிட்டு அதை வெச்சு வொர்க் பண்ணியிருக்கேன். மொடர்ன், அப்புறம் நம்ம ஊர் பொண்ணுன்னு ரெண்டு விதமான ரோல் இதுல.

படத்துல உஷா உதுப் மேம் எனக்கு பாட்டியா நடிச்சிருக்காங்க. என்னோட அஞ்சு வயசுல உஷா மேமை முதல் முறையா பார்த்தேன். அதனால எனக்கு ஒரு ஸ்பெஷல் பாண்ட் அவங்ககிட்ட இருக்கு. ஷூட்டிங் டைம்ல ரொம்ப சந்தோஷமா இருந்தேன். பெமிலி மாதிரி என்னைப் பார்த்துக்கிட்டாங்க. அவங்க கூட வேலை செஞ்சது எனக்குப் பெரிய அனுபவம். அவங்க ஒரு நடிகையா இந்த வயசுலயும் கத்துக்க ரெடியா இருக்காங்க. ரொம்ப கூலா இருந்தாங்க. வாழ்க்கைல சினிமா பத்தி இன்னும் படிச்சிட்டு இருக்காங்க. ரொம்ப மேஜிக்கான பவர்புல் லேடி உஷா மேம்" என்றார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7